# வைகறை வெளிச்சம்


ஆசிரியர் **மு.குலாம் முஹம்மது**

Volume-15
Issue-8

ஆகஸ்ட்-2022 (முஹர்ரம்-1444)

விலை ரூ. **40 /-**





## தேசப் பிரிவினை
# யாரால் யாரால்?

## கஷ்மீரில் பதகடை காயாத பண்டிட்கள்

## வரலாறு படைத்த அல்ட் நியூஸ் ஜுபைர்

**முஃமின்களே! நியாயத்தை நிலை நாட்டுவதற்காக அல்லாஹ்வுக்கு நீங்கள் உறுதியான சாட்சியாக இருங்கள், எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள வெறுப்பு நீதி செய்யாமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீதி செய்யுங்கள்; இதுவே (தக்வாவுக்கு) - பயபக்திக்கு மிக நெருக்கமாகும்; அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை(யெல்லாம் நன்கு) அறிந்தவனாக இருக்கின்றான்.**

(5:08)

தேசப் பிரிவினை யாரால்? யாரால்? - 4

தேசப் பிரிவினைக்கு எதிராக ஜின்னா - 10

தேசப் பிரிவினையைப் பற்றி அரசியல் தலைவர்கள் - 17

மறைத்து வைக்கப்பட்ட ஆசாத் ஆவணங்கள் தரும் உண்மைகள் ! - 20

ஃபாசிஸ்டுகள் அன்று செய்த சதியும் தேசப் பிரிவினையும் - 25

இந்து மகா சபையின் பிடிக்குள் காங்கிரஸ் - 27

வரலாறு படைத்த அல்ட் நியூஸ் ஜூபைர் - 31

பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள் - 37

மண்டியிட்டு மன்னிப்புக் கேட்கிறேன்... வரலாறு படைத்த சாவர்க்கரின் கடிதம் - 41

பகடை காயாக பண்டிட்கள் பா.ஜ.க-வின் அரசியல் - 47

வீரமகள் டீஸ்டா செட்டல்வாட் - 51

கோடையும் குழந்தைகளும்..! - 57

தலையங்கம் - 60

குரங்கு அம்மை பரவல் - ஓர் எச்சரிக்கை - 61

**வைகறை வெளிச்சம்**

ஆகஸ்ட்-2022 முஹர்ரம்-1444

ஆசிரியர்
**மு.குலாம் முஹம்மது, M.A., Journalism & Communication**

துணை ஆசிரியர்
**கே.எம்.இல்யாஸ் ரியாஜி, M.A.,**

All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts Only

http:/www.facebook.com/vaigaraivelicham

**தனி இதழ்: ரூ.40/-**
**ஆண்டுச் சந்தா**
**உள் நாடு: ரூ.480/-**
**வெளி நாடு: ரூ.5000/-**

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர் **DARUL ISLAM FOUNDATION TRUST** என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

**VAIGARAI VELICHAM**
52/1, Mannady Street, Room# 07, Mannady, Chennai - 600001.
+91 81481 29887 | Email: darultrust@yahoo.com | Web: www.darultrust.in

# தேசப் பிரிவினை

# யாரால் யாரால் ?



நாம் வெளியிடும் பல ஆய்வுக் கட்டுரைகளிலும் ஓர் விஷயத்தைத் தெளிவு படுத்தி வருகின்றோம். அது தேசப் பிரிவினையின் முதல் தளகர்த்தர்கள் இன்றைய இந்துத்துவாவின் அன்றைய தளகர்த்தர்களும் அவர்களின் பின்தோன்றல்களுந்தான் என்பதே.

**வங்காள பிராமிணிஸ்ட்டுகள்**

*1800களிலேயே நாட்டை கூறுபோடும் திட்டத்தை வங்காள நாட்டு பிராமிணிஸ்ட்டுகள் தாம் முதன் முதலில் முன் வைத்தார்கள். 1) ராஜ் நாராயணன் பாசு, 1826-1899 2) அவருடைய நண்பரும் சீடருமான நக்பா கோபால் மித்ரா 1840-94, என்பவர்.*

வரலாற்று ஆசிரியர்கள் இவர்களை “The Co-Fathers of "Two Nation Theory and Hindu Nationalism in India” என்கிறார்கள்.

Souce : Subrang India 16, May-2018

அதாவது இவர்கள் இருவரும்தான் தேசப் பிரிவினையின் முதல் இணை தந்தைகள்.

இந்த இருவரும் தேசப் பிரிவினைக்காக ஓர் அமைப்பை உருவாக்கினார்கள். அதன் பெயர் “Maha Hindusamithi” மகா இந்து சமிதி. இதனை அகில இந்திய இந்து அமைப்பு - All India Hindu Association என அழைக்கலாம். இதுதான் இன்றைய இந்துத்துவ அமைப்புகளின் முன்னோடி.

இந்த அமைப்பின் மூலம் அவர் இந்து மதமே சிறந்தது - உயர்ந்தது என்ற பிரச்சாரத்தைச் செய்து வந்தார்கள். இந்தப் பிரச்சாரம் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது. இதன் உறுப்பினர்கள் அனைவரும் ஜாதிய அடுக்கு முறையில் அழுத்தமான நம்பிக்கையும், பிடிப்புமுடையவர்கள்.

இதில் அகப்பட்டவர்களைக் கொண்டு இதனினும் சற்று பெரிய அமைப்பு ஒன்றை உருவாக்கினார்கள். இதன் பெயர் பாரத் தர்மா மகா மண்டல் - இதனை இந்து மகா சபையின் முன்னோடி எனலாம். (A Precursor of Hindu Mahasabha) Sabrag India, May, 16, 2018.

இந்த அமைப்பின் மீது ராஜ் நாராயணனும் நாபா கோபால் மித்ராவும் அழுத்தமான நம்பிக்கைக் கொண்டவர்களாக இருந்தார்கள். இவர்கள் இந்த இந்து அமைப்புகளின் மூலம் இந்தியாவில் ஆரிய தேசம் An Aryam Nation in India ஒன்றை உருவாக்கலாம் என நம்பினார்கள். Times of India, Edit - Sangh Triplespean Aug.16, 2002. Sabrang India, May-16, 2018.

இவர்களின் ஆரிய ஆதிக்க வெறி இந்தியாவோடு நிற்கவில்லை. மொத்த உலகமும் உள்ளடக்கியது. இந்தப் பிரச்சாரத்தை வலுப்படுத்திட நபா கோபால் மித்ரா வருடந்தோறும் ஒரு மாநாட்டை நடத்தினார். இதற்கு வருடந்தர இந்து மாநாடு “Annual Hindu Mela” எனப் பெயர் சூட்டினார். இந்த மாநாடு பெங்கால் வருடம் - வங்காளத்து

வருடத்தின் கடைசி நாளில் நடந்தது. (ஆதாரம் - R.C. Majumdar எழுதிய History of Indian Freedom Struggle, Pages 295-296)

- வாசகர்கள் கவனிக்க ; வரலாற்று ஆய்வாளர்கள் பின்வரும் உண்மையை வரைஇட்டுக் காட்டுகின்றார்கள். Nabha Gopal Forestalled Jinna's Theory of Two Nations by More than Hala Centuary)

இதன் பொருள் - நபா கோபால், ஜின்னா அவர்கள் தேசப்பிரிவினையை பேசுவதற்கு, அரை நூற்றாண்டிற்கு முன்பே '50 ஆண்டுகளுக்கு முன்பே) தேசப் பிரிவினையைப் பேசினார். (ஆதாரம் R.C. Majumdar R.C. Three Phases of India's Struggle for Freedom) Bombay : Bharatiya VIdya Bhavan (1961) P.8.

இவர்கள் தேசப்பிரிவினையை 1890களிலேயே பட்டித் தொட்டிகளிளெல்லாம் பிரச்சாரம் செய்துக்கொண்டிருந்தார்கள்.

### ஆரிய சமாஜ் தேசப் பிரிவினையின் அடுத்த பிரச்சார பீரங்கி

ஆரிய சமாஜ், வட இந்தியாவில் மிகப்பெரிய பிரச்சாரம் ஒன்றை கட்டவிழ்த்துவிட்டது. அதை முழு மூச்சாக நின்று செய்தவர் ஆரிய சமாஜ்-ஐ சார்ந்த பாய் பிரம்மாநந்த் (1876-1947) என்பவர்.

பாய் பரம்மாநந்த் அவர்களின் பிரச்சாரத்தின்படி Hindu and Muslim Communities in India were, in fact two different nations" - "Sabrang India" May-16, 2018 அதாவது இந்தியாவில் வாழும் இந்து - முஸ்லிம் சமுதாயங்கள், உண்மையில் இரண்டு தேசியங்கள்.



பாய்
பரம்மாநந்த்

பிரம்மானந்தா ஏராளமான இலக்கியங்களைப் படைத்தார். அவற்றில் இந்தக் கருத்திற்கு மிகவும் அழுத்தம் தந்தார். அவருடைய கணக்குப்படி முஸ்லிம்களை இடமாற்றம் செய்திட வேண்டும். இதில் வேடிக்கையும் வேதனையும் என்னவெனில், இவர் இந்து மகாசபையிலும் இந்திய தேசிய காங்கிரஸ்-இலும் அங்கம் வகித்தார். அவருடைய கணிப்பின்படி இந்திய முஸ்லிம்களை பின்வருமாறு ஆப்கானிஸ்தோடு இடமாற்றம் செய்திட வேண்டும்.

சிந்து பகுதிக்கு அப்பால் உள்ள பகுதி இணைக்கப்பட வேண்டும், இத்துடன் North West Frontier Province என்ற வட மேற்கு பகுதியையும் இணைத்து ஒரு பெரும் முசல்மான் சாம்ராஜ்யத்தை உருவாக்கிட வேண்டும். அங்குள்ள இந்துக்கள் வெளியே வந்துவிட வேண்டும். அதே நேரத்தில்இந்தியாவின்இதரபகுதிகளில்வசிக்கும் முஸ்லிம்கள் அங்கே சென்று விட வேண்டும்.

Source : Paramanand Bhai in Pamphlet "The Hindu National Movement" CTEO in B.R.Ambedkar, Pakistan or Partition (Bombay Government of Maharashtra 1990) 35-36 FIrst Publicaton Dec, 1940. Thackers Publishers Bombay.

இப்படி தேசப்பிரிவினையை 'பாய்' பரம்மானந்தா பிரசுரம் போட்டு பட்டித் தொட்டியெல்லாம் பிரச்சாரம் செய்தது, 1908-1909களில். அதாவது, ஜின்னா பிரிவினையைப் பற்றி பேசுவதற்கும், சிந்திப்பதற்கும், 40 ஆண்டுகளுக்கு முன் பிரிவினையைத் திட்டத்தோடும், வரைபடத்தோடும் முன்னே வைத்தவர்கள், ஆரிய சமாஜ்-ஐ சார்ந்த பாய் பரம்மானந்தா.

இவரும் இவருடைய ஆதரவாளர்களும் திட்டமிட்டே, காங்கிரஸ் கட்சிக்குள் ஊடுருவி தங்கள் தேசப் பிரிவினையை செயல்படுத்திட முழு மூச்சாக உழைத்தார்கள்.

அன்றைக்கும், இன்றைக்கும் தேசப் பிரிவினைக்கு இவர் தந்த திட்டங்கள், முதிர்ந்த முட்டாள்தனத்தை வெளிப்படுத்திடும். ஆனால், அந்த முட்டாள்தனத்தை தொடர்ந்து பிரச்சாரம்

செய்து கொண்டிருந்தார்கள்.


இவர்களுக்கு இஸ்லாத்தைக் கண்டால் ஒருபெரும் ஒவ்வாமை. காரணம், ஒரு Egalitarian System ஒரு சமத்துவத்தை - மனிதர்கள் அனைவரும் சமம் என்ற கொள்கையை செயலில் காட்டிய மார்க்கம். அதனால், அமுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்கள், தொடர்ந்து இஸ்லாத்தில் இணைந்துகொண்டே இருந்தார்கள். இவர்களோ, (அதாவது தேசப் பிரிவினையை உரக்க முழங்கியவர்கள்.) ஜாதிய அடுக்கு முறையின் தீவிர ஆதரவாளர்களாக இருந்தார்கள். அத்தனை பேரும் உயர்ஜாதிக் காரர்களாகவுமிருந்தார்கள்.

இந்து மகாசபா - இந்த மகாசபாவை, இதற்கு முன்னர் நாம் சுட்டிக்காட்டிய அமைப்புகளான ஆரிய சமாஜ், இந்து பாரத் தர்மா சமிதி - இந்து மகா மண்டல் ஆகியவை, பெற்றெடுத்தப் பிள்ளை எனலாம். இது 1915-இல் தொடங்கப் பெற்றது. இந்தச் சபையை தொடங்கியவர்கள். அப்போது காங்கிரஸ் கட்சிக்குள் தங்களை நிலைநிறுத்தி இருந்த சாவர்க்கர், பண்டிட் மதன் மோகன் மலாவியா, இன்னும் லாலா லஜ்பத் ராய். இதற்கான முயற்சிகள் 1910இல்தான் தொடங்கின. அதுவும் அலகாபாத்தில் நடந்த காங்கிரஸ் (கூட்டத்தில் Session) தான் தொடங்கப்பட்டன.

ஆனால், கருத்துக் குழப்பங்களால் இந்த அமைப்பை முதலில் செயலில் கொண்டுவந்திடவில்லை. 1913-இல் பஞ்சாப் இந்து சபா நிறைவேற்றிய தீர்மானத்தின் கீழ்தான் இந்த அமைப்பு வடிவம் பெற்றது. 13, பிப். 1915, 17, பிப், 1915-இல் ஹரித்துவாரில் நடைபெற்ற கும்ப மேளாவில்தான் இறுதி வடிவம் பெற்றது. இந்தக் கும்பமேளாவைப் பயன்படுத்தி ஒரு மாநாடும் நடத்தப் பெற்றது.

இந்த மாநாட்டில்தான் இந்து மகாசபை உருவானது. இந்த மாநாட்டில் காந்திஜியும் சுவாமி சரதானந் அவர்களும் கலந்துகொண்டு இந்த மகா சபை உருவாகிட தங்கள் ஆதவைத் தந்தார்கள்.

ஆக, காங்கிரஸ்-ஐ இந்துத்துவ தீவிரவாதிகள் நன்றாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். அவர்களில் பலர் காங்கிரஸ்-இன் முக்கியப் பதவிகளிலும், இந்து மகா சபையின் முக்கியப் பதவிகளிலும் இருந்தார்கள்.



லாலா
லஜ்பத்ராய்

இவர்களால் காங்கிரஸ் அன்றே ஒரு வகுப்புவாத கட்சியாகவும், இந்து மகாசபையின் செயற்களமாகவும் ஆகிப்போனது.

**லாலா லஜ்பத்ராயின் திட்டம் -**
**Lajpatrai : 1865-1928**

இந்து மகா சபையின் அமைப்பு நிர்ணயச் சட்டத்தை எழுதிய லாலா லஜ்பத்ராய், இந்தியாவை இப்படிப் பிரிக்க வேண்டும் எனத் திட்டம் தந்தார். இது ஜின்னா பிரிவினையைப் பற்றிப் பேசுவதற்கு 16 ஆண்டுகளுக்கு முன்னர் லஜ்பத்ராய் தந்த திட்டம். டிசம்பர்-14,1924-இல் The Tribune என்ற இதழில் அவரே எழுதியது.

என்னுடைய திட்டத்தின்கீழ் இந்தியா நான்கு மாநிலங்களைக் கொண்டிருக்கும்.

1. பத்தான் பிரதேசம். அதாவது, வடமேற்கு எல்லைப் பகுதி, 2) மேற்கு பஞ்சாப், 3) சிந்து பகுதி 4) கிழக்குப் பஞ்சாப்

இன்னும் எங்கெல்லாம் முஸ்லிம்கள் அடர்த்தியாக வாழுகின்றார்களோ அவர்களையெல்லாம் அங்கே ஒரு (மாநிலமாக) பகுதியாக ஆக்கிட வேண்டும். இங்கே ஒன்றைத் தெளிவாகத் தெரிந்திட வேண்டும். அது ஓர் ஒன்றுபட்ட இந்தியா அல்ல. மாறாக, இதன்பொருள் தெளிவான தேசப் பிரிவினை. ஒன்று முஸ்லிம் இந்தியா, இன்னொன்று முஸ்லிம் அல்லாதவர்கள் இந்தியா.

“Lala Lajpat Rai in the Tribune, Dec-14,1924 : An quoted in Front Line, Dec-2002

*முஹம்மத் அலி ஜின்னா, 1940 மார்ச்,23 லாகூர் தீர்மானத்தைப் பற்றிச் சிந்திப்பதற்கு முன்னால், 1890 முதலே இந்துத்துவ வாதிகள்யெல்லாம் தேசப் பிரிவினையை பிரச்சாரம் செய்து கொண்டிருந்தார்கள்.*

இந்தியாவின் புனரமைப்பு ஆணையர் என அறியப்பட்ட H.V. Hodson- ஹச்.வி.ஹோட்சன்- இடம் சுண்டிரிகார் (Chundriga) என்பவர் ஏப்ரல், 1940-இல் இப்படிக் குறிப்பிட்டார்.


The object of Lahore Resolution was not to create ulsars but to achieve two nations welded into united inida on the basis of equality. It was, he add, an alternative to majority rule, not a bid to destroy India’s unity.

அதாவது, "லாகூர் தீர்மானத்தின் நோக்கம், பிரிவினையை ஏற்படுத்துவது அல்ல. ஆனால், இரண்டு தேசங்களை உருவாக்குவது. அவை, ஒன்றுபட்ட இந்தியாவுக்குள் இருக்கும். அது சமஉரிமைகளின் அடிப்படையில் இருக்கும். அது பெரும்பான்மை ஆட்சிக்கு மாற்றாக இருக்கும். இந்தியாவின் ஒற்றுமையை ஒரு சிறிதும் பாதிப்ப தற்காக அல்ல'' Fl. Dec-2002

**ஷியாம் பிரசாத் முகர்ஜி - 6 July,-23 1953**

காலம் முழுவதும் காங்கிரஸ் இந்து மகா சபையின், சுருங்கச் சொன்னால் இந்துத்துவ வாதிகளின் பிடியிலிருந்து என்பதன் இன்னொரு எடுத்துக் காட்டுத்தான் ஷியாம் பிரசாத் முகர்ஜி, 1943-1946 வரை இந்து மகா சபையின் தலைவராகவும் இருந்தார். இவர் பண்டித நேருவின் அமைச்சரவையில் அமைச்சராகவும் இருந்தார். நேரு சிறுபான்மையினர் பாதுகாப்புப் பற்றி அதிகமாகக் கவலைப்படுகின்றார் என்பதால் நேருவைப் பிரிந்து RSSஇல் இணைந்தார். குறிப்பாக நேரு லியாகத் அலீகான் ஒப்பந்தத்தை எதிர்த்து நேருவின் அமைச்சரவையில் இருந்து வெளியேறினார். நேரு லியாகத் அலீகான் ஒப்பந்தம் என்பது பாகிஸ்தானில் உள்ள சிறுபான்மையினருக்கு அரசு பாதுகாப்பு - இந்தியாவிலுள்ள முஸ்லிம் சிறுபான்மையினருக்கு அரசு பாதுகாப்பு பற்றியது.

பிறகு இன்றைய, பாரதீய ஜனதா கட்சியின் முன்னோடி, பாரதீய ஜனதா கட்சியை 1951இல் ஸ்தாபித்தவரும் அவர்தான். அப்போது அவர்



ஷியாம்
பிரசாத் முகர்ஜி

ஆர்.எஸ்.எஸ். என்ற அமைப்பின் தீவிர உறுப்பினர்.

தேசப் பிரிவனை - இந்து முஸ்லிம் பிளவு - பிரிவு, இவற்றின் தோற்றம் மேற்கு வங்கம் என்றால் அது மிகையாகாது. அங்கே கூக்ஸி மாவட்டத்தில் பிறந்தவர்தான் ஷியாம் பிரசாத் முகர்ஜி. தேசப் பிரிவினையை இந்து மகாசபை, ஆர்.எஸ்.எஸ். ஆகியவற்றின் அணியில் நின்று ஆதரித்தவர். அதனை பயங்கரமாக பிரச்சாரம் செய்தவர். முஸ்லிம்கள் Should pack their Bag and baggages and should set out for Pakistan எனப் பிரச்சாரம் செய்தவர். ஒரு கட்டத்தில் இந்தியாவைப் பிரிக்கின்றீர்களோ இல்லையோ கிழக்கு வங்காளத்தைப் பிரித்தே ஆக வேண்டும் என்றார். இந்த அளவுக்கு நாட்டை பிளந்து தங்கள் ஆதிக்கத்தை நிலை நாட்டிக்கொள்ள முயற்சிகளை மேற்கொண்டார்.

**சாவர்க்கர்**

இவர் தேசப் பிரிவினை கொள்கையை தான் எழுதிய ‘ஹிந்துத்துவா’ என்ற நூலில் முறையாக வெளியிட்டார். இது 1924ஆம் ஆண்டில் வெளி வந்தது. அன்றுவரை அவர் செய்து கொண்டிருந்த பிரச்சாரத்திற்கு இந்த இந்துத்துவா நூலில் முழு வடிவம் தந்திருந்தார்.

அதாவது முஹம்மத் அலீ ஜின்னா தேசப் பிரிவினையைப் பற்றிப் பேசுவதற்கு 17 ஆண்டு



சாவர்க்கர்

களுக்கு முன்னரே அதனை கடுமையாகப் பிரச்சாரம் செய்தவர் சாவர்க்கர். அதே தொனியிலும், தோரணையிலும், சாவர்க்கர் இப்படிக் குறிப்பிட்டார். பல நூற்றாண்டுகளாக, ஆங்கில ஆட்சி, முஸ்லிம்கள் ஆட்சிகளுக்குப் பின் ஓர் இந்து ராஜ்யத்தை அமைக்க காத்திருக்கின்றோம். (பக்.53)

சாவர்க்கர் பச்சையான பாசிஸ்ட்டாக இருந்தார். அவர் ஜெர்மனியில் ஹிட்லரால் கொலை செய்யப்பட்ட யூதர்களோ. இந்தியாவில் வாழும் முஸ்லிம்களை ஒப்பிட்டார். இவர்கள் ஒன்றுபட்ட ஓர் சமுதாய அமைப்பில் இருக்கும் சட்டத்திற்கு அப்பாற்ப்பட்டவர்கள், இவர்கள் அதிகப்படியான தேசங்களை நேசிப்பவர்கள். (அதாவது இவர்கள் வேறு தேசபக்தி உள்ளவர்கள்)

ஜெர்மனியின் ஹிட்லர் - ஆரியன் கலாச்சாரத்தை உயிர்ப்பிக்கப் போகின்றேன் எனச் சொல்லியபோது, அதனை அதிக உற்சாகத்தோடு இந்து மகா சபையும், சாவர்க்கரும் வரவேற்றார்கள். இதன் அடையாளமாக "சுவாஸ்திக்கா' என்ற இலஞ்சினையை அறிமுகப்படுத்தியபோது அதை இந்தியாவில் தூக்கிப் பிடித்தார்கள்.

இன்னொரு விதத்தில் சொன்னால், இவர்கள் ஜெர்மானியே ஆரிய இனத்தோடு தொடர்புடையவர்கள் என்பதை நிரூபித்தார்கள். பேரறிஞர் அண்ணாவின் சொற்களில் சொன்னால், வந்தேறிகள், ஏமாந்தக் காலத்தில் ஏற்றம் கொண்டவர்கள்.

கஸாபோரி என்ற எழுத்தாளர் அன்றே (ஹிட்லரின்) நாஜி பிரதிநிதிகளுக்கும், சாவர்க்கருக்குமிருந்த தொடர்புகளை நுணுக்கமாகச் சுட்டிக்காட்டினார். அதேபோல் நாஜி பிரதிநிதிகள் இந்து மகா சபையுடன் நெருங்கிய தொடர்புகளை கொண்டவர்களாக இருந்தார்கள்.

ஜெர்மன் நாட்டு னப்படுகொலையாளர்கள் ஜெர்மனியில் வெளிவந்த நாஜி பத்திரிகையில் Voikischer,Beobatcher-"வால்கிச்சர்பியோபச்சர்", சாவர்க்கரின் பேச்சுக்களை ஜெர்மனியில் வெளியிட்டார்கள். அதற்கு பக்தியாக, பாசிச நாஜி தத்துவங்களை மராட்டி மொழியில் சாவர்க்கர் வெளியிட்டார். ஹிட்லர், "மெயின் கோம்" என்ற நூலை வெளியிட்டபோது, அதனை இந்தியாவில் முதன் முதலில் பெற்றவர்களில் ஒருவர் சாவர்க்கர். இதனை, கிருஸ்தோபர் ஜெபர்லாட் என்ற ஆய்வாளர் வெளியிட்ட பல நூல்களிலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஹிட்லர் யூதர்களைக் கொலை செய்ததை ஏற்றுக்கொண்ட சாவர்க்கர் பின்னர், பாலஸ்தீனில் இஸ்ரேலிய யூதர்கள், முஸ்லிம்களைக் கொலை செய்வதையும் ஏற்றுக்கொண்டார். அரபு உலகத்திற்கெதிராக ஓர் வலுவான இராணுவ இஸ்ரேல் வேண்டும் என்றார். (ஆதாரம் - Economic and Political Weekly, January 29,2000. Page-218-228)

இங்கே நாம் கவனிக்க வேண்டியது என்னவெனில் இஸ்ரேலின் தீவிரவாதத்தையும், அதன் படுகொலை வழிமுறைகளையும் இன்றளவும் அப்படியே பின்பற்றி வருகின்றார்கள் இந்துத்துவா பாசிஸ்ட்டுகள். இஸ்ரேலிடமே இவர்கள் பயற்சிகளைப் பெறுகின்றார்கள்.

இந்தியாவில் ஓர் இந்து ராஷ்ட்ராவை அமைக்க குண்டுகள் வைத்து வெடிக்கச் செய்து பழியை முஸ்லிம்கள் போடும் வழிமுறைகளை அங்கேதான் கற்றார்கள். அதற்கெல்லாம் இஸ்ரேல் கேட்டப் பணத்தைக் கொடுத்தார்கள்

அபிநவ்பாரத் என்ற தீவிரவாத அமைப்பு ஒரு இந்து ராஷ்ட்ராவின் அலுவலகத்தை இஸ்ரேலின் தலைநகராகிய டெல்அவீவில் தொடங்கி இருந்தது. அங்கிருந்து கொண்டு இந்தியாவின் மீது ஒரு நீண்ட தீவிரவாத தாக்குதலை நடத்திக் கொண்டே இருந்தது. விரிவான தகவல்களுக்கு கர்கரேயைக் கொலை செய்தது யார்? இந்திய தீவிரவாதத்தின் உண்மை முகம் என்ற நூலைப்

படிக்கம். அதேபோல் புரோகித்-இன் லேப்டாப்பி லிருந்து என்ன? என்ற நூலைப் படிக்கவும். அனைத்தும் வேர்கள் வெளியீட்டகத்தின் நூல்கள்.



**அம்பேத்கர்**


சாவர்க்கரின் ஆதிக்க மனநிலையை அதாவது பிராமிணிஸ்ட்டு மனநிலையை டாக்டர் அம்பேத்கர் அவர்கள் இப்படிக் கூறினார்கள்.

Mr. Savarkar will not allow the Muslim Nation to be Co-Equal in authority with the Hindu Nation. He want the Hindu Nation to be dominart nation and the Muslims to be the servient nation: (Pakistan or Partition of India, Page-31, and 133)

“இதன் பொருள், சாவர்க்கர், முஸ்லிம்கள் அதிகாரத்தில் பங்குகொண்டு சம அதிகாரத்தோடு இருக்க அனுமதிக்கவே மாட்டார். அவர் இந்து சமுதாயமே அதிகாரம் கொண்ட சமுதுாயமாக இருந்திட வேண்டும், முஸ்லிம்கள் சேவகம் செய்யும் சமுதாயாக இருந்திட வேண்டும் என விரும்பினார்.”

காங்கிரசோடும் தன்னுடைய இந்து மகா சபையோடும் பயணம் செய்த,

முஹம்மத் அலீ ஜின்னா ஏன் சம உரிமை களைக் கோரினார்? அதில் உறுதியாக இருந்தார்? என்றால், அவர் விடுதலைக்காக லட்சக்கணக்கான உயிர்களை தியாகம் செய்த முஸ்லிம் சமுதாயம் “Subservient - சேவகம் செய்யும் சமுதாயமாக இருந்திட வேண்டும் என்பதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும். அதில் அவர் உறுதியாக இருந் தார். ஆனால், சம உரிமைகளை உடைய ஓர் சமுதாயமாக, ஒன்றுபட்ட இந்தியாவில்தான் வாழ்ந்திட விரும்பினார். ஆனால் இந்துத்துவ வாதிகளால் தேசப் பிரிவினை அவர் மீது திணிக்கப்பட்டது. ●






# தேசப் பிரிவினைக்கு எதிராக
# ஜின்னா



**ஒரு வரலாறு நம்மைத் திகைக்க வைக்கின்றது. ஆமாம், ஒரு கட்டத்தில் முஹம்மத் அலீ ஜின்னா அவர்களும், முஸ்லிம் லீக்கும் தேசப் பிரிவினையை தவிர்க்கத் தங்களால் இயன்றதையெல்லாம் செய்தார்கள். அவர்கள் விரும்பியதெல்லாம் எல்லாவற்றிலும் சமத்துவம் சம உரிமைகள் Equality.**

*குறிப்பாக கேபினட் மிஷன் பிளானுக்குப்பின் பிரிவினையை கோருவதற்கு எந்த முகாந்திரமும் இல்லை என்றே ஜின்னா நினைத்தார். அதுவே முஸ்லிம் லீக்-இன் நிலைபாடாகவுமிருந்தது.*

*ஏப்ரல்-25,1946-இல் ஜின்னாவின் முன் இரண்டு வழிகள் திறந்துவிடப்பட்டன.*

*ஒன்று - பாகிஸ்தான் இப்போது இருப்பது போல். இரண்டு முஸ்லிம் Provinces என்ற முஸ்லிம்கள் அதிகமாக வாழும் மாநிலங்களில் முஸ்லிம்களின் ஆட்சி அமையக் கூடிய அளவில் ஓர் ஒன்றுபட்ட இந்தியா.*

"An Indian Union SuperImposed on Groups of Muslim Provinces Jinnah Rejected the first and Said he will consider the second if congress also did the same" - Front Line, Aug-2014

*ஜின்னா பாகிஸ்தானை வேண்டாம் எனத் தீர்க்கமாகச் சொல்லிவிட்டார். தான் இரண்டாவது வழியைப் பரிசீலிப்பேன். காங்கிரசும் அப்படிச் செய்தால், அதாவது காங்கிரசும் ஏற்றுக்கொண்டால் மே-12, 1946இல் ஜின்னா முன்மொழிந்தது பிரிவினையை அல்ல. மாறாக, ஓர் இந்திய ஒன்றியம். Not Pakistan, But a Confederation. ஏனையவர்கள் அழுத்தங்களைத் தந்திருந்தால் அவர் நிச்சயமாக, ஓர் ஒன்றுபட்ட இந்திய ஒன்றியத்தை ஒத்துக்கொண்டிருப்பார். உண்மையிலேயே அவர் ஒத்துக்கொண்டார். ஆமாம், அவர் கேபினட் மிஷன் பிளானை, திட்டத்தை ஒத்துக்கொண்டார்.*

*கேபினட் மிஷன் தனது திட்டத்தை மே-16, 1946-இல் அறிவித்தது. இந்தத் திட்டத்தில் பாகிஸ்தான் இல்லை. மாறாக, ஓர் ஒன்றுபட்ட இந்திய ஒன்றியத்தை அறிவித்தது. அந்த ஒன்றிய அரசின் அதிகாரம், நாட்டின் பாதுகாப்பு, வெளி நாட்டு விவகாரம் தகவல் தொடர்பு ஆகியவற்றில் மட்டும் இருக்கும். (சுருங்கச் சொன்னால் "Provinces" என்ற மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் - உண்மையைச் சொன்னால் எல்லா அதிகாரமிருக்கும்)*

This India has enormous Potential for growth. இஃது ஆற்றல்மிக்கதொரு ஒன்றியம். இதனால் ஒன்றுபட்ட இந்தியா பெருமளவில் முன்னேறிடும் வாய்ப்பைப் பெறும் என கேபினட் மிஷன் கூறியது. Front Line, Aug-2014.

ஜின்னா இந்த கேபினட் மிஷன் திட்டத்தை ஒத்துக்கொண்டார். காந்திஜி உடனேயே பிராந்தியங்களாக (பிரிப்பதை) அமைப்பதைக் கண்டித்தார். அவர் தனது எதிர்ப்பில் கடைசிவரை நிலைத்து நின்றார்.

காங்கிரஸ் கட்சி இந்தத் திட்டத்தை ஒத்துக் கொள்வதாகப் பீற்றிக் கொண்டது. ஆனால், களத்தில் மாநிலங்களைப் பிரிப்பதில் தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்கி மொத்தத் திட்டத்தையும் புதைத்திட ஆவண செய்தது.

மார்ச்சு-19,1947-இல் அதாவது பிரிவினைக்கு மூன்று மாதங்களுக்குப் முன் அன்றைய ஆங்கில ஏகாதிபத்தியத்தின் இந்திய பிரதிநிதி லார்டு வேவல் - Lord Wawell (Viceroy) லண்டனிலுள்ள இந்தியாவின் செயலாளர் "பெத்திக் லாரன்ஸ்" Pethick Lawrence என்பவருக்கு எழுதிய கடிதத்தில் இப்படிக் குறிப்பிட்டார்.

Having met Jinaah recently Colin Reid corres pondent of the Daily Telegraph, Got the Impression that he might accept the cabinet mission plan, if the congress accepted it in unequivocal terms : Mount Battern tried to secure that and failed. The congress preferred India's partition to sharing power with the Leaque in an united India. (Front Line, Aug.2014.)

இதன்பொருள் - "காலின் ரெய்ட் என்ற டெய்லி டெலிகிராப் நாளிதழின் நிருபர், ஜின்னா அவர்களை அண்மையில் சந்திந்திருக்கின்றார். அவர் ஜின்னா நிச்சயமாக கேபினட் மிஷன் திட்டத்தை ஏற்றுக் கொண்டிருப்பார். காங்கிரஸ் ஐய்யங்களுக்கு அப்பால் நின்று ஏற்றுக்கொண்டால் எனக் கூறுகின்றார். மவுண்பேட்டன் (இவர் லார்டு வேவல் அவர்களுக்குப் பின்னால், இந்தியாவின் ஆங்கில ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதி) அவர்களும் (கேபினட் மிஷன் திட்டத்தை செயல்படுத்திட முயற்சி செய்தார். அவரும் தோற்றார்."

"(யதார்த்தம்) என்னவெனில் காங்கிரஸ் லீக் (முஸ்லிம் லீக்) உடன் அதிகாரத்தைப் பகர்ந்திட, பகிர்ந்திடுவதைவிட பிரிவினையே சிறந்தது என எண்ணியது."

இந்துத்துவ வாதிகள் அன்று இரண்டு வேறுபட்ட சமூகங்கள் இருக்கின்றன. ஒன்று இந்து சமூகம், இன்னொன்று முஸ்லிம் சமூகம். இந்தியா இந்துக்களுக்கே எனப்பேசி வந்தார்கள். இவர்கள் காங்கிரஸ்-ன் முடிவுகளைக் குழப்பியதோடு அல்லாமல், ஆங்கிலேயர்களையும் விழுந்து, விழுந்து ஆதரித்தார்கள். தங்கள் திட்டத்தின் நாட்டைப் பிரித்தே விட்டார்கள்.

எப்படிக் காங்கிரஸ்-ஐ தங்கள் கிடுக்கிப் பிடிக்குள் வைத்திருக்கின்றன என்பதை தனிக் கட்டுரையாகத் தந்துள்ளோம்.

**இன்னொரு அத்தாட்சி**

பிற்றை நாட்களில், மியான் மும்தாஸ் டவுல் தானா என்ற பஞ்சாப் தலைவர் இப்படிக் குறிப்பிட்டார். இந்த பேட்டி ஜலால் என்பவருக்குக் கொடுத்தது. "ஜின்னா இந்தியாவைப் பிரிக்கும், ஒரு பாகிஸ்தானை அவர் கேட்கவில்லை. அவர் கேபினட் மிஷன் திட்டத்தையே ஆதாரித்தார். அதை காங்கிரஸ் தூள் தூளாக ஆக்கிவிட்டது. இதை Chimanlal Setalvad சிம்மன்லால் செட்டல் வாட் என்பவரும் சொல்லி இருக்கின்றார். Front Line, Aug.2014

- இந்த வரலாறுகள் எல்லாம் நிரந்தரமாகவே மறைக்கப்பட்டுவிட்டன.


Jinnah with Cabinet Mission (1946)

**இன்னொரு அத்தாட்சி**

தேசப் பிரிவினையின் எல்லாப் பகுதிகளையும் கூர்ந்து கவனித்தவர், வழக்கறிஞர் H.M. Seervai -

எச்.எம்.சீர்வை. இவர் மராட்டிய மாநிலத்தின் அரசு வழக்கறிஞர். தேசப் பிரிவினையின்போது மறைக்கப்பட்ட எல்லா தகவல்களையும் அகழ்ந் தெடுத்து ஆய்வு செய்து ஒரு நூலை எழுதுகின்றார். (தேசப் பிரிவினை சம்மந்தப்பட்ட உண்மைகள் பற்றிய தகவல்களை சுருக்கமாக இந்த இதழில் இடம்பெறச் செய்திருக்கின்றோம்). அதன்பெயர் (Partition of India, Legend and Reality) இந்தியாவின் பிரிவினை உண்மையும் பொய்யும் - இந்த நூலில், இங்கிலாந்திலுள்ள கேம்பிரிஜ் பல்கலைக் கழகத்தின் ஆய்வுத்துறையின் உறுப்பினர் : டாக்டர் ஆயிஷா ஜெலால் அவர்கள் பற்றிக் குறிப் பிடுகின்றார். டாக்டர் ஆய்ஷா ஜலால் என்பவர் லண்டனிலுள்ள டிரினிட்டி கல்லூரியில் சமர்ப் பித்த ஆய்வு ஒன்றில் இப்படிக் கூறுகின்றார்.

"It was congress that insisted on Partition it was Jinnah who was against it" Page VI

இதன்பொருள் - காங்கிரஸ்தான் தேசப் பிரி வினை வேண்டும் என அழுத்தம் கொடுத்தது. ஜின்னா தேசப் பிரிவினைக்கு எதிராக நின்றார். பக்கம் (VI) - Partition of India, Legend and Reality and Dr. Aysha Jala's Sole spokesman Jinnah, the Muslim League, and the demand for partition

### அப்படியானால் ஜின்னா பாகிஸ்தானை கேட்கவில்லையா?

கேட்டார். அதற்கும் அத்தனை ஆய்வாளரும் சொல்லும் பதில், ஜின்னா கேட்டதெல்லாம் "Parity" சமஉரிமைகள். அதனை மறுத்தால் தனிநாடு. ஆனால், கேபினட் மிஷன் பிளான் - கேபினட் மிஷன் திட்டத்திற்குப் பின் அந்தத் திட்டத்தை ஒத்துக் கொண்டார். பிரிவினையைக் கைவிட்டார். இதனை நாம் மேலே குறிப்பிட் டுள்ளோம்.

அந்நிலையில் காங்கிரஸ், இந்து மகா சபையின் கிடுக்கிப் பிடிக்குள் இருந்தது.

### இன்னொரு அத்தாட்சி

இந்தியாவில் இரண்டு தேசங்கள் இருக்கின்றன. ஒன்று இந்து, இன்னொான்று முஸ்லிம் எனத் தொடர்ந்து பிரச்சாரம் செய்யப்படுகின்றது. அதனால் தேசப் பிரிவினை வேண்டும் என சிலர் வரிந்துக் கட்டிக்கொண்டு நிற்கின்றார்களே என ஜின்னாவிடம் கேட்ட கேள்வியை மையப்படுத்தி ஜின்னா ஒரு கட்டுரையில் இப்படிக் குறிப்பிட்டார்.

"There are in India Two Nations who both must share the governance of their motherland"

பொருள் - "இந்தியாவில் இரண்டு தேசங்கள் இருக்கின்றன. இந்த இரண்டு தேசங்களும் தங்கள் தாய்நாட்டின் ஆட்சியைப் பகிரிந்துகொள்ள வேண்டும்" (ஆதாரம் - TImes and Tide of London) (Journal)

இதனை மையப்படுத்தி - ஆய்வாளர்கள் இப்படிக் குறிப்பிடுகின்றார்கள். This Implied Clearly a pact to govern a United India. The theory was aimed at asserting a claim to equality.

இதன்பொருள் - "ஜின்னாவின் இந்தச் சொற்கள் எதைக் காட்டுகின்றன என்றால், ஒன்றிணைந்த இந்தியாவை ஆட்சி செய்வதற்கான ஒப்பந்தம். இதன் நோக்கம் எல்லாவற்றிலும் சம உரிமை வேண்டும் என்பதே. (ஆதாரம் - Front Line, Dec-2002)

தமிழகத்தின் மூத்த தலைவர் கலைஞர் அவர் களுடைய ஒரு பேட்டியில் இதைத் தெளிவாகவே குறிப்பிட்டார்.

Mr. Jinnah also demonded state autunomy then, If that have been agreed to Pakistan would not have come to being

திரு. ஜின்னா அவர்களும் அன்று மாநில சுய ஆட்சியைத்தான் கேட்டார்கள். அதனை ஏற்றுக் கொண்டிருந்தால் பாகிஸ்தான் தோன்றி இருக்காது. The Times of India, Pakistan, 3-2-1996, pp-6)

ஜின்னாவின் லாகூர் தீர்மானத்தின் நோக்கம் "Parity" என்ற சமஉரிமையை கேட்பதும், அதற்கு அழுத்தம் தருவதும்தான். அதை விரும்பாதவர்கள், அவர்மீது தேசப் பிரிவினையை திணித்து விட் டார்கள். இவர்கள் உண்மையான தேசப் பக்தர்கள், தேசப் பிரிவினையை ஆதரிக்கமாட்டார்கள். தான் கேட்ட சம உரிமையை தந்து விடுவார்கள் என எண்ணிய ஜின்னா ஏமார்ந்தார் இதுதான் உண்மை.

### பல வருடங்களுக்குப் பின்னால் வெளிவந்த உண்மை

இந்தியாவைப் பிரிக்காமல் ஒன்றிணைந்த இந்தியாவாக இந்திய மக்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதில் மிகவும் குறியக இருந்தவர் ஆங்கிலேயர்களின், இந்தியப் பிரதிநிதி லார்டு


சாவர்க்கர்

வேவல் - Lord Wawell. அவர் எடுத்த எல்லா முயற்சி களையும் வீழ்த்திக் காட்டினார்கள் காங்கிரஸ்-க் குள் புகுந்த இந்து மகா சபையினர். அப்போது அவர்கள் காங்கிரஸ் கட்சியாகவே மாறி விட்டார்கள்.

லார்டு வேவல், தங்கள் இலட்சியத்திற்கு எதிராக இருக்கின்றார் என்பதனால் அவரை வைசிராய்ப் பதவியிலிருந்து தூக்கிட வேண்டும் என்பதற்காக மிகவும் உக்கிரமாக வேலை செய் தார்கள். மாற்றியே விட்டார்கள். வேவல் மாற்றப் பட்டு மவுண்ட் பேட்டன் வந்தார். காந்தி, பட்டேல், நேரு ஆகியோரும் இந்தச் சதியில் உண்டு. அந்த அளவுக்கு இந்து மகா சபையி னரின் தாக்கமிருந்தது.

மேலும் விரிவான விளக்கங்களுக்கு, Partition the Legend and Reality. by H.M.Seervai.

**தொடரும் சாவர்க்கர் கதிகள்**

வரலாற்று ஆசிரியர் ஆர். அகர்வால் அவர்களின் சொற்களால் சொன்னால்,

"From 1917 V.D. Savarkar was fairly preaching the Gospel Rashtra. He advised Hindus to capture power and establish the foundation of true Hindu Rajya. He said that india was inhabited not by a homogeneous nation but by two nations, Hindu and Muslim. The Muslims wre clearly told that there was no future for them in India except as a minority"

அதாவது, "1917 முதல் வி.டி.சாவர்க்கர் அவர்கள் ராஷ்டிரா (என்ற இந்து ராஷ்டிரா) கொள்கையை தெளிவாகவே பேசி வந்தார். அவர் இந்துக்களை, அதிகாரத்தைக் கைப்பற்றி இந்து ராஜ்யத்திற்கான அடிப்படைகளை அமையுங்கள் என ஆலோசனைவழங்கினார். அவர் சொன்னார்: இந்தியா என்பது ஒற்றை தேசமல்ல. இந்தியாவில் இரண்டு தேசங்கள் உள்ளன. ஒன்று இந்து தேசம், இன்னொன்று முஸ்லிம் தேசம் இன்னும் முஸ்லிம்களுக்கு இந்தியாவில் சிறுபான்மை யினர் என்ற அளவில் அல்லாமல் எந்தவொரு எதிர்காலமும் இல்லை"

கே.எல்.கௌபா என்ற நாடறிந்த சட்ட மேதை தன்னுடைய நூல் பாசிவ் வாய்சஸில் (Passive Voices, Published in 1973) இப்படிக் குறிப் பிடுகின்றார். (இந்நூல் 1973ல் வெளிவந்தது)

"Savarkar was not alone in the line of thinking. The same ideology had found favour with many Hindu leaders even before Savarkar became widely recognised as the uncrowned king of the Hindus. Sankarachar Kurkoti, a one time leader and president of the Hindu Mahasaba proclaimed that, india belongs to Hindus and the Muslims, who are only guest should learn to behave like guests."

அதாவது "சாவர்க்கர் மட்டுந்தான் இந்தச் சிந்தனையில் இருந்தார் என்பதல்ல. சாவர்க்கர் அவர்களுக்கு முன்பே பல இந்துத் தலைவர்கள் இந்தக் கொள்கையை (பிரிவினையை) உடையவர் களாக இருந்தார்கள். சங்கராச்சார் குர்தோகி என்ற இந்து மகாசபையின் தலைவர் இப்படிப்


ஹர்தயாள்

பிரகடனப்படுத்தினார் "இந்தியா இந்துக்களுக்கே சொந்தம். முஸ்லிம்கள் இங்கே விருந்தாளிகள்தாம். அவர்கள் விருந்தாளிகள் போல் நடக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்"

**ஹர்தயாள் என்பவர் இப்படிக் கூறினார்**

"A joint Hindu Muslim sate is sheer nonsense which under no circumstance can exist."

அதாவது, "ஒன்றிணைந்த, இந்து முஸ்லிம் நாடு என்பது தெளிவான முட்டாள்தனம். எந்தச் சூழ்நிலையிலும் அப்படியொன்று இருக்க முடியாது."

Mairay Vichar says "I declare that the future of the Hindu Race of Hindustatn and Punjab rests on these four pillars : 1. Hindu Sang athan, 2. Hindu Raj, 3. Shuthi of the Muslims, 4) The conquested shuthi of the Afghanisthan."

**அதாவது, மெய்ரே விசார் என்பவர் இப்படிக் குறிப்பிடுகின்றார் :**

'இந்து இனம் மற்றும் ஹிந்துஸ்தான், பஞ்சாப் ஆகியவற்றின் எதிர்காலம் நான்கு தூண்களின் மேல் நிற்கின்றது என நான் பிரகடனப்படுத்துகின்றேன். 1. இந்து சங்காதனம், 2. இந்து ராஜ்யம், 3. முஸ்லிம்களைச் சுத்தப்படுத்துவது, 4) ஆஃப்கானிஸ்தானைக்கைகைப்பற்றிச் சுத்தப்படுத்துவது.'

சுத்தப்படுத்துவது என்பதற்கு அவர்களை இந்துக்காளக மாற்றுவது என்று பொருள்.

இப்படி இந்திய விடுதலைக்கு எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னால் இந்துத்துவா பேசியவர்களால் பிரிவினை பிரகடனப்படுத்தப்பட்டுக் கொண்டே இருந்தது.

இந்தக்காலக்கட்டங்களிலெல்லாம், முஸ்லிம்களும், ஜின்னாவும், "நாம் பிளந்துபட்டால் வீழ்ந்து விடுவோம் ஆங்கிலேயன் நம்மை நிரந்தரமாக ஆதிக்கம் செலுத்துவான்" என்றே பேசினார்கள். ஜின்னா அவர்கள் ஆங்கிலேயர்களுக்கு எதிராக இந்து - முஸ்லிம் ஒற்றுமை மிகவும் முக்கியம் என்பதை மூச்சு விடாமல் வலியுறுத்தினார்கள்.

காங்கிரஸும் காந்திஜியும், நேருவும் இந்தச் சிந்தனையில் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதில் ஜின்னா அவர்கள் மிகவும் கவனமாக இருந்தார்கள். என்னதான் முயன்றாலும் இந்தத் தீமையிலிருந்து காங்கிரஸையும், காந்திஜி அவர்களையும் பாதுகாக்க இயலவில்லை.

1906ல் ஜின்னா அவர்கள் காங்கிரஸில் இணைந்தார்கள். அவர் இணைந்ததை எச்.எம். சீர்வை அவர்கள் இப்படி வர்ணிக்கிறார்கள்.

"His entry into congress as a Nationalist Muslim in 1906."

"அவர் காங்கிரசில் 1906 ஒரு தேசிய முஸ்லிமாகவே இணைந்தார்." அதாவது ஜின்னா அவர்கள் அரசியலில் பிரவேசிக்கும் முன்பே இங்கு பிரிவினைப் பிரச்சாரம் செய்யப்பட்டது.

இந்தியாவின் விடுதலையில் ஜின்னா அவர்கள் காட்டிய ஆர்வம், பிரிவினையைப் பேசுவோரிடமிருந்து இந்தியாவைக் காப்பதில் அவர் காட்டிய ஆர்வம், இந்து - முஸ்லிம் ஒற்றுமையில் அவர் காட்டிய ஆர்வம் இவையெல்லாம் அவர் காங்கிரஸில் ஆதிக்கம் செலுத்த வழி வகுத்தது. இதனைக் குறிப்பிடும் கே.எம். முன்ஷி அவர்கள் இப்படிக் குறிப்பிடுகின்றார்.

"In a sence Jinnah dominated the congress and the League at that time. He had played a key role in preparing a draft Constitution for India and getting it adopted by the sessions, both of the Congress and of the League."

அதாவது, "அப்போது ஜின்னா அவர்கள் காங்கிரஸிலும், முஸ்லிம் லீகிலும் ஒரு வகையில் ஆதிக்கம் செலுத்தினார்.

இந்தியாவுக்கு ஒரு அரசியல் அமைப்புச் சட்டத்தை வரைந்து தருவதில் அவர் முக்கிய பங்காற்றினார். அத்தோடு காங்கிரஸ், முஸ்லிம் லீக் ஆகியவற்றின் மாநாடுகளில் அதற்கான ஒப்புதலை வாங்குவதில் பெரும் பங்காற்றினார்."

ஆனால், தொடர்ந்து காங்கிரஸ் தலைவர்களின் போக்கு முஸ்லிம்களின் மனதில் ஐயப்பாடுகளை கிளப்பிற்று.

1937ல் நடைபெற்ற தேர்தலுக்குப் பின் நேரு அவர்கள் முஸ்லிம் லீக் என்றொன்று இல்லை என்பதுபோல் பேசினார். முஸ்லிம் லீக்கை முற்றாகப் புறக்கணித்தார். இருப்பதெல்லாம் காங்கிரஸ் ஒன்றுதான் என்றார்.

இப்படித் தொடர்ந்து காங்கிரஸ் மேற்கொண்ட நடத்தைகளால் முஸ்லிம்களால் சுதந்திர இந்தியாவில் தங்கள் நிலைமை என்னவாகுமோ என அஞ்சினர்.



முஸ்லிம்களின் மனதில் எழுந்த இநத அச்சம் தியாயமானது என்பதை அனைவரும் ஒப்புக் கொண்டார்கள்.

இந்தியாவுக்கு விடுதலை வழங்கிடத் தேவை யான அத்தனை அடிப்படைகளையும் செய்த வைஸ்ராய் வேவல் அவர்கள் இதனை ஒத்துக் கொண்டார்கள். பிரிட்டிஷ் பிரதமர் கிளமண்ட் அட்லீ இதை ஒத்துக் கொண்டார்.

கே.எம். முன்ஷி அவர்கள் இதை ஒத்துக் கொண்டார். காங்கிரஸில் தலைவராக இருந்த அபுல் கலாம் ஆசாத் அவர்கள் ஒத்துக் கொண்டார்கள்.

முன்னர் நாம் குறிப்பிட்ட மறைக்கப்பட்ட வரலாற்றுப் பெட்டகங்களை Wavell, The Viceroy's Journal, டி.பி.பேப்பர்ஸ், India Wins Freedom என்ற அபுல் கலாம் ஆசாத் அவர்களின் மறைக் கப்பட்ட 30 பக்கங்கள் இவையெல்லாம் இந்த உண்மையை வெளிச்சம் போட்டுக் காட்டின.

Partition - The Legends and Reality by H.M. Seervai.

இப்போது இந்திய வரலாற்றை மீள்பார்வை செய்த Lorry Collins and Dominique Lapiere என்ற எழுத்தாளர்கள் இந்த உண்மையை ஒத்துக் கொண் டார்கள். Source : Freedom at Midnight.

ஒருபுறம் இந்துத்துவா பேசுவோர் பிரிவி னையைப் பிரச்சாரம் செய்தார்கள். இன்னொரு புறம், காங்கிரஸின் நடவடிக்கைகள், சுதந்திர இந்தியாவில் நமது நிலை என்னவாகுமோ என்ற அச்சத்தை முஸ்லிம்களின் மனதில் ஏற்படுத்திற்று.

இதனால் முஸ்லிம்களின் சுதந்திர இந்தியா வில் தங்களுக்குத் தகுந்த ஏற்பாடுகள் வேண்டும் என எண்ணினார்கள்.

இதற்காக சுதந்திர இந்தியாவில் எல்லா நிலை களிலும் தங்களுக்கு சம அந்தஸ்து (Parity) வேண்டும் என வேண்டினார்கள்.

இங்கே ஒன்றைக் கவனிக்க வேண்டும். இந்து மகா சபையினர் பிரிவினையை ஓர் அடிப்படைத் தத்துவமாகப் (Idology) பேசிக் கொண்டிருந்த நிலையிலும், காங்கிரஸின் நடவடிக்கைகள் முஸ்லிம்களின் மனங்களில் ஒது பாதுகாப்பற்ற நிலையை ஏற்படுத்திய நிலையிலும், முஸ்லிம்கள் பிரிவினையைக் கோரவில்லை. அவர்கள் சம மதிப்பையே (Parity) கோரினார்கள்.

முஸ்லிம்களின் இந்த கோரிக்கையை வைப் பதற்குக் கூட காங்கிரஸ் தலைவர்களின் நடவடிக் கைகள்தாம் காரணம் என்பதற்கு அடுக்கடுக்காய் பல ஆதாரங்களைக் காட்டலாம். விரிவஞ்சி அவற்றை விட வேண்டியதிருக்கின்றது.

முஸ்லிம்களின் அச்சம் நியாயமானது. அதைக் களையும் விதத்தில் ஒரு ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற முயற்சியில் வைஸ்ராய் வேவல் அவர்கள் அனேக திட்டங்களைக் கொண்டு வந்தார்கள்.



அத்தனையையும் முஸ்லிம்கள் ஒத்துக் கொண்டார்கள். ஆனால், காங்கிரஸ் ஒத்துக் கொள்ளவில்லை.

பின்னர் ஆங்கில நாட்டுப் பிரதமர் கிளமண்ட் அட்லீ அவர்கள் தன் சார்பில் அமைச்சரவை குழு (Cabinet Mission) என்றொரு குழுவை இங்கிலாந் திலிருந்து அனுப்பி வைத்தார்கள்.

இந்த அமைச்சரவைக் குழு காங்கிரஸ் முஸ்லிம் லீக் தாழ்த்தப்பட்ட பிரிவின் தலைவர் அம்பேத்கர் ஆகிய தலைவர்களுடன் பேசி ஒரு திட்டத்தைத் தயாரித்தார்கள். இந்தத் திட்டம்தான் Cabinet Mission Plan என்று அழைக்கப்பட்டது.

இந்தத் திட்டம் இந்தியாவைப் பிரிப்பதற் கல்ல. ஒன்றுபட்ட இந்தியாவில் அவரவர் உரிமை களைப் பாதுகாப்பதற்குத்தான் இதை முஸ்லிம் லீக் உட்பட அனைத்துத் தரப்பாலும் ஒத்துக் கொண்டனர்.

இந்தத் திட்டத்தை காங்கிரஸ் முதலில் ஒத்துக்கொண்டது. பின்னர் நிராகரித்தது.

இனி நமக்கு வழியில்லை என்ற அளவில் பிரி வினையை ஒரு மிரட்டலாக வைத்தது முஸ்லிம் லீக்.

இங்குள்ள காங்கிரஸார் பிரித்துக் கொடுத்து விடலாம், அதன்மூலம் நாம் எஞ்சிய பகுதியில் ஏகபோக அதிகாரம் செலுத்தலாம் என நம்பினர். சம அந்தஸ்து பிரச்னையும் முடிந்துபோகும் என நம்பினர். இதில் தொடக்க நாள் முதலே பிரிவி னையை பேசியவர்கள் தங்கள் பங்கை ஆற்றினர்.

இந்நிலையில் 1946,47 களில் நடந்த வகுப்புக் கலவரங்கள் யாரையும் அதிகம் சிந்திக்க விட வில்லை. கலவரப் பகுதிகளைப் பிரித்துவிடலாம் என்ற அளவில் வேவலுக்குப் பின்னால் வந்த மௌண்ட் பேட்டன் விரைவு படுத்தினார்.

காங்கிரஸ் ஜனநாயகத்தை ஒரு சகல வலி நிவாரணியாக அறிவித்தது. ஏனெனில் ஜனநாயகம் என்ற பெயரில் எண்ணிக்கை அடிப்படையில் முஸ்லிம்கள் எந்த வலுவான கோரிக்கையையும் வைக்கவோ வெற்றி பெறவோ முடியாது என்பதை காங்கிரஸ் அறிந்திருந்தது.

இந்நிலையில் ‘Troubled Area’ என்ற கலவரப் பகுதிகளுக்கு தனிநாடு என்ற அளவில் நாடு பிரிந்தது. கலவரப் பகுதி அல்லாத பகுதிகள் இந்தியாவோடு இருந்தன.

இங்கே ஒன்றை நாம் கோடிட்டுக் காட்ட வேண்டும். “உங்களுக்குத் தான் பாகிஸ்தான் தந்தாகிவிட்டதே இங்கே உங்களுக்கு என்ன வேலை?’ என்ற பாங்கில் பலர் பேசுகின்றார்கள். கலவரப் பகுதிகளுக்குத் தான் தனி நாடு. மீதிப் பகுதியில் இருப்போருக்கு இது சொந்த நாடு.

# தேசப் பிரிவினையைப் பற்றி

# அரசியல் தலைவர்கள்

**திரு. இராம் மனோகர் லோகியா அவர்கள் சொன்னார்கள் :**

This for instance the opposition of Hindus to partition did not and could not make any sense for one of the forces that partitioned the country was precisely this Hindu fanaticism. Guilty Men of India's Partition : pp1




இராம் மனோகர் லோகியா

"இந்துக்கள் தேசப்பிரிவினையை எதிர்த்தார்கள் என்பது அப்போதும் இப்போதும் இல்லை. ஏனெனில் இந்தியாவை பிரித்த சக்திகளுள் ஒன்று இந்து தீவிரவாதமாகும்.

Extracted from the book "Forces behind the Partition"

**திரு. மஜூம்தார் அவர்கள் கூறினார்கள் :**

There is no doubt that the decision of congress leader was extremely unwise and it was bound to have disastrous consequences. The Muslims now fully realised



மஜும்தார்

that as a separate community they had no political prospects in future, the congress ultimatum was the signal for the parting of the ways, which by inevitable stages lead to the foundation of Pakistan.

முஸ்லிம் லீக் - காங்கிரஸ் இவற்றின் கூட்டு மந்திரி சபையை அமைக்க காங்கிரஸ் தவறிய போது, காங்கிரஸ் தலைவர்கள் செய்த முடிவு அறிவற்றது என்பதில் எந்த ஐயப்பாடும் இல்லை. அது அழிவு மிக்க விளைவுகளை ஏற்படுத்துவது. இப்போது முஸ்லிம்கள் தங்களுக்கு அரசியல் எதிர்காலம் என்றொன்று நிச்சயமாக இல்லை என்பதை முழுமையாக உணர்ந்தார்கள். காங்கிரஸ் வைத்தக் கெடு, இருவேறு வழிகள் உண்டாவதற்கான சமிக்ஞையைக் கொடுத்தது. இது பல்வேறு தவிர்க்கஇயலாத படித்தரங்களைக்கடந்து பாகிஸ்தானுக்கான அடித்தளத்தை அமைத்துத் தந்தது."

History of the Freedom Movement in INdia.
Vol-3, pp.563

**திரு. வி.பி.மேனன்** (The author of Transfer of Power in India) *அவர்கள் சொன்னது :*

If the U.P. League's offer of co-operation had been accepted, the Muslim League party would, for all practical purposes, have merged in the congress. jawaharlal;s actions gave the Muslim League in the U.P. a new lease of life.



வி.பி.மேனன்

*உத்திரப் பிரதேசத்தில் முஸ்லிம் லீக் கட்சி தந்த ஒத்துழைப்பை ஏற்றிருந்தால், முஸ்லிம் லீக் எல்லா நடைமுறை யதார்த்தங்களோடும் காங்கிரஸ் கட்சியில் இணைந்திருக்கும் ஜவஹர் லால் நேரு அவர்களின் நடிவடிக்கைகள் முஸ்லிம் லீக் கட்சிக்கு உத்திரப் பிரதேசத்தில் ஒரு புது வாழ்க்கையைக் கொடுத்தது.* Tansfer of Power in India

**முன்னாள் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் சொன்னது :**




கலைஞர்

Mr. Jinnah also demanded state uutonomy then. if that had been agreed to, Pakistan would not hae come into being.

"*திரு. ஜின்னா அவர்களும் அன்று மாநில சுயாட்சியைத்தான் கேட்டார்கள். அதனை ஏற்றுக் கொண்டிருந்தால் பாகிஸ்தான் தோன்றியே இருக்காது.*" The Times of India, Patna, (3-2-1996) pp-6

**திரு. H.M. சீர்வை** (The author of the book partitio the Legend and Reality) *அவர்கள் சொன்னார்கள் :*

Writing in 1969 Shiva Rao referred to the 1937 elections and said that it was significant that even after the elections Jinnah was not thinking of a separate state of Pakistan.



H.M. சீர்வை

*1969ல் எழுதும்போது ஷிவ ராவ் அவர்கள் 1937ல் நடந்த தேர்தலைப் பற்றிப் பேசினார். அதில், "இந்தத் தேர்தலுக்குப் பின்னரும் ஜின்னா அவர்கள் பாகிஸ்தான் என்ற தனி நாடு பற்றி சிந்திக்கவே இல்லை" என்று குறிப்பிட்டார்.*

Partition the Legend and Reality pp.21

*சர் சிமன்லால் ஸிட்டல்வாடு என்ற தாராள சிந்தனையுள்ள தலைவர் தன்னுடைய* Recollec tions and Reflections *என்ற நூலில்* Congress Parentage of Partition *என்ற அத்தியாயத்தில் பக்கம் 414இல் இப்படிக் கூறுகின்றார்*

The real parentage of the Pakistan Move ment can be traced to the Congress who by their behaviour created great distrust in the minds of the muslims of the country.

"பாகிஸ்தான் இயக்கத்தின் உண்மையான ஆதரவு எங்கிருந்து வந்தது என்பதை ஆராயும் போது அதிகாரம் தங்கள் கைகளில் வந்தபோது தங்கள் நடத்தைகளால் முஸ்லிம் மனங்களில் மிகப்பெரிய அவ நம்பிக்கையை ஏற்படுத்திய காங்கிரஸிடமிருந்துதான் என்பது தெளிவுபடத் தெரியும்."

**திரு. பந்தோபாத்யாய** (The author of the book 'Quaid-e-Azam and Creation of Pakistan', Publisher 1993) *அவர்கள் கூறியது :*

Once Jinnah said that Pakistan was not his aim. He wanted to pressurise the Congress to get concessions for Muslims.

**பண்டித நேருஜி அவர்கள் தேசப் பிரிவினைக்குப் பின் சொன்னார்கள் :**

It is difficult for me or anyone to judge of what we have done during the last year or so. we are too near to it and too initimately connected with events. may be we have made mistakes you and we, Historians, a generation or so hence, will per haps be able to judge what we have done right and what we have done wrong.

"கடந்த வருடத்தில் இன்னும் அதற்கு முற்பட்ட காலத்தில் நாம் செய்தது சரியா, தவறா என்பதை நானோ மற்றவர்களோ தீர்மானிப்பது மிகவும் கடினமானது. நாங்கள் அதற்கு மிகவும் அண்மையில் இருந்தோம். ஒவ்வொரு நிகழ்ச்சி யிலும் ஆழமாய் ஈடுபட்டிருந்தோம். ஒருவேளை



**"ஒருமுறை ஜின்னா அவர்கள் சொன்னார்கள் :**

'பாகிஸ்தான் அவருடைய இலட்சியமில்லை. அவர் முஸ்லிம்களுக்குச் சில சலுகைகளைப் பெற்றுத்தர காங்கிரஸுக்கு சில அழுத்தங்களைக் கொடுக்க விரும்பினார்.' (அதற்காகவே பாகிஸ் தான் எனப் பேசினார்)"

நாம் தவறுகள் செய்திருப்போம், ஓரிரு தலை முறைக்குப் பின்னால் வரும் வரலாற்று ஆசிரியர்கள் ஒரு வேளை நாம் சரியாக செய்தவை எவை, தவறாக செய்தவை எவை என்பதைத் 'தீர்மானிக்க முடிந்தவர்களாக இருக்கலாம்'"

Source L From Nehru's Speech at the last banguest given in honour of Mountbatten in June, 1948.



## மறைத்து வைக்கப்பட்ட

# ஆசாத்

## ஆவணங்கள் தரும் உண்மைகள் !

1947இல் இந்தியா விடுதலை அடைந்தது. இந்த ஆண்டில்தான் தேசப் பிரிவினையும் நடந்தது.

"இந்தியாவை இரண்டாகப் பிரித்தவர்கள் முஸ்லிம்கள்தாம்" இப்படியொரு குற்றச்சாட்டு நீண்ட நெடுங்காலமாக எரித்து வீசப்பட்டு வருகின்றது.

முஸ்லிம்களும் இந்தக் குற்றச்சாட்டை முழுமையாக ஏற்றுக்கொண்டவர்கள்போல் மௌனம் சாதித்து வந்தனர், வருகின்றனர்.

இந்த மௌனத்தால் ஒரு பெரும் சேதம் ஏற்பட்டுவிட்டது. இளைய தலைமுறை இன்னும் சொன்னால் இப்போது வாழும் தலைமுறையினர் ஒரு குற்ற உணர்வை மனதில் சுமந்து கொண்டே வாழ்கின்றார்கள்.

இந்தச் சுமை அர்த்தமற்றது. தேவையற்றது.

தேசப் பிரிவினையின் வரலாற்றை புரட்டிப் பார்த்தால் பல உண்மைகள் மறைக்கப்பட்டிருப்பது புரிய வரும்.

இந்த வரலாற்றை ஆழ்ந்து ஆராய்ந்தால் உண்மையான குற்றவாளிகள் பிடிபடுவார்கள்.

இந்தத் திசையில் 'விடியல் வெள்ளி' மாத இதழில் 1999 ஆகஸ்ட்டு திங்களில் ஓர் ஆய்வை அட்டைப் படக் கட்டுரையாக வெளியிட்டோம். அதன் தலைப்பு 'தேசப் பிரிவினைக்கு யார் காரணம்? மறைக்கப்பட்ட உண்மைகள்?'

வாசகர்களின் அமோகமான வரவேற்பைப் பெற்றது. இந்தக் கட்டுரை வாசகர்களின் வேண்டுகோளுக்கு இணங்க பின்னர் இது நூலாகவும் வெளிவந்தது.

இந்தக் கட்டுரையில் நாம் மறைக்கப்பட்ட ஆவணங்களாக அதாவது, தேசப் பிரிவினைக்கு யார் காரணம் என்பதை மறைக்கும் ஆவணங்களுள் ஒன்றாக விடுதலை வீரர் அபுல் கலாம் ஆசாத் அவர்களின் மறைக்கப்பட்ட 30 பக்கங்களையும் குறிப்பிட்டிருந்தோம்.

அதாவது,

மௌலானா அபுல் கலாம் ஆசாத் அவர்கள் இந்திய விடுதலைப்போரில் மிக முக்கியமான பங்காற்றியவர்கள். 1939 முதல் 1946 வரை காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்தவர்கள். ஆங்கிலேயர்களின் கடுமையான கெடுபிடிகளுக்கிடையேயும் காங்கிரஸை வழி நடத்தியவர்.

இந்தியா மட்டுமல்ல, உலக அரங்கிலேயே பேரும் புகழும் ஈட்டியவர்.

இவர் தன்னுடைய வாழ்க்கை வரலாறாக எழுதிய நூல்தான் 'இந்தியா விடுதலை அடைகின்றது' (India Wins Freedom) இந்த நூல் 1959 பிப்ரவரி 22ல் வெளிவந்தது.

ஆனால், இந்த நூலின் 30 பக்கங்கள்

அப்போது வெளியிடப்படவில்லை. மறைத்து வைக்கப்பட்டு விட்டன. அதுவும் ஒரு நிபந்தனையுடன் மறைத்து வைக்கப்பட்டன. அந்த நிபந்தனை, 30 ஆண்டுகள் கழிந்த பின்னரே இந்தப் பக்கங்கள் வெளியிடப்பட வேண்டும் என்பதே!

இந்த 30 பக்கங்களின் ஒரு பிரதி கொல்கத்தா விலுள்ள ஆவணக் காப்பகத்திலும், அதேபோல் இன்னொரு பிரதி டெல்லியிலுள்ள ஆவணக் காப்பகத்திலும்வைக்கப்பட்டிருந்தன. அப்போது இந்த 30 பக்கங்களையும் பற்றி யாரும் கவலைப் படவில்லை.

1988ம் ஆண்டில் அதாவது குறிப்பிட்ட 30 ஆண்டுகள் நிறையுறும் தருவாயில் இந்த 30 பக்கங்களும் உலகெங்கும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தின.

இதனை வெளியிடுவதால் கிடைக்கும் இலாபம் யாருக்கு. இதனை அச்சிடும் உரிமை யாருக்கு என்ற வினாக்கள் எழுத்து வழக்கு உச்ச நீதிமன்றம் வரை சென்றது.


வழக்கில் இந்த நூலின் நிரந்தர வெளியீட்டாளரான "ஒரியண்ட் லாங்மேன்" என்ற வெளியீட்டு நிறுவனமே வென்றது. நீதிமன்ற உத்தவின்படி செப்டம்பர் 29, 1988 அன்று மறைத்து வைக்கப்பட்ட இந்த 30 பக்கங்களும் வெளிவந்தன. அக்டோபர் 1988இல் இந்த 30 பக்கங்களும் இணைக்கப்பட்ட 'இந்தியா விடுதலை அடைகின்றது' (India Wins Freedom) முழுமையாக வெளிவந்தது.

இந்த 30 பக்கங்களில் என்னென்ன செய்திகள் புதைந்து கிடந்தன என்பதை விடியல் வெள்ளி மாதஇதழில் அட்டைப் படக் கட்டுரையாக வெளியிட்டோம். அதனை இந்த நூலின் இரண்டாம் பாகமாக இணைத்துள்ளோம்.

இதேபோல் ஆஸாத் ஆவணங்களைப் போல் மறைக்கப்பட்ட இன்னொரு ஆவணம் Transfer of Poer Papers. இவை தேசப் பிரிவினையின் போது என்ன நடந்தது என்பதின் நிகழ்ச்சி நிரல். அதேபோல் அதிகாரம் ஆங்கிலேயர்களின் கைகளிலிருந்து, இந்தியர்கள் கைகளுக்கு மாறிய வரலாற்றுத் தொகுப்பு. இதனை 1999 வரை வெளியிடக்கூடாது, மறைத்தே வைக்க வேண்டும் என்றொரு முடிவை இந்திய தேசியத் தலைவர்கள் எடுத்தார்கள்.

இவையும் இப்போது வெளிவந்துள்ளன. இவை பற்றிய ஆய்வு காலம் கனியும்போது (இன்ஷா அல்லாஹ்)

**30 வருடங்களாக சிறையில் வாடிய 30 பக்கங்கள் சொல்லும் செய்தி**




இதையே வேறு சொற்களால் சொன்னால் தேசப் பிரிவினையில் மறைக்கப்பட்ட உண்மைகள் முஸ்லிம்களும், இந்துக்களும் ஒன்றாய் ஒரே அணியில் நின்றுதான் ஆங்கிலேயர்களுக்கு எதிராகப் போராடினார்கள். அவர்கள் தங்களுக்குள் எந்தப் பேதத்தையும் பாராட்டிடவில்லை.

இன்று தேசப் பிரிவினைகளின் வில்லன் எனத் தூற்றப்படும் முஹம்மத் அலீ ஜின்னா அவர்கள் விடுதலைப் போரில் இந்துக்களையும், முஸ்லிம்களையும் ஒன்றாக இணைத்து வைத்திருந்தார். அவரை 'இந்து-முஸ்லிம் ஒற்றுமையின் காதாநாயகன்' (The Ambassador of Hindu Muslim Unity) என சரோஜினி நாயுடு அழைத்தார்கள். இதையும் விடுதலைப் போர் வரலாறு 'பளிச்'சென நமக்குச் சொல்லும்.

இப்படி எல்லாப் போராட்டங்களிலும் ஒன்றாய் நின்ற முஸ்லிம்களையும் இந்துக்களையும் தனித்தனியே பிரித்திட வேண்டும் என்று ஃபாசிச சக்திகள் 1800களிலேயே செய்யப் பட்டுக் கொண்டிருந்தன.

இவர்களின் முழு உருவம் இப்போது குஜராத். அதற்கு முன்னால் பம்பாய். அதற்கு முன்னால் பாகல்பூர் என்று தெரிய வந்தது. முசபர் நகர் அதன் இப்போதைய பிம்பம்.

இந்த சனாதன ஃபாசிச சக்திகள் தங்கள் நாயகர்களில் ஒருவராகக் காணும் வீர்சாவர்க்கர் இப்படிக் கூறினார் என வரலாற்றாசிரியர் ஆர்.என்.அகர்வால் குறிப்பிடுகின்றார்

"*1917* முதல் வி.டி.சாவர்க்கர் அவர்கள் ராஷ்டிரா (என்ற இந்து ராஷ்டிரா) கொள்கையை தெளிவாகவே பேசி வந்தார். அவர் இந்துக்களை, அதிகாரத்தைக் கைப்பற்றி இந்து ராஜ்யத்திற் கான அடிப்படைகளை அமையுங்கள் என ஆலோ சனை வழங்கினார். அவர் சொன்னார் : இந்தியா என்பது ஒற்றை தேசமல்ல. இந்தியாவில் இரண்டு தேசங்கள் உள்ளன. ஒன்று இந்து தேசம், இன்னொன்று முஸ்லிம் தேசம் இன்னும் முஸ்லிம் களுக்கு இந்தியாவில் சிறுபான்மையினர் என்ற அளவில் அல்லாமல் எந்தவொரு எதிர்காலமும் இல்லை"

R.N.Agarwal as quoted in the dialoge between Hindus and Muslims

வீர்சாவர்க்கரின் கூற்றைக் கவனியுங்கள். இந்தியா ஒற்றை தேசமல்ல. அது இரண்டு இரண்டு தேசம் என்று கூறித் தெளிவாகப் பிரிவி னைக்கு தூபம் போடுகின்றார்.

அத்தோடு நிற்கவில்லை, முஸ்லிம்களுக்கு இந்த நாட்டில் என்ன அந்தஸ்து என்று கூறுகின் றனர். அது, "முஸ்லிம்களுக்கு சிறுபான்மையினர் என்ற அளவில் அல்லாமல் எந்த ஒரு எதிர் காலமும் இல்லை"

இது *1917*ல் கூறப்பட்டது. இதையும் *2002* மார்ச் மாதத்தில் இவர்கள் பெங்களூரில் நிறை வேற்றிய தீர்மானத்தையும் பாருங்கள். இரண்டும் ஒன்றுதான். சிறுபான்மையினரான முஸ்லிம்கள் பெரும்பான்மை இந்துக்களை அனுசரித்துத்தான் வாழ வேண்டும். முஸ்லிம்கள் தங்கள் இடர்பாடு களை (Limitaions) தெரிந்து வாழ வேண்டும்.

இனப்படுகொலை குஜராத்தில், இன்றைய பிரதமர், அன்றைய முதல்வர் மோடியின் தலை மையில் நடந்த இனப்படுகொலைகள் *(2002)* முழு வேகத்தில் நடந்து கொண்டிருக்கும்போது சொன்னார்கள் என்பதை நினைவு கொள்ள வேண்டும். உண்மையைச் சொன்னால் *1890* முதலே இவர்கள் இப்படித்தான் சிந்தித்துக் கொண்டிருக்கின்றார்கள். அதைத்தான் செயல் படுத்த துடித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்தச் சிந்தனையாளர்கள் சுதந்திரம் கிடைக் கப் போகின்றது என்ற சமிக்ஞை கிடைத்தவுடன் எல்லா இயக்கங்களிலும் காங்கிரஸிலும் புகுந் தார்கள். அல்லது இந்தச் சிந்தனையை புகுத்தி னார்கள். வீர்சாவர்க்கர் மட்டுந்தான் இப்படிச் சிந்தித்தார் என்றில்லை என்கின்றார் கே.என். கௌபா தன்னுடைய நூலான பேசிவ் வாய்சஸ் (Passive Voices) வெளியே கேட்காத குரல்கள் *1973*ல் வெளியிடப்பட்டது.

சாவர்க்கருக்கு முன்பே பல இந்துத் தலை வர்கள் இந்தக் கொள்கையை (பிரிவினையை) உடையவர்களாக இருந்தார்கள். சங்கராச்சார் குர்தோகி என்ற இந்து மகாசபையின் தலைவர் இப்படிப் பிரகடனப்படுத்தினார் "இந்தியா இந்துக்களுக்கே சொந்தம். முஸ்லிம்கள் இங்கே விருந்தாளிகள்தாம். அவர்கள் விருந்தாளிகள் போல் நடக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்"

The Dialogue between Hindus & Muslims

இவற்றையெல்லாம் இந்த நூலின் முற்பகுதி யில் குறிப்பிட்டிருக்கிறோம். இப்படி இவர்கள் பேசியதால், *1920*இல் ஜின்னா காங்கிரஸை விட்டு வெளியேறினார்.

இப்போது மௌலானா அபுல் கலாம் ஆசாத் அவர்களின் மறைக்கப்பட்ட பக்கத்திலுள்ள முதல் செய்தியை உங்கள் முன் சமர்ப்பிக்கின்றோம். படியுங்கள்.

*1935*ல் இந்திய அரசுச் சட்டம் என்றொரு சட்டத்தை ஆங்கிலேயர்கள் பிரகடனப்படுத்தி னார்கள். இதைத்தான் Government of India Act. 1935 என்று விரிவாகவும், G.I.Act. 1935 என்று சுருக்கமாகவும் அழைப்பார்கள்.

இந்தச் சட்டத்தின் கீழ் இந்தியாவிலிருக்கும் சமஸ்தானங்களுக்கு தேர்தல் நடத்துவது என்றும் அந்தத் தேர்தலில் வெற்றி பெறுபவர்களைக் கொண்டு - அதாவது தேர்தலில் வெற்றி பெறும் இந்தியர்களைக் கொண்டு அந்தந்த சமஸ்தானங் களை ஆட்சி செய்வதென்றும் முடிவு செய்தார்கள்.

இந்த சமஸ்தான ஆட்சிகள் அனைத்தையும் வழி நடத்தும் மத்திய அரசாக ஆங்கிலேயர்கள் இருப்பார்கள் என்றும் முடிவு செய்தார்கள்.

இதனை இன்னும் புரியும்படி சொன்னால் இன்றைக்கிருக்கின்ற மாநில அரசுகளைப் போல் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய குடிமக்களின் பிரநிதிகள் அந்தந்த மாநிலங்களை (அன்றைய பாஷையில் சமதாஸ்தானங்களை) ஆட்சி செய் வார்கள். இன்றைய கவர்னர்களின் இடத்தில் ஆங்கிலேயர்கள் இருப்பார்கள்.

எப்படி இன்றைய கவர்னர்கள் நினைத்தால்

மாநில அரசுகளைக் கலைத்துவிட முடியுமோ அதேபோல் அன்று ஆங்கிலேயர் கவர்னர் நினைத்தால் இந்திய குடிமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளைக் கலைத்துவிடலாம்.

இந்நிலையில் 1917ல் இந்த சமஸ்தானங்களுக்குத் தேர்தல்கள் நடந்தன. பல மாநிலங்களில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இந்த முஸ்லிம்கள் அனைவரும் முஸ்லிம் லீக்கைச் சார்ந்தவர்களல்ல. அத்தனை முஸ்லிம்களும் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள்.

பீகார், மத்திய பிரதேசம் போன்ற பகுதிகளில் முஸ்லிம்களே காங்கிரஸ் கட்சியின் முன்னணித் தலைவர்கள் இன்னும் சொன்னாள் இந்தத் தேர்தலில் முஸ்லிம் லீக் படுதோல்வி அடைந்தது.

ஆம், ஜின்னா ஒரு பெரும் பிரச்சாரத்தைச் செய்தார். ‘காங்கிரஸ் கட்சி பெயரளவுக்குத்தான் தேசியக் கட்சி, அதை நம்பாதீர்கள். அதற்குள் இந்து வகுப்புவாதம் இருக்கின்றது. அவர்கள் இந்துக்கள் அல்லாதவர்களை ஆட்சியில் அமர்த்த மாட்டார்கள்” என்று பிரச்சாரம் செய்தார். முஸ்லிம்கள் ஜின்னாவின் இந்தப் பிரச்சாரத்தை ஏற்க மறுத்தார்கள்.

தனது பிரச்சாரம் எடுபடாமல் போகவே ஜின்னா ஒரு கமிட்டியைப் போட்டார். அந்த கமிட்டி காங்கிரஸ் கட்சிக்குள்ளும் எப்படியெல்லாம் இந்து வகுப்புவாதம் புகுந்திருக்கின்றது என்பதை ஆதாரப்பூர்வமாக தேடிக்கொண்டு வந்து வெளியிட்டது. இந்த முயற்சிக்குப் பின் முஸ்லிம்கள் காங்கிரஸ் கட்சி என்பது இந்து வகுப்புவாதிகளால் ஊடுருவப்பட்டு விட்டது எனப் பிரச்சாரம் செய்தார் ஜின்னா.

அப்போதும் முஸ்லிம்கள் ஏற்க மறுத்து விட்டார்கள். 1937 தேர்தலில் முஸ்லிம்கள் முஸ்லிம் லீக்கைப் புறக்கணித்தார்கள். காங்கிரஸுக்கே ஓட்டுப் போட்டார்கள். ஜின்னா முஸ்லிம்களாலேயே புறக்கணிக்கப்பட்டார். (இதனை இப்போது டாக்டர் ஆயிஷா ஜலால் என்ற முஸ்லிம் சகோதரி லண்டன் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் தான் சமர்ப்பித்த ஆராய்ச்சி நூலில் குறிப்பிட்டுள்ளார். இந்நூல் இன்று பரவலாக எங்கேயும் கிடைக்கிறது. (பார்க்க Dr. Aysha Jalal, The sole Spokesman Jinnah, The Muslim League, and the Demand for Pakistan)

ஆனால் தேர்தலுக்குப் பின்னால் காங்கிரஸ்காரர்கள் ஜின்னாவின் கூற்றை மெய்ப்பித்தார்கள். தங்கள் செயல்களின் வழி. இவர்களை காங்கிரஸ்காரர்கள் என்பதைவிட காங்கிரசுக்குள் இருந்த சனாதனவாதிகள் என்றழைப்பதே பொருத்தமாக இருக்கும்.

இதனை அபுல்கலாம் ஆசாத் அவர்கள் 30 வருடம் மறைத்து வைக்கச் சொன்ன ஆவணத்தில் ஒத்துக்கொள்கின்றார். இதனை அன்று வெளியிட்டிருந்தால் காங்கிரசின் சாயம் வெளுத்துவிடும். தேசப் பிரிவினைக்கு அடித்தளம் போட்டவர்கள் யார் என்பது தெரிந்துவிடும் என்பதால்தான் அன்று இதை மறுத்தார்.

**மௌலானா அபுல் கலாம் ஆசாத் அவர்கள் அந்த 30 பக்கத்தில் கூறுகின்றார் :**

காங்கிரஸ்திருவாகப்பொறுப்பை(ஆட்சியை) ஏற்கும் முதல் முறை இதுதான். (அதாவது 1937 தேர்தலுக்குப் பின்தான் காங்கிரஸ் கட்சி தன் வரலாற்றிலேயே முதன் முதலாக ஆட்சியில் அமருகின்றது) இதுதான் காங்கிரஸ் கட்சிக்கு வைக்கப்பட்ட முதல் சோதனையும் கூட. காங்கிரஸ் கட்சி எந்த அளவுக்கு ஒரு தேசிய கட்சியாகச் செயல்படுகின்றது என்பதை மக்கள் கண்காணித்துக் கொண்டிருக்கின்றார்கள். முஸ்லிம் லீக் கட்சி காங்கிரஸ் கட்சிக்கு எதிராக வைத்த முக்கியமான பிரச்சாரம் ‘காங்கிரஸ் பெயரளவுக்குத்தான் தேசிய கட்சி’

(காங்கிரஸ் அமைச்சர்கள் சிறுபான்மையினர் மீது கொடுமைகளைக் கட்டவீழ்த்து விடுகின்றார்கள் என்றும் பிரச்சாரம் செய்தார்கள்.) முஸ்லிம் லீக் ஒரு குழுவை (கமிட்டியை) நியமித்தது. அந்த குழு சிறுபான்மையினர், காங்கிரஸ் கட்சியால் எப்படியெல்லாம் கொடுமைகளுக்குள்ளாக்கப்படுகின்றார்கள் என்பதை அறிக்கையாகத் தந்தது. இதில் அனேகக் குற்றச்சாட்டுக்கள் இருந்தன.

**நான் (அபுல்கலாம்ஆசாத்) என்னுடைய சொந்த அறிவைக் கொண்டு சொல்வேன்**

இந்தக் குற்றச்சாட்டுகள் அனைத்தும் பொய். இதுதான் ஆங்கில ஏகாதிபத்தியத்தின் இந்திய ஆட்சியாளர் வைசிராயின் கருத்து. இதுதான் ஒவ்வொரு சமஸ்தானத்திலும் இருந்த கவர்னர்களின் கருத்து.

ஆனால், இப்போது இரண்டு விஷயங்கள்

நடந்தன. அவை காங்கிரஸ் செயற்குழு மீது மிகவும் மோசமான எண்ணத்தை உருவாக்கிவிட்டன. அதனை மெத்த வருத்தத்தோடு நான் இங்கே ஒத்துக்கொண்டதாக வேண்டும். பீகார், பம்பாய் மாநிலங்களில் (சமஸ்தானங்களில்) தான் அவை நடந்தன. இந்த இரண்டு இடங்களிலும் காங்கிரஸ் தான் ஓர் அப்பழுக்கற்ற தேசிய கட்சி என்பதைக் காட்டிடவில்லை. காங்கிரஸ் தன் வளர்ச்சிப் தலைமை பல்வேறு சமுதாயத்தவர்களுக்கும் கொடுத்திருக்கின்றது. (இதையே வேறு சொற் களால் சொன்னால் பல்வேறு சமுதாயத்தவர்களை யும் பயன்படுத்தி இருக்கின்றது.) பம்பாயில் திருவாளர் நரிமான் என்பவர்தான் அந்த மக்களால் விரும்பி ஏற்றுக்கொள்ளப்பட்ட காங்கிரஸ் தலைவர். (இவருடைய உழைப்பு, தியாகம் இவற்றால்தான் காங்கிரஸ் கட்சி அங்கே வளர்ந்தது)

பம்பாய் பிரதேசத்தில் அரசு அமைக்கும் வாய்ப்பு காங்கிரஸ் கட்சிக்குக் கிடைத்தது. உடனேயே அங்குள்ள மக்களெல்லாம் நரிமான் தான் முதலமைச்சராக வருவார் என எதிர்பார்த் தார்கள். (நரிமானின் தலைமையில்தான் பம்பாய் பிரதேசத்தில் ஆட்சி அமையும் என எதிர்பார்த் தார்கள்) காரணம் அவரது வாழ்வு, தியாகம், அங்குள்ள மக்களிடம் பெற்றிருந்த மதிப்பு, மரியாதை. ஆனால், அவர் ஒரு ஃபார்சி அவரை தலைவராக்கினால் ஒரு ஃபார்சி முதல்வராய் ஆவார்.

காங்கிரஸ் சட்டசபையில் பெரும்பான்மை-யினராக இந்துக்கள் உறுப்பினர்கள். இவர்களுக் கிடையே ஒரு ஃபார்சி முதலமைச்சர் என்றாகி விடும் வாய்ப்பு. சர்தார் வல்லபாய் பட்டேல் அவருடைய தோழர்கள் இவர்களால் இதை சகித்துக்கொள்ள இயலவில்லை. அவர்கள் காங்கிர ஸிலிருக்கும் இந்து ஆதாரவர்களுக்கே இந்தக் கண்ணியம் (முதலமைச்சர்) என்ற கண்ணியம்) போக வேண்டும். அவர்களுக்கு (இந்துக்களுக்கு) இந்த கண்ணியத்தை (முதலமைச்சர் பதவியை) மறுக்கக்கூடாது என எண்ணினார்கள். இந்த (வகுப்புவாத சிந்தனையின் அடிப்படையில்) பி.ஜி. கர் என்பவரை இழுத்து வந்து பெரியவராகக் காட்டி அவரை காங்கிரஸ் கட்சியின் சட்டசபை தலைவராக (முதலமைச்சராக) ஆக்கினார்கள்."

(Azad paper as printed in India Winds Freedom pp-16)

**மௌலானா அபுல் கலாம் ஆசாத் அவர்கள் இந்த உண்மையை 30 ஆண்டுகள் முடக்கிப் போட்டது ஏனோ?**

30 ஆண்டுகளுக்குப் பின்னால் வெளி வந்துள்ள உண்மை சொல்லும் செய்தி என்ன?

காலமெல்லாம் நரிமான் என்பவர் காங்கிரஸ் காரராகத் தெரிகின்றார். விடுதலைப் போரில் ஈடுபட்டுச் சிறை செல்லும் போதும் சித்திரவதை களுக்கு உள்ளாகும்போது அவர் காங்கிரஸ்காரர்-பம்பாயில் அதாவது மகாராஷ்டிராவின் பட்டித் தொட்டிகளில் சுற்றித் திரிந்து கட்சி வளர்க்கும் போது அவர் காங்கிரஸ்காரர். ஆனால் முதல மைச்சர் பதவிக்கு அவர் உரியவராகி விடும்போது அவர் ஃபார்சி. அதனால் அவர் முதலமைச்சர் ஆக முடியாது. இந்துதான் முதலமைச்சராக வேண்டும்.

இப்படித் தியாகங்களுக்கு ஒரு சாராரும் அந்தத் தியாகங்களால் விளைந்த வெற்றி கனியும் போது அதைத் தட்டிச் செல்ல இன்னொரு சாராரும் என்பதுதான் சனாதனம் - காங்கிரஸ்.


நரிமான் உடைந்து போனார். ஜவஹர்லால் நேருவிடம் முறையிட்டார். அவரும் இதைக் கண்டுகொள்ளவில்லை.

இதற்கு மௌலானா அபுல்கலாம் ஆசாத் அவர்கள் இப்படிக் காரணம் சொல்கின்றார் :

"ஜவஹர்லால் நேரு மக்கள் தன்னை பட்டேலை குறை காண்பவர் என்று எண்ணிக் கொண்டிருக்கின்றார்கள். நாம் நரிமானுக்கு நியாயம் செய்தால் அது பட்டேல் ஆதாரவர் களுக்கு, தன்னை (நேருவை) விமர்சனம் செய்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்ததைப் போலாகிவிடும் என நினைத்தார்கள். அதனால் அவர் நரிமானின் கோரிக்கையை நிராகரித்தார். இங்கே என்ன படுகின்றது என்றால் நேரு தன்னு டைய தலைமையின் கீழ் பட்டேல் விமர்சனங் களுக்குள்ளாகிவிடக் கூடாது என விரும்பினார்." (மறைக்கப்பட்ட 30 பக்கங்களிலிருந்து)

உண்மையில் ஜவஹர்லால் நேரு, பட்டேலின் முடிவுக்கு உடன்பட்டார். நேரு அவர்கள் நரிமானுக்கு நியாயம் செய்திருந்தால் பட்டேல் ஆட்சேபித்திருக்க இயலாது.

நேரு அந்த அளவுக்கு மக்கள் செல்வாக்கு என்ற பலத்தைப் பெற்றிருந்தார்.



# ஃபாசிஸ்டுகள் அன்று செய்த சதியும் தேசப் பிரிவினையும்

பம்பாய் பிரதேசத்தில் (இன்னாள் மராட்டிய மாநிலத்தில்) காடு மேடெல்லாம் அலைந்து காங்கிரஸ் கட்சியை வளர்த்த நரிமானுக்கு என்ன நிகழ்ந்தது என்பதை மேலே பார்த்தோம்.

அடுத்து பீகார் பிரதேசத்தில் என்ன நடந்து என்று பார்ப்போம்...

1935ல் ஆங்கிலேயர்களால் கொண்டுவரப் பட்ட இந்திய அரசின் சட்டத்தின் கீழ் Govenment of India Act 1935. இதனை கருக்கமாக G.I. Act என்பார்கள். இந்தப் பீகார் பிரதேசத்திற்கும் தேர்தல் நடந்தது. 1937ல், இங்கேயும் அமைச் சரவையை அமைக்கும் வாய்ப்பு காங்கிரஸ் கட்சிக்கே கிடைத்தது. இந்தியாவிலேயே இந்தி யர்களால் அமைக்கப்படும் முதல் அமைச்சரவை இது.

பீகார் காங்கிரஸ் என வருகின்றபோது டாக்டர் செய்யித் முஹம்மத் அவர்கள்தாம் மக்கள் மனதில் வருவார்கள், அவர்தான் அந்தப் பகுதியில் காங்கிரசின் வளர்ச்சிக்காக சகலபரித் தியாகங்களையும் செய்தவர். பீகாரின் அடர்ந்த காடுகளிலும் அடவி நிறைந்த மலைகளையும் நடந்தே கடந்து பட்டித் தொட்டிகள் முதல் பட்டி ணங்கள் வரை காங்கிரஸ் கட்சியை வளர்த்தார். அமைச்சரவை அமைக்கும்போது இவருக்கு என்ன நேர்ந்தது என்பதை அபுல் கலாம் ஆசாத் அவர்கள் 30 ஆண்டுகள் மறைத்து வைத்த பக்கங்களில் இப்படிப் பதிவு செய்துள்ளார் :

“பீகாரில் வெறும் மக்கள் தலைவராக மட்டும் டாக்டர் செய்யித் முஹம்மத் அவர்கள் இருக்கவில்லை. அவர்கள் காங்கிரஸின் பொதுச் செயலாளராகவும் இருந்தார். இதனால் அவர் பீகாருக்கு வெளியேயும் மிகவும் பிரபல்யமான தொரு தலைவராக இருந்தார்.

பீகாரில் காங்கிரஸ் கட்சி அறுதிப் பெரும் பான்மையுடன் வெற்றி பெற்றதும் டாக்டர் செய்யித் முஹம்மத் அவர்கள்தாம் முதலமைச்ச ராக வருவார் என எதிர்பார்த்தார்கள் மக்கள். ஆனால் அவருக்கு முதலமைச்சர் பதவி வழங்கப் படவில்லை. மாறாக மத்திய அவையில் அங்கம் வகித்த ஸ்ரீ கிருஷ்ண சீன்காவும், அனுகிராகா நாராயன் சின்காவும் பீகாருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு தயார் செய்யப்பட்டார்கள்.

இதையெல்லாம் முன்னே நின்று செய்தவர் டாக்டர் இராஜேந்திர பிரசாத், பட்டேல் பம்பாயில் என்ன செய்தாரோ அதையே இராஜேந் திர பிரசாத் பீகாரில் செய்தார். பம்பாய்க்கும் பீகாருக்குமிடையே ஒரு வேறுபாடு. பீகாரில் ஸ்ரீ கிருஷ்ண சின்கா அமைச்சரவையை அமைத்த போது டாக்டர் செய்யித் முஹம்மத் அவர்களுக்கு அமைச்சரவையில் ஓர் இடம் கிடைத்தது."

(Azad Papers as printed in 'India Wins Freedom' pp. 17,18)

ஆக காலமெல்லாம் போராடும்போதும் சிறைகளைத் தரிசிக்கும்போதும், சித்திரவதை களுக்கு உள்ளாகும்போதும் காங்கிரஸ்காரராகத் தெரிந்த டாக்டர் செய்யித் முஹம்மத். முதலமைச்சர் பதவிக்கு உயரியவராக முடிய வில்லை. காரணம் அவர் ஒரு முஸ்லிம், இந்துவல்ல.

டாக்டர் செய்யித் முஹம்மத் அமைச்சரவை யில் இடம் கிடைத்தது என்றால் அவரை காங்கிரஸ்காரர்களால் புறக்கணிக்க இயல வில்லை. அந்த அளவுக்கு அவர் பீகாருக்கு உள்ளேயும் பீகாருக்கு வெளியேயும் அதாவது அகில இந்திய அளவிலும் பிரபல்யமானவர். அவரை ஒட்டுமொத்தமாக வெளியே தள்ளி-யிருந்தால் கட்சியில் பிளவு ஏற்பட்டிருக்கும்.

ஆனால் நரிமானுக்கு அந்த வாய்ப்புக்கூட இலலை. தான் தியாகங்களைச் செய்யும்போது காங்கிரஸ்காரனாகத் தெரிந்தவர்களுக்கு அதிகாரம் பதவி என வரும்போது ஃபார்சி என மாறிப்போனதே... இப்போதுதான் இவர்களுக்கு நாம் ஃபார்சி எனத் தெரிந்ததோமா என ஆதங் கப்பட்டார். காங்கிரஸ் கட்சியில் எங்கேயும் இந்த இனத் துவேஷத்திற்கு நியாயம் கிடைக்க வில்லை. இதனால் நரிமான் மனம் தளர்ந்தார். அத்தோடு அவருடைய அரசியல் வாழ்க்கை ஒரு முடிவுக்கு வந்துவிட்டது.

டாக்டர் செய்யித் முஹம்மத் அவர்களின் ஈடுபாடு குறையாவிட்டாலுமம், சற்று மனம் தளர்ந்தார்.

காங்கிரசின் இந்தச் செயல்பாடுகள் ஜின்னா காங்கிரஸ் கட்சியைப் பற்றி சொன்ன குற்றச் சாட்டு, உண்மை என நிரூபித்தன. காங்கிரஸ் பெயரளவுக்குத்தான் தேசியக் கட்சி.

இதனால் ஜின்னாவின் கூற்றில் எல்லோருக் கும் நம்பிக்கை பிறந்தது, வளர்ந்தது.

## கேபினட் மிஷன் திட்டம்?

முஸ்லிம்கள் அதிகமாக வாழுமிடங் களில் முஸ்லிம்களின் அமைச்சரவை. முஸ்லிம்கள் அல்லாத இடங்களில் ஏனையவர்களின் ஆட்சி! ஒன்றிணைந்த இந்தியாவில்.

ஒன்றிய அரசுக்கு மூன்று விஷயங்களில் மட்டும் அதிகாரம், பாதுகாப்பு, தொலைத் தொடர்பு மற்றும் ரூபாய் நோட்டு. இந்தியாவை மூன்று பகுதியாகப் பிரித்து ஆட்சி செய்யலாம்.

முன்று பகுதிகளையும் ஒன்றிணைக்கும் ஆட்சியாக மத்தியில் ஓர் அரசு இருக்கும். இந்த மூன்று பகுதிகள் North West, East India. Other வடமேற்கு பகுதி - கிழக்கு இந்தியா இதரப் பகுதி. ஆனால் ஒரே இந்தியா!

**- MGM**

முஸ்லிம்களின் பெரும் பகுதியினர் நாம் ஜின்னாவை முற்றாகப் புறக்கணித்தது முற்றிலும் தவறு என்பதை உணர ஆரம்பித்தார்கள்.

தனக்குப் பாதகமான சூழ்நிலைகளையே சாதகமாக மாற்றி சாதனை படைக்கும் திறமை கொண்ட ஜின்னா அவர்கள் இதை நன்றாகப் பயன்படுத்தினார்கள்.

உண்மையைச் சொன்னால் இந்த வகுப்புத் துவேஷிகள் ஜின்னா போன்றவர்களின் மனதில் சுதந்திர இந்தியாவில் முஸ்லிம்களின் நிலை என்னவாகும் என்றொரு வினாவை, சந்தேகத்தை கிளப்பி விட்டுவிட்டார்கள். அடுத்தடுத்து வந்த தேர்தல்களிலும் முஸ்லிம் லீக் அமோக வெற்றி கண்டது.

**இப்படி காங்கிரசின் உண்மை முகத்தையும், பாசிஸ்டுகளின் அன்றைய வெறியாட்டங் களையும் வெளிப்படுத்தும் உண்மைகளை 30 வருடங்கள் மறைத்து வைத்தார் ஆசாத்.**

# இந்து மகா சபையின் பிடிக்குள் காங்கிரஸ்



மோதிலால் நேரு

இந்து மகாசபா என்பது ஓர் பிராமிணிஸ்ட்டுகளின் சபா. இவர்கள் தொடக்க நாள் தொட்டே காங்கிரஸ் கட்சியைக் கவ்விப் பிடித்துக் கொண்டார்கள். இன்னும் உண்மையைச் சொன்னால் காங்கிரஸ் கட்சியின் அஹ்மதாபாத் கூட்டத்தின் போதுதான் இந்த இந்து மகாசபா தொடங்கப் பட்டது.

இதில் மகாத்மா காந்திஜியும், சுவாமி ஷரத்தானந்த் அவர்களும் கலந்துகொண்டார்கள். அதற்கு ஆதரவு தந்தார்கள் என்பதையெல்லாம் ஏற்கெனவே குறிப்பிட்டோம். காங்கிரஸ்-இன் உள்ளிருந்ததுதான் இந்து மகாசபையே வருகின்றது.

இவர்கள் காங்கிரஸ் கட்சியை வகுப்பு வாதத்தின் பக்கம் பிடித்துத் தள்ளிவிட்டார்கள். காங்கிரஸ் கட்சி இவர்களின் கிடுக்கிப் பிடியிலிருந்து வெளியே வந்திட இயலாமல் திணறுகின்றது காங்கிரஸ். ஒரு கட்டத்தில் மொத்த மக்களும் இந்தியாவின் விடுதலைக்காகப் போராடுகின்றனர். இவர்களோ ஆங்கிலேயர்களின் அடிவருடிகளாக நிரந்தர சேவர்களாக இருப்போம் என அடிமை சாசனம் எழுதித் தருகின்றார்கள்.

மிகவும் ரகசியமாகவும், சாதுரியமாகவும் காங்கிரஸ்-ஐ வகுப்புவாதக் கட்சியாக மாற்றி-விட்டார்கள்.

இதில் ஆங்கிலேயர்களுக்கு முஸ்லிம்கள் மீதிருந்த கோபத்தை வகையாகப் பயன்படுத்திக் கொண்டார்கள்.

ஆங்கிலேயர்களுக்கு முஸ்லிம்களின் மேல் தாங்கொண்ணா கோபம், காரணம் முஸ்லிம்கள் தாம் அவர்களின் ஆதிக்கத்தை தகர்க்க எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டார்கள். ஆங்கிலேயர்களின் இரவுகள் தூக்கமின்றி இருந்தன என்றால் அதற்கு முஸ்லிம்கள்தாம் காரணம்.

விடுதலைப் போரில் அடுக்கடுக்கான தியாகங்களைச் செய்து முஸ்லிம்கள் ஆங்கிலேயர்களைக் கதிகலங்க வைத்திருந்தார்கள்.

இது அவ்ரங்கஜேப் காலத்திலிருந்தே தொடக்கம். இந்தப் போர்களிளெல்லாம் உண்மையான இந்துப் பெருங்குடி மக்களும் உற்றத் துணையாக நின்றார்கள். பலவேறு விடுதலைப் போரில் முஸ்லிம்களின் தலைமையின் கீழ் இந்து பெருங்குடி மக்களும் - படை வீரர்களும் பெரிய அளவில் கலந்துகொண்டார்கள்.

அதேபோல் பல இந்துமன்னர்களின் கீழ் முஸ்லிம்களுக்கு அணிதிரண்டு, படை கொண்டு பரங்கியரை வீழ்த்திக்காட்டினார்கள்.

இந்து மகா சபை, அதன் முன்னோடிகளான பாரத் தர்ம மகா மண்டல், ஆரிய சமாஜ், சுத்தி சங்கநாதன் இவைதான் இந்தியாவின் விடுதலைக்குப் போராடி கொண்டிருந்தவர்களை, இந்துக்கள் என்றும் முஸ்லிம்கள் என்றும் பிரித்தன.

ஜாதி, மதம் இன்னொரு வேறுபாடுகளைப் பார்க்காமல் போராடிக் கொண்டிருந்த மக்களை எப்படிப் பிரிப்பது, எப்படி அவர்களை அவர்களுக் கெதிராக திருப்புவது என்றெல்லாம் திணறிக் கொண்டிருந்த ஆங்கிலேயர்களுக்கு வாகாய்விழ வகுத்துத் தந்தன மேலே சொன்ன அமைப்புகள். இதனை வரலைாறு இப்படிப் பதிவு செய்கின்றது.

Even V.D. Savarkar....

Agreed to help the british rulers in their game of divide and rule - Source : Hindu savarkar unmasked:byShamsulIslam.MediaHouse,DNDLS: 2015

1800 களிலேயே இங்கே இரண்டு தேசங்கள் இருக்கின்றன என்பதோடு நிற்காமல் அதனை தொர்ந்து பட்டித் தொட்டியெல்லாம் பிரச்சாரம் செய்தார்கள். இலக்கியங்களை உருவாக்கினார் கள். துண்டு பிரசுரங்களை வெளியிட்டார்கள். பத்திரிகைகளை நடத்தினார்கள்.

இப்படி ஆங்கிலேயனின் பிரித்தாளும் சூழ்ச் சிக்கு துணைபோனபின், விடுதலை எட்டும் தூரத்தில் இருக்கின்றது என்றான உடன் இன்னும் கொஞ்சம் காங்கிரஸ்-ஐ ஆக்கிரமித்தார்கள்.

எந்த அளவுக்கு என்றால், இவர்களில் பலர் ஒரே நேரத்தில் காங்கிரசிலும், இந்து மகா சபை யிலும் தலைவர்களாக இருந்தார்கள். அதனால் இவர்களின் தேசப் பிரிவினை சூழ்ச்சியை செயற்களம் காங்கிரஸ் கட்சி.

**ஓர் தெளிவான அத்தாட்சியைப் பாருங்கள்**

மதன்மோகன் மளாவியா 1909ஆம் ஆண்டில் 1918ஆம் ஆண்டில், 1933 ஆண்டில் என பலமுறை இந்தியன் நேஷனல் காங்கிரஸ் என்ற காங்கிரஸ் கட்சியில் தலைவராக இருந்தார். (President Indian National Congress)

இவர் 1923, 1924, 1936 ஆகிய ஆண்டுகளில் இந்து மகாசபையின் மாநாடுகளின் தலைவராக வுமிருந்தார். இதை இந்துமகாசபை இந்தியா இந்துக்களுக்கு மட்டுமே எனப்பேசிக் கொண்டி ருந்தது.

இவர்தான் ஹிந்தி - இந்து, இந்துஸ்தான் என்ற கோஷத்தின் மூளை. (Source : Gangadharan K.K. Indian National Consciousness, growth and development, Kalamkar, Delhi. 1972, p.97. as quoted in muslims against partition of India)

வகுப்பு வாதத்தையும், வகுப்புத் துவேஷத் தையும் தொடர்ந்து பரப்பிக் கொண்டிருந்த இவரை இந்தியாவின் மிகப்பெரிய தேசியவாதி எனப் பீற்றிக்கொண்டிருந்தனர்.

இன்னொரு வரலாறு இப்படிப் பதிவு செய் கின்றது. லாலா லஜ்பத் ராய் (1865-1928) இவர் பிரம்மோ சமாஜ், ஆரிய சமாஜ் ஆகிய பின்னணி யைக் கொண்டவர். பின்னர் காங்கிரசிலும் தன்னை ஒரு தலைவராகக் காட்டிக் கொண்டார். அத்தோடு சாவர்கருக்கு முன்னரே இந்து மகா சபா, ஹிந்து சங்காதன் இயக்கம் ஆகியவற்றில் தீவிரமாகப் பணியாற்றியவர். இவர் 1899-இல் காங்கிரஸ் கட்சியின் சார்பில் (Indian National Congress) ஹிந்துஸ்தான் ரிவியூ (Hindustan Review) என்ற பத்திரிகைக்கு எழுதிய கட்டுரையில் இப்படிக் குறிபபிட்டார்.

"இந்துக்கள் தங்களுக்குள் ஒரு தேசம். ஏனெனில், அவர்கள் தங்களுக்கென ஓர் கலாச் சாரத்தை கொண்டவர்கள். இப்படி 1800களி லேயே காங்கிரஸ்-ல் இருந்து கொண்டு பிரிவினையைப் பரப்பிக் கொண்டிருந்தார்.

லாலா லஜ்பதிராய் - மளாவின் போன்றோர் காங்கிரஸ் கட்சியின் பெயராலேயே வகுப்பு வாதத்தை, இந்து முஸ்லிம் வேற்றுமையை, தீவிரமாக இடைவிடாமல் பரப்பினார்கள். பண்டிட் ஜவஹர்லால் நேரு - அவர்களின் தந்தை மோதிலால் நேரு காங்கிரஸ் கட்சியின் மீதும், ஒன்றுபட்ட இந்தியாவின் மீதும் அதிக நம்பிக்கைக் கொண்டவர், பற்றாளர். காங்கிரசும் இந்தியாவும் எல்லோருக்குமானது என்பதில் தீவிர நம்பிக்கை கொண்டவராக இருந்தார். அதனால் மோதிலால் நேரு அவர்களால் மளாவியாவும் - லாலா லஜ்பத்ராயும் வளர்க்கும் வகுப்பு வாதத்தை பொறுத்துக்கொள்ள இயல வில்லை. அதையும் காங்கிரஸ் கட்சியைப் பயன்படுத்தியே இந்தத் துரோகத்தைச் செய்வதை தாங்கிட இயலவில்லை

தடுத்துப் பார்த்தார் மோதிலால் நேரு. ஆனால், தோற்றுப் போய்விட்டார். இறுதியில் மோதிலால் நேரு தன் மகன் ஜவஹர் லால் நேருவுக்கு இப்படியொரு கடிதத்தை எழுதினார்.

மளாவியா - லால லஜ்பத்ராய் கும்பல் செய்யும் வகுப்பு வாதத்தைத் தடுக்க முயற்சி செய்ததால் எனக்கெதிராக கடுமையான



மதன் மோகன் மலாவியா

பிரச்சாரத்தைக் செய்கின்றார்கள். அந்தப் பொய்ப் பிரச்சாரத்தை எதிர்கொள்வது மிகவும் வேதனையாக இருக்கின்றது. இதை மலாவியா - லாலா லஜ்பத்ராய் கும்பல், (Malaviya - Lala Gang) அதிவேகத்தில் செய்து கொண்டிருக்கின்றது. பொது வெளியில் நான் இந்துக்களுக்கு எதிரானவன், முஹம்மதியர்களுக்கு சாதகமானவன் எனப் பிரச்சாரம் செய்கின்றார்கள். தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு வாக்காளர்களிடமும், நான் மாட்டிறைச்சியை உண்பவன், முஹம்மதியர்களோடு சேர்ந்து பசுவை அறுப்பது சட்டப்படி செல்லுமாக்கு பவன் எனக்கூறுகின்றார்கள்.

"வகுப்புவாதம், வகுப்பு வெறுப்பு" வாக்காளர்களைப் பணம் கொடுத்து வாங்குவது, என்பவை தான் நடந்து கொண்டிருக்கின்றன. நான் முழு விரக்தியில் இருக்கின்றேன். நான் பொது வாழ்விலிருந்து ஓய்வு பெறுவதைப் பற்றி, ஆலோசித்துக் கொண்டிருக்கின்றேன். எனக்கு எது கவலையாக இருக்கின்றது என்றால், என்னுடைய நேரத்தை எப்படிச் செலவு செய்வது என்பதுதான் நான் கௌகாத்தியில் நடக்கவிருக்கும் காங்கிரஸ் கூட்டத்திற்காகக் காத்திருக்கின்றேன். அதுவரைக்கும் மௌனமாக இருப்பது என முடிவெடுத்துள்ளேன்.

"மளாவியா - லாலா கும்பல் பிர்லாவின் பணத்தோடு காங்கிரஸ்-ஐ கைப்பற்ற பயங்கரமாக முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. அவர்கள், பெரும்பாலும் வெற்றி பெற்றுவிடுவார்கள் என்றே எண்ணுகின்றேன்.

ஏனெனில் அவர்களுக்கு எதிரான எதிர் நடவடிக்கைகள் எதையும் எடுப்பதற்கு இப்போது நம்மிடம் வழி இல்லை. நான் காங்கிரஸ் கூட்டத்திற்குப் பின்னால், ஒரு பொது அறிக்கையை வெளியிடுவேன் அத்தோடு அசெம்பிளியில் என்னுடைய இடத்தையும் காலி செய்து விடுவேன் ; எனினும் நான் வலுவான ஓர் கட்சியான (காங்கிரஸ் கட்சியின்) தலைவன் என்றே மக்கள் பார்ப்பார்கள். இப்போது நம்மோடு இருக்கும் மனிதர்களை வைத்துக் கொண்டு (இந்துமகா சபையினர்) நாம் சட்ட சபையிலேயோ, இதர கவுன்சில்களிலோ எதையும் செய்துவிட முடியாது."

"நான் விரைவில் நமக்குள் கட்சி மாறுபவர்களைக் காணலாம் என நான் கருகின்றேன். (அதாவது, இந்து மகாசபையினர் வேறுகட்சிக்குத் தாவுவார்கள்) இது நடக்கவில்லை என்றாலும் நாம் இவர்களை வைத்துக் கொண்டு எதையும் சாதிக்க இயலாது. நம் நாட்டின் நலனுக்கு ஏதாவது செய்யலாம் என்றால், இவர்களுக்கிடையில் நாம் எந்த உருப்படியான வேலையையும் செய்து சாதிக்க முடியாது."

"நான் தொடங்கிய National Uniof for Hindu Muslim Unity. இந்து - முஸ்லிம் ஒற்றுமைக்கான தேசிய கழகம் நடந்து கொண்டுதானிக்கின்றது. ஆனால், இப்போது இருக்கும் வகுப்புவாத அழுத்தங்களுக்கிடையில் எனது குரல் யார் காதிலும் விழாது. நான் காந்திஜியைச் சந்திக்கலாம். ஆனால், அவருடைய போக்கை என்னால் ஓர் அளவுக்கு மேல் தாங்கிக் கொள்ள இயலாது.

(Souce : Jawarharlal Nehru. A bunch of letters, Asia publishing House, 1958, page 49-50)

இங்கே மோதிலால் நேரு குறிப்பிடும் தேர்தல் 1920ஆம் ஆண்டில் நடந்த தேர்தல்களோடு சம்மந்தப்பட்டது. அப்போது ஆங்கிலேயர்களின் கீழ், இந்திய மக்கள் மகாண சபைகளையும், பிராந்திய நிர்வாக தேர்தல்களையும் நடத்தக் கிடைத்த அனுமதி இது. Govt of India act - இந்திய அரசாங்க 1919கீழ் இந்தத் தேர்தல்கள் செயலில் வந்தன. ஆங்கிலேயர் களுகுக் கீழ் நடந்த முதல் தேர்தல்.

இங்கே நாம் கவனிக்க வேண்டியது என்ன வெனில் இப்போது எப்படி பெரிய வியாபார நிறுவனங்கள் (Corporates) இந்துத்துவ அமைப்பு களுக்கு உதவி செய்கின்றனவோ அதேபோல் அன்றும் உதவி செய்துள்ளன. சுற்றிவளைக் காமல் சொன்னால் தேசப் பிரிவினைக்கும், பெருமளவில் நிதி உதவி செய்தார்கள். இதனை பண்டித நேருவின் தந்தை மோதிலால் நேரு மலாவியா லாலா கும்பலுக்கு "Malaviya Lala Gang" எனக் குறிப்பிட்டார்கள்.

பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களும் தன் வாழ்க்கை வரலாற்றை எழுதி 1936-இல் வெளி யிடும்போது, இப்படிக் குறிப்பிட்டார். வகுப்பு வாத வைரஸ் காங்கிரஸ்-க்குள் புகுந்துவிட்டது."

"Many a congress man was a communalist under his national cloak" page 136.

அதாவது, பல காங்கிரஸ்காரர்கள் வகுப்பு வாதிகள், அவர்கள் தேசியம் என்ற போர்வைக் குள் ஒளிந்திருக்கின்றார்கள். The Hindu Mahasaba's Communalism" Masquerades under a Nationalistic cloak" page-467.

அதாவது, இந்து மகாசபையின் வகுப்புவாதம், தேசப் போர்வையில் புதைந்துக் கிடக்கின்றது.

காலந்தாழ்ந்து இந்த மகாசபையின் துரோ கத்தைப் புரிந்துகொண்ட காங்கிரஸ் தனது கட்சியில் இந்து மகா சபையினரோ முஸ்லிம் லீக்-ஐ சார்ந்தவர்களோ சேர்ந்திடக் கூடாது என்றொரு சட்டத் திருத்தத்தை கட்சிச் சட்டத் தால் கொண்டு வந்தது. அதை திருத்தம் V(c) எனக் குறிப்பிட்டார்கள். ஆனால், அது எடுபடவில்லை.

**பாபரி மஸ்ஜித்-இல்**

1949 டிசம்பர், 22-23 இரவு சிலைகளை வைத்தபோது, அதனை அகற்றிட வேண்டும் என பிரதமர் நேரு கட்டளை இட்டார். அதை உ.பி. முதல்வர் செய்யவில்லை. நேரு அயோத்தி வருவதாக அறிவித்தார். ஆனால், உங்களுக்குப் பாதுகாப்பும் தந்திட இயலாது என அப்போதைய உ.பி. முதல்வர் B.B. பந்த் கூறிவிட்டார். நேருவின் பயணத்தைத் தடுத்தார்கள். B.B. பந்த் இந்து மகா சபையினருக்கு அனுசரணையானவர்,





**நாடாளுமன்றத்தின் மீது நடந்த முதல் தாக்குதல்**

**1966-இல் காமராஜர் தாக்குதல்**

1966 நவம்பர் 7-ல் டெல்லியில் புகுந்தன இந்துத்துவ கும்பல் (சாதுக்களின் சபை) பல கபளீகரங்களைச்செய்தது. காமராஜர் அவர்களின் வீட்டில் புகுந்த அவரையும் தாக்கினார். ஆனால் அவர் உயிர் பிழைத்தார்.

தாக்குதுல் நடத்தியவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகளை எடுக்க அன்றைய பிரதமர் நடவடிக்கை எடுக்கச் சொல்லி காங்கிரஸ் உள் துறை அமைச்சர் "குல்பொரிலால் நந்தா" கேட்டுக் கொண்டார். குல்பொரிலால் நந்தாவும் ஓர் இந்துத்துவவாதி. அவர் எந்த நடவடிக்கையும் அதனால் அவரைப் பதவி நீக்கம் செய்தவர் இந்திரா காந்தி. (The Hindu, Nov.-9,2016)

இப்படி இந்துத்துவ வாதிகள், காங்கிரஸ்-ஐ அப்பிப் பிடித்துத் தங்கள் திட்டங்களைச் செயல்படுத்தி வந்தார்கள். வருகின்றார்கள்.

- MGM



# வரலாறு படைத்த அல்ட் நியூஸ் ஜுபைர்

**இந்தியாவில் பெருக்கெடுத்து ஓடுகின்ற சமூக ஊடகங்கள். நமது, பாசிஸ்ட்டுகள் அதனை பக்குவமாக தங்களுக்குப் பயன் படுத்திக் கொள்கின்றார்கள். திரித்தும் மறித்தும் முஸ்லிம்களையும் இதர சிறுபான்மையினரை யும் கொலை செய்ய பயன்படுத்துகின்றார்கள்.**

இப்படித்தான் முஸாஃப்பர் நகரில், சகோதர சமுதாயத்தைச் சார்ந்த ஒரு பெண்ணை முஸ்லிம் இளைஞர் ஒருவர் அழைத்துக் கொண்டு ஓடிப் போய் விட்டார் என்றொரு போலி வீடியோவை சமூகத் தளத்தில் படரவிட்டு, ஒரு பெரும் கலவரத்தை உருவாக்கி 49,000 முஸ்லிம்களை தங்கள் சொந்த வீடுகளை விட்டு விரட்டினார்கள். அகதிகள் முகாம்களை நோக்கி விரட்டினார்கள். பல நூறு முஸ்லிம்களைக் கொலை செய்தார்கள்.

இந்த 49,000 முஸ்லிம்களும் காலம்காலமாக குடியிருந்த தங்கள் பூர்வீக வீடுகளையும், பல கோடி ரூபாய் மதிப்புள்ள கரும்புத் தோட்டங் களையும் இழந்தார்கள். அவர்கள் தங்கள் சொந்த வீடுகளுக்குத் திரும்பிட இயலவில்லை.

இத்தனைக்கும் அன்று உத்திரப்பிரதேச மாநிலத்தில், ஆட்சியிலிருந்த அகிலேஷ் யாதவ் ஆட்சியில் மூன்று முஸ்லிம்கள் அமைச்சர்களாக இருந்தார்கள். 69 முஸ்லிம்கள் அங்கே சட்ட மன்ற உறுப்பினர்களாக வீற்றிருந்தார்கள்.

ஜனநாயகம் என நீங்கள் அள்ளிக் கொட்டும் முயற்சிக்கும் கோடிக்கணக்கான பணமும் உங்களில் ஒரு உயிரைக்கூட காப்பாற்றிடாது, என்பதைப் பட்டவர்த்தனமாகப் பறைசாற்றிய பெரும் நிகழ்வு அது.

அமைச்சர் பதவிகளும், சட்ட மன்ற உறுப்பினர் பதவிகளும் உங்கள் சாவுகளைத் தடுத்திடாது என்பதன் அப்பட்டமான அறிவிப்பு.

இதுபோன்ற போலி வீடியோக்கள் வெளி யாகும்போது, அந்த வீடியோக்கள் போலியா னவை என்பதை மக்கள் மன்றத்தில் உடனுக் குடன் பறைசாற்றும் ஓர் அற்புதமான “சானல் தான்” அல்ட் நியூஸ் இணையதளம். “FactChecking (Media) Website.

முஸாபர் நகரைப்போல் பல கலவரங்கள் நடந்திடாமல் தடுத்தப் பெருமை அல்ட் நியூஸ் இணைய தள இணை தாளாளர் Co-Founder முஹம்மத் ஜூபைர் அவர்களைச் சாரும். இதனை பத்திரிகையாளர்களின் குழுமம், தான் வெளி யிட்ட அறிக்கையில் தெளிவுப்படுத்தி இருந்தது. உலகில் இந்தியாவின் பெருமையை உயர்த்தியவர்.

காரணம், இதுபோன்ற போலி வீடியோக் களை பாசிச சங்கப்பரிவாரத்தினர் வெளியிடும் போதெல்லாம் அவர்களின் உண்மைத் தன்மை களைத் தோலுரித்துக் காட்டிவிடும் அல்ட் நியூஸ்

இது சங்கப்பரிவாரத்தின், வகுப்புக் கலவ ரங்கள், திட்டங்களை, வெகுவாகப் பாதித்தது. கோபம் வரத்தானே செய்யும் பிணந்திண்ணி கழுகுகளுக்கு.?

இதில் மனித இனத்தின் உயிரின்மேல் பிடிப் புள்ளவர்கள் கவனிப்பதும், பாராட்டுவதும், என்னவெனில் பல ஆயிரம் அப்பாவி உயிர்களை முஹம்மத் ஜூபைர் காப்பாற்றி இருக்கின்றார்.

**சாதனையாளர் ஜூபைர்**

எல்லாவற்றையும் விட, நிபுர் ஷர்மா, தரம் சன்ஷாத் என்ற பெயரில் சாதுக்கள் விடுத்த இனப்படுகொலை அறைகூவல்கள், அனைத்தை யும்தோலுரித்துக்காட்டினார்ஜூபைர். இதனால் உலக நாடுகளிலிருந்து பல கண்டனகணைகள் பாசிசப் பரிவாரத்தை நோக்கிப் பாய்ந்தன. ஜூபைர் பல உயிர்களைக் காப்பாற்றினார், நிபுர் ஷர்மா பல உயிர்கள் பறிபோகக் காரணமாக இருந்தார்.

அடுக்கடுக்கான கட்டுரைகள், தலையங்கங் கள். இவையும், வெளிநாட்டுப் பத்திரிகைகளில் வெளி வரத் தொடங்கின. பல ஊடகங்கள் அவற்றை உலக அரங்கில் வெளிச்சம் போட்டுக் காட்டின. இதனால் இங்கு நடக்கும் தீவிரவாத ஆட்சியின் அனைத்துப் பரிணாமங்களும், உலக மக்களுக்குத் தெரிந்திட வந்தன.

குறிப்பாக நிபுர் ஷர்மா, இறைவனின் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் மீது வீசிய அவதூறு உலக நாடுகளில் குறிப்பாக அரபு நாடுகளில் சூடுபிடிக்க முஹம்மத் ஜூபைர் அவர்களும், அவர்களது அல்ட் நியூஸ் இணையதளமும்தான் காரணம் என்பதே உண்மை.

நிபுர் ஷர்மா மீது எந்தவிதமான உருப்படி யான நடவடிக்கையும் எடுக்க முடியாத பாசிச அரசுக்கு உலக அரங்கில் மிகப்பெரிய தலைக் குனிவு ஏற்படுத்தியது.

மன்னிப்புக் கேட்காத குறையாக ஒருபெரும் அவமானம் சங்கப்பரிவாரத்தையும், அதன் பெயரில் ஆட்சி நடத்தும் மோடி அரசுக்கும் ஒரு பெரும் நெருக்கடி.

நாங்கள் நிபுர் ஷர்மா மீது கடுமையான நடவடிக்கை எடுப்போம், எடுக்கப்படும் நடவடிக்கை இனிமேல் யாரும் இதுபோல் நடக்காத அளவிற்கு Exemplary Action - முன் மாதிரி நடவடிக்கையை மேற்கொள்வோம் எனக் கூறினார்கள். இப்படித்தான் ஈரான் வெளி விவகா ரத்துறை அமைச்சர் டெல்லி வந்திருந்தபோது இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு செயலாளர் ஆலோசகர் (National Security Advisor) அஜித் டோயல் கூறினார். ஆனால் அப்படியொன்றும் நிபுர் ஷர்மா மீது நடவடிக்கை எதுவும் எடுத்திட வில்லை. இவர்களின் வழககமான பொய்யும் புரட்டுந்தான் அது. உலகில் பொறுப்பானவர்கள் தரும் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும் என்ற நினைப்பில் ஈரான் இதை ஏற்றுக் கொண்டது.

**மீண்டும் குண்டு வைக்கத் திட்டம்**

நம் நாட்டின் சிலபல பகுதிகளில் குண்டு வைத்துவிட்டு அந்தப் பழியை முஸ்லிம்கள் மீது போட்டு மொத்தப் பிரச்சையையும் திசை திருப்பி மீண்டும், முஸ்லிம்களைக் குற்றவாளிகள் கூண்டில் நிறுத்திட முயற்சி செய்தார்கள். பல அப்பாவி முஸ்லிம் இளைஞர்களையும் சிறைப் பிடித்தனர். இந்த முயற்சியின் முதற்பகுதியாக அல்கொய்தா இந்தியாவில் குண்டுவைக்க சதி, பெருமானார் (ஸல்) அவர்கள் மீது நிபுர் ஷர்மா பேசிய பேச்சின் எதிரொலி" என்றொரு அறிக்கையை உளவுத் துறையை ஏவி வெளியிட வைத்தார்கள். பின்னர் அப்படியே அதை விட்டு விட்டார்கள். காரணம் அல்ட் நியூஸ் இந்தப் பொய்யையும், அம்பலப்படுத்திவிடும் என்பது மக்கள் கருத்து.

இன்னொரு காரணம் உலகில் பெரும் பகுதி யினர் பாசிச பயங்கரவாதமே வைத்தக் குண்டு எனக் கூறிவிடுவார்கள்.

பின்னர் தங்கள் ஆற்றாமையைத் தணித்துக்




கொள்ள சிலபல அப்பாவி இந்துக்களையும் கொலை செய்துவிட்டுப் பழியை சில விபரம் அறியாத முஸ்லிம்கள் மீது போட்டு சிறையில் தள்ளி இருக்கின்றார்கள். இதில் இந்தக் கொலைகள் இவர்களின் கையிருப்பு வேலைதான் என்பதும் நொடிப் பொழுதில் வெளிச்சத்திற்கு வந்தது. இவர்கள் குண்டு வைத்திருந்தாலும் இதே போல் சிக்கி இருப்பார்கள் என்பது திண்ணம்.

இத்தனைக்கும் முஹம்மத் ஜூபைரும் அவருடைய அல்ட் நியூஸும்தான் காரணம் என்பதை அறிந்து வெகுண்டெழுந்தார்கள். அதாவது தாங்கள் சர்வதேச அளவில் அவமானப் பட்டதற்கு “அல்ட் நியூஸ்சும்“ ஜூபைரும்தான் காரணம் என்பதால் ஜூபைரைக் கைது செய்தார்கள். எந்த முகாந்திரமுமில்லாமல்.

அல்ட் நியூஸ் என்ற செய்திகளின் உண்மைத் தன்மைகளைக் கண்டறிந்து உலகுக்கு அறிவிக்கும் இந்த இணையத்திற்கு இரண்டு தாளாளர்கள். ஒருவர் முஹம்மத் ஜூபைர் அவர்கள், இன்னொருவர் பிரட்டிக்சின்ஹா - Pratiksinha. அவர் இந்து என்பதால் அவரைக் கைது செய்யவில்லை என்றொரு எண்ணைத்தைத் தங்கள் பாசிச வெறியர்களிடம்காட்டிடலாம்என்பதனாலேயே முஹம்மத் ஜூபைர் அவர்களைக் கைது செய்தார்கள். ஆனால் இது பெரிதாக எடுபட வில்லை. ஜூபைர் அனைத்து சமூகத்தாராலும் மதிக்கப்பட்டவர்.

அல்ட் நியூஸ், இன் இந்த இணைத் தாளாளர் பிரட்டிக்-இன் தந்தை, குஜராத் 2002 இனப் படுகொலைகளின் போது, பாதிக்கப்பட்ட மக்களுக்கு அதாவது முஸ்லிம்களுக்குப் பல உதவிகளைச் செய்தவர் என்பது குறிப்பிடத் தக்கது. (Front LIne, July 20,2022)

ஆக ஜூபைரும் பிரட்டிக் சின்வராவும் 2017இல் அல்ட் நியூஸ்-ஐ நிறுவியதன் நோக்கம் இன்றைய பாசிஸ்ட்டு அரசின், பொய்களைத் தோலுரித்துக் காட்டுவதே!

### ஜூபைரின் கைதில் ஏற்பட்ட அதிர்ச்சிகள்

ஜூபைர்-ஐ கைது செய்யும்போது ஓர் அபாண்டத்தைக் குற்றச்சாட்டாகப் போட் டார்கள். அது, 40 ஆண்டுகளுக்கு முன்னால், வெளிவந்த திரைப்படம் ஒன்றில் வந்த ஒரு காட்சியை ஜூபைர் 4 ஆண்டுகளுக்கு முன்னால், 2018ஆம் ஆண்டு தனது டிவிட்டர் பக்கத்தில் போட்டார் என்பதே அது.

இந்தப் பதிவு 4 ஆண்டுகளுக்குப் பின்னர் சிலருடைய மத உணர்வுகளைப் புண்படுத்தி இருக்கின்றது. என்னே சோதனை? இந்தப் புகாரின் அடிப்படையில் ஜூபைர் ஜூன் 27 (2022)இல் கைது செய்யப்பட்டார்.

இந்த மத உணர்வைப் புண்படுத்திவிட்டது என்ற புகார்-ஐ தந்தவர்கள் ஜூபைரை எப்படி யாவது சிறையில் தள்ளிட வேண்டும், என்பதற்

காகவே, தயார் செய்யப்பட்டவர்கள்.

இதன் தலைவர் விகாஷ்.... இவர் ஹிந்து யுவ வாகினியின் தலைவர் (HYV) அத்துடன் குஜராத் பாரதீய ஜனதாவுடைய மோர்ச்சாவின் தாளாளர். அந்த டிவிட்டர் கணக்கைப் பின்பற்றுபவர் ஒரே ஒருவர்தான். அதுவும் ஒரு வருடத்திற்கு முன்பு உருவாக்கப்பட்டது. இவர்கள் இதற்கு முன்பு 757 முறை முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்கள். Fr.29/7/2022

பாசிஸ்ட்டுகளில் இந்த டிவிட்டையும் அந்தப் புகாரையும் அடையாளப்படுத்தி முஹம்மத் ஜூபைர் அவர்களை சிறை பிடிக்கவே இயலாது என்பதே உண்மையான நிலவரம். காரணம் இதில் பதிவான இந்திய தண்டனைச் சட்டம், பிரிவுகள் 153-A, 295-A ஆகியவற்றின் கீழ் வருகின்றது. இவை ஏழு ஆண்டுகளுக்குக் கீழ் தண்டனை உள்ள ஒரு பிரிவுகள். அதனால் இந்தத் தண்டனைச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு கைது செய்ய முடியாது. ஆனாலும் கைது செய்து அநீதியை நிலை நாட்டினார்கள். பின்னர் வேறு வேறு புகார்களை உத்திரப் பிரதேசத்தின் பல்வேறு காவல் நிலையங்களிலும் பதிவு செய்தார்கள். மொத்தம் 41 FIR என்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள்.

**என்.ஐ.ஏ.**

ஆனாலும் இன்றைய பாசிச அரசின், அரிப்பு அடங்கவில்லை. 'NIA' என்ற தேசியப் புலனாய்வு முகைமையை உள்ளே இழுத்தார்கள். ஒரு காலத்தில் நன்றாக இயங்கிக் கொண்டிருந்த தேசிய புலனாய்வு முகமை, 2014 ஆம் ஆண்டு களுக்குப் பின் பாசிச பரிவாரத்தின் கைப்பாவை யாக ஆகிப் போனது. பெரும்பாலும் வழக்குகளில் உண்மைகளை ஒட்டுமொத்தமாக மண் தோண்டிப் புதைக்கவே இந்த முகமை பயன்படுத்தப் படுகின்றது.

இந்த உண்மையை வெளிச்சம் போட்டுக் காட்டி ஊடகங்களின் பல்வேறு சங்கங்களும் அறிக்கை விட்டன. இருந்தாலும் நமது பாசிஸ்ட்டு களோ அவர்களுக்கு அடிமை சாசனம் எழுதித் தந்த தேசிய புலனாய்வு முகமையோ தளர்வதாக இல்லை.

உடனேயே இன்னும் சில பொய் வழக்கு களைப் புனைந்து ஒரு சிறப்பு புலனாய்வு குழுவை

> **“ உரிய முகாந்தரங்களின்றி தங்கள் அரசியல் எஜமானர்களை மகிழ்விக்க கைது செய்யும் காவல்துறை அதிகாரிகளையும், தண்டிக்கும் வழிவகைகளைக் கொண்டு வந்திட வேண்டும் ”**

களமிறக்கினார்கள். இந்த சிறப்புப் புலனாய்வுக் குழு யாருக்காக வேலை செய்யும் என்பதை எல்லோரும் அறிந்ததே.

இன்னும் அவர்களுக்கு ஜூபைரைப் பற்றிய கிலி விடவில்லை. பாகிஸ்தானிடமிருந்து பணம் வாங்கினார் என்ற பொய்யை இட்டுக் கட்டி னார்கள். இதனால் பாசிச பரிவாரத்தின் இன்னொரு கைத்தடியான (ED) என்ற Enforcement Directorate, பொருளாதார குற்றங்களை விசாரணைச் செய்யும் அமலாக்கத்துறை என்ற “அரசு” அமைப்பை களத்தில் இறக்கினார்கள்.

இப்படி ஜூபைரைக் கைது செய்துவிட்டு சாட்சியங்களை அல்ல குற்றங்களைத் தேடினார் கள். பாவம், இந்த இந்துத்துவ பாசிஸ்ட்டுகளுக்கு தூக்கமே வரவில்லை. காவல்துறைக்கும் அந்நிய செலவாணி துறைக்கும் தொடர்ந்து அழுத்தங் களைக் கொடுத்துக் கொண்டே இருந்தார்கள்.

இதனிடையே ஜூபைருக்காக நாம் வைகறை வெளிச்சம் “யூட்யூப்” சானலில் பல தகவல்களை மக்கள் மன்றத்தில் வைத்தோம். அதேபோல், இந்தி, ஆங்கில சானல்களிலும் உலகெங்குமுள்ள பத்திரிகைகளிலும் தலையங்கங்கள், சிறப்புக் கட்டுரைகள் பரவின.

நமது இந்து ஆங்கில இதழ் மிகவும் கர்ண கடூரமான தலையங்கம் ஒன்றைத் தீட்டியது. கைது செய்வதும், நீதிமன்றங்கள் தொடர்ந்து அநீதியை இழைக்க செய்வதும், விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்தும் எனக் கடிந்தது.

மாஜிஸ்திரேட்கள் ஒன்றுமில்லாத வழக்கில் காவல்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் ஜூபை ரைத் தந்ததைச் சாடிற்று. மறைமுகமாக நிபுர் ஷர்மாவையும் அவர் வாந்தி எடுத்த அவதூறு களையும் சுட்டிக் காட்டி அவருக்குப் பக்கத்தில் கூட போகாத காவல்துறை “அல்ட் நியூஸ்” முஹம்மத் ஜூபைர் அவர்களைச் சுற்றி வளைத் துக் கொண்டிருப்பது ஏன் எனக் கேட்டது.

### வழக்கறிஞர்களின் தொடர் முயற்சி

முஹம்மத் ஜூபைர் அவர்களின் வழக்கறி ஞர்கள் காரசாரமான ஆதாரங்களை எடுத்து வைத்தார்கள். பதறிப்போன அரசு வழக்கறி ஞர்கள் அவர் அந்நிய செலவாணி அனுமதிகளை அவதூறாக பயன்படுத்தினார் என்ற வழக்கை நாங்கள் பின்வாங்குகின்றோம், வாபஸ் வாங்கு கின்றோம் எனக் கூறியது.

பாசிச பரிவாரத்தினர் நோக்கமறிந்து சேவகம் செய்யும் நீதிமன்றங்கள், இரவெல்லாம் வழக்கை நடத்தியது. அதிலும் ஒரு வேடிக்கை!

### நீதிமன்ற வேடிக்கை

ஜூபைர் முதலில் பாட்லா ஹவுஸ் (டெல்லி) நீதிமன்றத்தில் தான் நிறுத்தப்பட்டார். அங்கே தான் இரவெல்லாம் வழக்கு நடந்தது. ஆனால் அங்கேயுள்ள காவல்துறை அதிகாரி ஒருவர், பகல் 12 மணிக்கெல்லாம், ஜூபைர் 14 நாட்கள் காவலில் வைக்கப்படுவார் என ஊடகங்களுக்குப் பேட்டிக் கொடுத்தார். இரவு 7 மணிக்கு இதை நீதிமன்றத்தில் ஜூபைரின் வழக்கறிஞர் சுட்டிக் காட்டினார்.

நீதிபதியிடம் நீங்கள் சமர்ப்பிக்கப்படும் ஆதாரங்கள் வாதப் பிரதிவாதம் இவற்றின் அடிப்படையில், முடிவுகளை எடுக்கின்றீர்களா? காவல்துறை அதிகாரிகள் சொல்வதை அப்படியே கேட்டு அதையே முடிவாக அறிவிக் கின்றீர்களா? எனக் கேட்டார். ஆனாலும் நீதிபதி 14 நாட்கள், நீதிமன்றக் காவலில் வைத்தார். யாருக்கும் வெட்கமில்லை.

இன்றைய ஒன்றிய பாரதீய ஜனதா அரசு, உத்திரப் பிரதேச பா.ஜ.க. அரசு ஆகியவை தங்களுக்குக் கீழுள்ள அதிகாரிகளை எப்படி வைத்திருக்கின்றார்கள் என்றால், நாங்கள் சொல் பவரை நீங்கள் கைது செய்ய வேண்டும். என்னென்ன குற்றங்களை நீங்கள் சுமத்திட வேண்டும், அந்தக் குற்றங்களை நிருபிக்க, என்னென்ன சாட்சியங்களை நீங்கள் உருவாக்கிட வேண்டும், என்பதெல்லாம் உங்கள் பொறுப்பு எனக் கட்டளையிடுகின்றது.

கீழே உள்ள அதிகாரிகளும், நீங்கள் யாரைக் கைது செய்திட வேண்டும் என்பதைச் சொல்லுங் கள், நாங்கள் சட்டத்தை நீட்டுகின்றோம் என்ற நிலைக்கு வந்துவிட்டார்கள்.

உடனேயே தலையசைக்க கீழ்நீதிமன்றங்கள் தயாராக இருப்பதால் எல்லாம் எளிதாக முடிந்து விடுகின்றது.

### விருதுகள்

சமூக தளங்களில் பொய் வழக்குகளைப் புனைந்து முஹம்மத் ஜூபைர் போன்றவர்களைச் சிறையில் வைப்பவர்களுக்கு - அதாவது காவல் துறை அதிகாரிகளுக்கு ரூபாய் 10,000 முதல் 50,000 வரை விருதுகள் தருவதாக அறிவிப்புகள் வந்துகொண்டே இருக்கின்றன. சிலபல வழக்கு களில் பதவி உயர்வுகளும் வழங்கப்பட்டன. இதனை ஏளனமாக ஆங்கிலத்தில் இப்படிக் குறிப்பிடுவார்கள். “You show the man I will show the Law” - நீ யாரை கைது செய்ய வேண்டும் எனச்சொல் நான் சட்டத்தைக் காட்டுகின்றேன்.


ஜூபைர் விஷயத்தில் ஒன்றிய அரசுக்கும் மாநில அரசுக்கும், எல்லையில்லா அச்சம் எங்கே வெளிவந்து உண்மைகளைத் தோலுரித்துக்காட்டி விடுவானோ என்று.

அதனால் தினமும் ஒரு வழக்கை பதிவு செய்தார்கள். ஜூபைரும், ஜூபைரின் வழக்கறி ஞர்களும், பொறுமையுடன். ஆனால் உறுதியுடன் போராடினார்கள்.

### வரலாறாக வாழும் ஜூபைர்

ஜூபைர் விஷயத்தில் மீண்டும் ஊடகங்கள் தங்கள் வலுவைக்காட்டின. இந்து ஆங்கில நாளிதழ் இரண்டாவதாக ஓர் தலையங்கத்தை எழுதியது. அதில், இன்னும் கடுமையாக ஒன்றிய அரசையும், உத்திரப் பிரதேசத்தில் நடக்கும் காட்சியையும் சாடியது. “Bail Act” பிணைக்கென புதிய சட்டம் ஒன்று கொண்டு வரவேண்டும்.

அந்தச் சட்டம், நீதித்துறையில் முதலில் நிறுத்தும்போது, பிணைக்கான மனு இல்லாமலே, பிணை வழங்கிடும் சட்டமுறையை ஒன்று



ஆங்கில நாட்டில் இருக்கின்றது.

கண்ணைப் பொத்திக்கொண்டு ரிமாண்ட் - காவலில் வைத்திடும் "மாஜிஸ்திரேட்களை" நெறிபடுத்தும் சட்டங்கள் வரவேண்டும்.

"Bail is the Rule Jail is the Exception" பிணையை வழங்குவதே சட்டம். சிறையிலடைப்பது விதி விலக்கு என்ற நீதிநெறி முறையின் வழிகாட்டுதல் நீதித்துறையின் நடப்பாக ஆகிட வேண்டும் எனப் பேசியது.

உரிய முகாந்தரங்களின்றி தங்கள் அரசியல் எஜமானர்களை மகிழ்விக்க கைது செய்யும் காவல்துறை அதிகாரிகளையும், தண்டிக்கும் வழிவகைகளைக் கொண்டு வந்திட வேண்டும் எனப் பேசியது.

அதே நேரத்தில் 50 முதல் தகவல் அறிக்கை கள் பதிவான நிபுர் ஷர்மாவின் பக்கத்தில் கூட காவல்துறை போகவில்லை என்பதையும் சுட்டிக்காட்டியது.

ஜூபைரின் செயல்பாடுகளால் இந்தியாவில் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும், எதுவும் நடந்து விடவில்லை என்பதையும் நிபுர் ஷர்மாவின் அவதூறுகள் உள் நாட்டிலும், வெளி நாடுகளிலும், பயங்கரமானப் பின்விளைவுகளை ஏற்படுத்திற்று. ஆனால் அவரை காவல்துறை அதிகாரிகள் அணுகவே அஞ்சுகின்றார்கள். அதே நேரத்தில் நிபுர் ஷர்மா யார் மீதெல்லாம் புகார் தருகின்றாரோ அவர்களெல்லாம் கைது செய்யப்படுகின்றார்கள்.

இந்த நிலை அகற்றப்படத் தேவையான சட்டங்கள் கொண்டு வரப்பட வேண்டும். இதையும் ஆணித்தரமாகச் சுட்டிக்காட்டின ஊடகங்கள். இந்தியா பாசிசத்தின் பிடியில் சிக்கி சின்னாபின்னமான போது அதை எதிர்த்து நின்றவர் ஜூபைர் என்று வரலாறு வனப்பாக பேசும்.

**தலைமை நீதிபதி N.V. ரமணா**

ஊடகங்களெல்லாம் உற்சாகம் பெற்று நாம் மேலே சொன்னவற்றை நெஞ்சுரத்தோடு சுட்டிக் காட்டின என்றால் அதற்கு உரம் தந்தவர் நமது தலைமை நீதிபதி அவர்கள்தாம்.

அவர்தான், தொடர்ந்து (பொய்) வழக்கு களைப் புனைந்து பிணை கொடுக்க இயலாமல் ஆக்கி விடுகின்றார்கள். இந்த நிலை மாற்றப்பட வேண்டும்.

இந்தியாவில் எதிர் கருத்துக்களுக்கு இட மில்லை. எதிர் கட்சிகளுக்கும் இடமில்லை என்றாகின்றது. ஆங்கில நாட்டில் இருப்பதைப் போல் தனி பெயில், பிணை சட்டம் வேண்டும் என்றெல்லாம் ஒரு பொது நிகழ்ச்சியில் பேசினார்.

இந்த இடைவிடா சட்ட ரீதியான சண்டை ஊடகங்களின் பாய்ச்சல் தலைமை நீதிபதியின் உரை இவையெல்லாம் 24 நாட்கள் கெடுபிடி களுக்குப் பின் ஜூபைருக்கு பிணை கிடைக்க வழி செய்தன.

**பிணை - நிரந்தர பிணை - ஆனால் சொல் வழக்கில் தற்காலிக பிணை.**

அத்தோடு அவர் மீண்டும் யூட்யூப் - பணியை அதாவது தனது உண்மையைக் கண்டறியும் பணியினை தொடர்ந்திட தடையேதும் இல்லை.

எல்லா வழக்குகளிலும் - பிணை, காரணம், எல்லா வழக்குகளிலும் காவல்துறை ஒரே பாட்டையே பாடி இருக்கின்றது. தடயங்கள் எதுவுமில்லை - இனி ஜூபைரை உச்ச நீதிமன்றத் தின் அனுமதி இல்லாமல் கைது செய்யக் கூடாது.

அவரை விசாரிக்க அமைக்கப்பட்ட சிறப்பு புலனாய்வுக்குழு "SIT" களைக்கப்படுகின்றது. இப்படியொரு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை 22-7-2022 அன்று உச்ச நீதிமன்றம் வழங்கிற்று.

சட்டத்துறையில் நாம் மேலே குறிப்பிட்ட மாற்றங்கள் வந்திடுமேயானால், ஜூபைர் 24 நாட்கள் சிறையில் இருந்ததன் மூலம் ஓர் வரலாறு படைத்துவிட்டார் என்பதே உண்மை.

- இன்ஷா அல்லாஹ் பொறுத்திருந்து பார்ப்போம்...

**- MGM**



தொடர்

# பிராமினிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்

*ஜூலை மாத தொடர்ச்சி....*

*நீதிமன்றம் அதை கவனித்து பின்வருமாறு கூறியது 'வெறுமனே கைப்பற்றப்பட்ட மடிக் கணினிகளும், குறுந் தகடுகளும் குற்றம் சாட்டப் பட்டவர்கள் சதி செய்தார்கள் என்ற அனுமான த்தை நோக்கி நம்மை கொண்டு செல்லவில்லை'.*

**17) முஹம்மது சல்மான் – இந்தியன் முஜாஹிதீன் செயற்பாட்டாளர் என்று கூற ப்பட்டவர் – இரண்டு முறை காவல்துறையால் குற்றம் சாட்டப்பட்டார் – இரண்டு முறையும் காவல்துறையால் விடுவிக்கப்பட்டார்**

**அ) முதலில் 2008 டெல்லி குண்டு வெடிப்பு வழக்கில் கைது செய்யப்பட்டார்.**

*உத்தரப்பிரதேச தீவிரவாதத் தடுப்பு படையினர் சித்தார்த் நகரைச் சேர்ந்த முஹம்மது சல்மான் என்ற இந்தியன் முஜாஹிதீன் இயக்க செயற்பாட்டாளர் என்று கூறப்பட்டவரை, 2008ஆம் ஆண்டு டெல்லியில் நடந்த குண்டு வெடிப்பு வழக்கில் சதித்திட்டம் தீட்டியதாக கூறி 6,மார்ச், 2010 அன்று கைது செய்தனர். இந்த கூற்றுக்கு ஆதாரமாக காவல்துறையினர் சமர்ப் பித்த முக்கியமான ஆதாரங்கள் குற்றம் சாட்டப் பட்டவரின் நேபாள கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்), சவுதி அரேபியாவில் பெற்ற சுகாதார அட்டை, டெல்லி குண்டு வெடிப்பு வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட டாக்டர். அதிஃப் அமீன் மற்றும் டாக்டர். ஷாநவாஸ் ஆகியோருடன் நடைபெற்ற அழைப்பு உரையாடல்களின் எழுத்து வடிவம்.*

*இந்த வழக்கு டெல்லியின் கூடுதல் அமர்வு நீதிபதி செல்வி. சந்தோஷ் ஸ்நேஹிமான் அவர்கள் முன்னிலையில் 5 பிப்ரவரி 2011 அன்று குற்றப் பத்திரிகை தாக்கல் செய்ய விசாரணைக்கு வந்தது. அந்த நிலையிலேயே சல்மானுக்கு எதிரான எல்லா குற்றச்சாட்டுகளையும் நீதிபதி அவர்கள் தூக்கி தூர எறிந்தார். பின்வரும் முக்கியமான காரணங்களின் அடிப்படையில் அவர் குற்றம் சாட்டப்பட்டவரை விடுவித்தார்:–*

- *நீதிமன்றத்தில் முன்னால் அசல் கடவுச் சீட்டு (பாஸ் போர்ட்) சமர்ப்பிக்கப்படவில்லை.*

- *சவூதி அரேபியாவில் இருந்து பெறப்பட்ட சுகாதார அட்டையில் அவரின் வயது 27 என பட்டியலிடப்பட்டுள்ளது. ஆனால் அது தவறான து என கண்டறியப்பட்டுள்ளது.*

- *நீதிபதி பின்வருமாறு கூறினார், 'ஒரு வேளை சல்மான் போலியான கடவுச்சீட்டை வைத்திருந்ததன் காரணமாகவும் சவூதி அரேபியா வின் சுகாதார அட்டையை வைத்திருந்ததன் காரணமாகவும் கைது செய்யப்பட்டிருந்தால் இந்த குற்றச்சாட்டுகளை தனியாக கையாண்டி ருக்க வேண்டும். அந்த விஷயங்கள் எப்படி சல்மானை இந்த குண்டு வெடிப்பு வழக்கில் சதிகாரர் ஆக்கும்?*

- *போலியான கடவுச்சீட்டின் அடிப்படை யிலும் சுகாதார அட்டையின் அடிப்படையிலும் சல்மானுடைய வயதை அவரை கைது செய்யும் போது அதாவது 6, மார்ச், 2010 அன்று 27 என காவல்துறை நிர்ணயித்தது. ஆனால் சல்மானின் பெற்றோர்கள் 20 வருடங்களுக்கு முன்னால் தான் திருமணம் செய்து இருந்தார்கள், அதாவது 1990ம் வருடத்தில். அவருடைய உயர்கல்வி பள்ளிச்சான்றிதழ்களில் அவருடைய பிறந்த நாள்*

3, அக்டோபர், 1992 என்று காட்டியது. அதன் அர்த்தம் கைது செய்யப்படும் போது அவர் வயது 18 வருடங்கள்.

- அதீஃப் அமீன் மற்றும் டாக்டர். ஷாநவாஸ் ஆகியோருடனான கைபேசி அழைப்பு உரையாடல்களை பொருத்தவரையில் அந்த உரையாடல்களை இடைமறித்து கேட்டபின் நீதிபதி, 'இது இரண்டு சிறுவர்களுக்கிடையிலான மிகச் சாதாரண உரையாடலே' என்று கூறி விட்டார். மேலும் அந்த கைபேசி சல்மானின் பெயரில் இல்லை.

### ஆ) மீண்டும் ஜவேரி பஜார் (மும்பை) குண்டு வெடிப்பு வழக்கில் (2011) கைது செய்யப்பட்டார்.

2008 டெல்லி குண்டுவெடிப்பு வழக்கை காரணம் காட்டி டெல்லி காவல்துறை சுமத்திய அத்தனை குற்றச்சாட்டுகளிலிருந்தும் டெல்லி அமர்வு நீதிபதி அவர்கள் முஹம்மது சல்மானை 5, பிப்ரவரி, 2011 இல், விடுவித்துவிட்ட போதிலும் காவல்துறை அதனை விட்டுவிடுவதாக இல்லை. மும்பை காவல்துறை மும்பை ஜவேரி பஜாரில் 2011ம் ஆண்டு நடந்த குண்டுவெடிப்பு வழக்கிற்காக சல்மானை 13, ஜூலை, 2011இல் கைது செய்தது.

சல்மானை அவர்கள் டெல்லி காவல்துறை டெல்லி குண்டுவெடிப்பு (2008) வழக்கிற்காக கைது செய்து விசாரணை செய்த போது அளித்த அறிக்கையின் அடிப்படையில் கைது செய்தனர். மும்பை அமர்வு நீதிபதியும் காவல்துறையின் பதிவுகளில் பல்வேறு முரண்பாடுகள் இருப்பதை சுட்டிக்காட்டி அவரை இவ்வழக்கில் இருந்து விடுவித்தார். உதாரணத்திற்கு மும்பை மற்றும் டெல்லி காவல்துறை அளித்த பறிமுதலுக்கான கைப்பற்றல் ஆவணங்கள் ஒன்றுக்கொன்று ஒத்துப்போகவில்லை.



சல்மானின் வயது குறித்து காவல்துறையினர் அளித்த அறிக்கைக்கும் உண்மையில் அவருடைய வயதுக்கும் இடையே மிகப்பெரிய வித்தியாசம் இருந்தது.

### 18) அப்துல் மதீன் – மும்பை, 13, ஜூலை, 2011 குண்டு வெடிப்பு (ஜவேரி பஜார்) வழக்கு – பண உதவி செய்ததாக குற்றம் சாட்டப்பட்டார் – பின்னர் விடுதலை செய்யப்பட்டார்

அப்துல் மதீன் என்ற ஃபரூக் மும்பையின் சிறப்பு மோக்கோ (எம்.சி.ஓ.சி.ஏ) நீதிமன்றத்தால் 27, செப்டம்பர், 2014இல் கௌரவமாக விடுதலை செய்யப்பட்டார். அப்துல் மதீன் துபாயிலிருந்து கோவாவிற்கு ரமளான் மாதத்தில் வந்தார். அங்கிருந்து தன் சொந்த ஊரான பட்கலுக்கு தன் குடும்பத்துடன் ஈத் பெருநாளை கொண்டாட செல்வதற்காக தயாராகிக் கொண்டிருந்தார். ஆனால், காவா விமான நிலையத்தில் அம்மா நிலத்தின் தீவிரவாதத் தடுப்புப் படையினரால் கைது செய்யப்பட்டார். இந்தியன் முஜாஹிதீன் தீவிரவாத இயக்கத்தின் உறுப்பினரான யாசின் பட்கலுக்கு ஹவாலா மூலமாக 10 இலட்ச ரூபாய் பணம் அளித்ததாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது. இந்தப் பணம் மும்பையில் 13, ஜூலையில் நடந்த தொடர் குண்டு வெடிப்புகளுக்காக பயன்படுத்தப்பட்டது என தீவிரவாதத் தடுப்புப்படை யினரால் கூறப்பட்டது.

எனினும், மூன்று மாதங்களுக்கு பின்னர், தீவிரவாதத் தடுப்புப் படை, மோக்கோ (எம்.சி.ஓ.சி.ஏ – மஹாராஷ்டிரா கன்ட்ரோல் ஆஃப் ஆர்கனைஸ்டு க்ரைம்) நீதிமன்றத்தில் கைது செய்யப்பட்ட வருக்கு எதிராக எந்த குற்றச்சாட்டையும் தாக்கல் செய்ய இயலவில்லை எனவும், எந்த ஒரு குற்றத்திலோ அல்லது தீவிரவாத செயலிலோ அவருக்கு தொடர்பிருந்ததற்கான எந்தவித ஆதாரமும் இல்லை. எனவே அவரை இந்திய தண்டனை சட்டம் பிரிவு 169இன் கீழ் விடுவிக்கலாம் என்று கூறி அறிக்கை ஒன்றை தாக்கல் செய்தது. மோக்கோ நீதிமன்றம் அவரை வழக்கிலிருந்து விடுவிப்பதற்கு பதிலாக அவரை விடுதலை

செய்தது. (வழக்கிலிருந்து விடுவிப்பது என்பது அவருக்கும்இந்தவழக்கிற்கும்சம்பந்தமேஇல்லை என்பது. விடுதலை செய்வது என்பது அவர் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லை என்பதன் அடிப் படையில்)

## 19) டெல்லி சிறப்பு பிரிவு லியாகத் ஷா என்பவரை தீவிரவாத வழக்கில் சேர்த்தது, என்.ஐ.ஏ அவரை விடுவித்தது

டெல்லி காவல்துறை ஹிஸ்புல் போராளி என சந்தேகிக்கப் பட்ட லியாகத் ஷா என்பவரை மார்ச் 2013 அன்று கைது செய்தது. இந்தியாவின் தலைநகரில் தீவிரவாதத் தாக்குதல் நடத்த போடப்பட்ட சதித்திட்டத்தில் தொடர்பிருந்த தாகக் கூறி அவர் கைது செய்யப்பட்டார். 21–22 மார்ச் இரவில் ஜும்மா மஸ்ஜித் பகுதியில் உள்ள ஹாஜி அராஃபத் விருந்தினர் இல்லத்தில் (கெஸ்ட் ஹவுசில்) வெடிபொருட்களையும், ஆயுதங்களையும் கைப்பற்றியதாகவும் அந்த பொருட்கள் லியாகத்–இன் ஏற்பாட்டின் பேரில் அங்கே வைக்கப்பட்டிருந்ததாகவும் இதனை கைப் பற்றியதன் மூலம் ஹோலி பண்டிகையை முன்னிட்டு தலைநகர் டெல்லியில் நடக்கவிருந்த பிதாயீன் (தற்கொலை) தாக்குதலை முறியடித்து விட்ட தாகவும் காவல்துறை கூறியது.

இந்த விசாரணை பின்னர் தேசிய புலனாய்வு முகமையிடம் (என்.ஐ.ஏ) கொடுக்கப்பட்டது. தேசிய புலனாய்வு முகமை இந்த வழக்கை தீர விசாரித்து பின்னர், இவ்வழக்கில் லியாகத்தை சதித்திட்டத்தில் இணைக்கும் எந்த விதமான ஆதாரமும் இல்லை என்றும், இந்த வெடிப் பொருட்களை வைத்தது ஷபீர் கான் பதான் என்ற ஒருவன் என்றும், அவன் காவல்துறையின் உத்தரவின் தூண்டுதலின் பேரிலேயே இவ்வாறு செய்தான் என்றும் முடிவுக்கு வந்தது. பதான் டெல்லி சிறப்பு பிரிவு ஆய்வாளர் சஞ்சய் தத்–இன் உளவாளி. அவன் இந்த குண்டுகளை ஹாஜி அரஃபாத் விருந்தினர் இல்லத்தில் 20–21, மார்ச், 2013 அன்று வைத்தான். அவ்வாறு அவன் குண்டு வைத்து கொண்டிருந்த போது அவன் சிறப்பு பிரிவு அதிகாரிகளால் தொடர்ச்சியாக வழி நடத்தப்பட்டான். அந்த காலக்கட்டத்தில் அவன் 49 முறை அதிகாரிகளிடம் பேசினான்.

தேசிய புலனாய்வு முகமை விசாரணையை முடித்து இவ்வழக்கின் குற்றப்பத்திரிகையை ஜனவரி 2015 அன்று ஷபீர்கான் பதானுக்கும் மற்றவர்களுக்கு எதிராக தாக்கல் செய்தது. 26 பக்க குற்றப்பத்திரிகை லியாகத் மீதான குற்றச் சாட்டுகளை நீக்கியது மட்டுமல்லாமல் டெல்லி காவல்துறை இவ்வழக்கில் அவரை இணைக்க எந்த எல்லை வரை சென்றுள்ளது என்பதையும் காட்டியது. குற்றப் பத்திரிகையில் பதான் ஹஜ் அரஃபாத் விருந்தினர் இல்லத்தில் குண்டு வைத்துக் கொண்டிருந்த போது தொடர்பு கொண்டிருந்த காவல்துறை துணை ஆணையர் சஞ்சீவ் யாதவ், ஆய்வாளர்கள் சஞ்சய் தத், ராகுல் குமார் மற்றும் இதர சிறப்பு பிரிவு அதிகாரிகள் ஆகியோரின் பெயர்களும் இந்த வழக்கில் லி யாகத்தை கைது செய்யவும் அவரை இவ்வழக்கில் இணைக்கவும் உதவி செய்த அதிகாரிகளின் பெயர்களும் குறிப்பிடப்பட்டிருந்தது.

## 20) டெல்லி தொடர் குண்டு வெடிப்பு வழக்கு, 2005 – வழக்கு வீழ்ந்தது – குற்றம் சாட்டப்பட்டவர்கள் 12 வருடங்களுக்கு பிறகு சுதந்திரமாக நடந்தார்கள்

பஹர்கனி, சரோஜினி நகரிலும் டெல்லி பேருந்து கழக பேருந்திலும் 29,அக்டோபர்,2005 அன்று நடந்த தொடர்குண்டு வெடிப்பில் 67 பேர் கொல்லப்பட்டனர். 105 பேர் காயம் பட்டனர். தாரிக் அஹ்மத் தார், முஹம்மது ரஃபீக் ஷா மற்றும் முஹம்மது ஹுசைன் பஸ்லி என்ற மூன்று காஷ்மீரி இளைஞர்கள் இவ்வழக்கில் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மீது தீவிர வாதம், கொலை, சதி, இன்னும் இதர குற்றங்கள் இந்திய தண்டனை சட்டத்தின் கீழும் உபா என ப்படும் (யு.ஏ.பி.ஏ) சட்டத்தின் கீழும் வெடிப் பொருட்கள் சட்டத்தின் கீழும் குற்றம் சாட்டப் பட்டது.

12 வருடங்களுக்கு பிறகு 16, பிப்ரவரி, 2017 அன்று கூடுதல் அமர்வு நீதிபதி ரீதேஷ் சிங் குற்றம் சாட்டப்பட்ட மூவரையும் விடுதலை செய்தார். குண்டுவெடிப்பில் குற்றம் சாட்டப் பட்ட வர்களுக்கு இருந்த தொடர்பை நிரூபிக்க அரசு தரப்பு மிக மோசமாக தோல்வியடைந்து விட்டது என நீதிமன்றம் கூறியது. எனினும், தாரிக் அஹ்மத் தார் மட்டும் அவர் அபூ அல்கமா என்ற லஷ்கரே தொய்பா செயற்பாட்டாளருடன் பேசிய தொலைபேசி உரையாடலை இடை மறித்து கேட்டதன் அடிப்படையில் லஷ்கரே

தொய்பா இயக்கத்துடன் உள்ள தொடர் பிற்காக தண்டிக்கப்பட்டார்.


முஹம்மது ரஃபீக் ஷா என்பவர் 29, அக்டோபர், 2005 அன்று டெல்லியில் வெடி குண்டு வைத்ததாக சொல்லப்பட்ட அதே நாளில் அவர் காஷ்மீரில் இருந்தார் என்ற அவரது கூற்றை வெற்றிகரமாக நிரூபித்தார். அதே நாளில் அவர் காஷ்மீர் பல்கலை கழக வளாகத்தில் தான் இருந்தார், அதுவும் வகுப்புகளில் பங்கேற்றார் என்பதை காஷ்மீர் பல்கலைகழகத்தை சேர்ந்த அவருடைய மூன்று ஆசிரியர்கள் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தனர். பல்கலைகழகமும் அந்த நாளுக்கான அவருடைய வருகைப் பதிவேட்டினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தது.

அதுமட்டுமன்றி, டெல்லி போக்குவரத்து கழகத்தின் பேருந்தின் பயணிகள் அதாவது அரசு தரப்பின்படி ஷா பேருந்தில் குண்டு வைத்ததை கண்ணால் கண்ட சாட்சிகள் குண்டு வெடித்த அந்த நாளில் என்ன நடந்தது என்பதை தெளிவாக நினைவுப்படுத்தி நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல இயலவில்லை.

முஹம்மது ஹுசைன் பஸ்லியின் விஷயத்தில் அரசு தரப்பு ஒரு சிம் கார்டை தாக்கல் செய்து இருந்தது. அந்த சிம் கார்டை அவர் லஷ்கரே தொய்பா செயற்பாட்டாளருடன் பேச உபயோகித்ததாக கூறப்பட்டது. ஆனால், நெருக்கமான ஆய்விற்கு பின் அந்த சிம் கார்ட் பஸ்லியின் கைபேசியில் மிகக்குறுகிய நேரத்திற்கே வைக்கப்பட்டிருந்தது என்பதையும் அந்த கைபேசியில் இருந்து அந்த சிம் கார்டின் மூலம் பேசப்பட்ட ஒரே அழைப்பும் வாடிக்கையாளர் சேவை மையத்திற்கு பேசப்பட்டிருந்ததையும் நீதிமன்றம் கண்டறிந்தது.

எனவே, நீதிமன்றம் அந்த சிம் கார்டை உபயோகித்தவர் ஒன்று மீதத் தொகையை பரிசோதிக்கவோ அல்லது ரீசார்ஜ் செய்வதற்காகவோ தான் உபயோகிக்கப்பட்டது என்ற முடிவுக்கு வந்து அந்த சாட்சியத்தை நிராகரித்தது.

மேலும் பஸ்லியோ அல்லது ஷாவோ ஸ்ரீநகரில் உள்ள மாஜிஸ்ட்ரேட் முன்பாக டிரான்சிட் ரிமாண்டிற்காக (ஒரு மாவட்டத்திற்கு வெளியே பிறப்பிக்கப்பட்ட வாரண்டிற்கு (சிறைப்படுத்தும் பற்றாணை) கைது செய்யப்




படும் நபர் உள்ள மாவட்டத்தின் மாஜிஸ்ட்ரேட் முன்பாக ஆஜர்படுத்தி ஆணை பெறுவது டிரான்சிட் ரிமாண்ட்) ஆஜர்படுத்தப்படாதது குற்றம் சாட்டப்பட்டவர்கள் ஸ்ரீநகரில் வைத்து தான் கைது செய்யப்பட்டார்கள் என்ற அவர்களின் கூற்றை மிகத் தீவிரமாக சந்தேகம் கொள்ள வைத்தது.

மூன்றாவதாக குற்றம் சாட்டப்பட்ட தாரிக் அஹ்மது தார் என்பவரை பொருத்தவரையில் அந்த குண்டு வெடிப்பு வழக்கில் சுமத்தப்பட்ட அனைத்து குற்றசாட்டுகளில் இருந்தும் விடுவிக்கப்பட்டார். ஆனால், அபூ அல்கமா என்ற லஷ்கரே தொய்பா செயற்பாட்டாளரின் சாட்டிலைட் போனை இடைமறித்து கேட்டதில் இரண்டு அழைப்புகள் தார் உபயோகித்த கைபேசிக்கு வந்ததால் அவர் லஷ்கரே தொய்பா இயக்கத்துடன் உள்ள தொடர்பிற்காக குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டார். ஆயினும் காவல்துறை இடைமறித்து கேட்ட சாட்டிலைட் போன் லஷ்கரே தொய்பா இயக்கத்தை சேர்ந்தவருடையது தான் என்பதற்கான எந்த விதமான தீர்க்கமான சாட்சியங்களும் இல்லை.

– இன்ஷா அல்லாஹ் தொடரும்...




# மண்டியிட்டு மன்னிப்புக் கேட்கிறேன்...

## வரலாறு படைத்த சாவர்க்கரின் கடிதம்

**செல்லுலார் சிறை**
*போர்ட் ப்ளேயர்*
*மார்ச்-30, 1920*

பெறுநர்,

அந்தமான் முதன்மை கமிஷனர்

தனி நபர்கள் எவரும் மன்னிப்புக் கோரினால் அதனை அரசாங்கம் கவனத்தில் ஏற்றுக்கொள்ளும் என்றும், ஒருவரை விடுவித்தால் நாட்டிற்கு எவ்விதத்திலும் அபாயமாக இருக்கமாட்டார் என்றும் அறியும் பட்சத்தில் அவருக்கு ராஜாங்க மன்னிப்பு (Royal Clemency) அளிக்கப்படும் என்று இந்திய அரசாங்கத்திற்கான உள்துறை அமைச்சகத்தின் மாண்புமிகு உறுப்பினர் சமீபத்திய அறிக்கையில் கூறியுள்ளார். இதனை கருத்தில் கொண்டு என் தரப்பு வாதத்தை, அதிக தாமதம் ஆவதற்கு முன் எடுத்துக்கூற ஒரு இறுதி வாய்ப்பை அளிக்குமாறு மிகவும் பணிவுடன் (Humbly begs) கேட்டுக் கொள்கிறேன்.

எனது இம்மனுவை உயிர்திரு இந்திய வைசராய் அவர்களுக்கு அனுப்பி வைப்பதில் நீங்கள் எவ்வித வெறுப்புணர்வையும் காட்ட மாட்டீர்கள் (என நம்புகிறேன்). அரசாங்கத்தின் முடிவுகள் எப்படி இருந்தாலும் பரவாயில்லை. என்னுடைய நிலையை அவர்கள் கேட்டறிந் தாலே நான் மனநிறைவு கொள்வேன்.

*1)* அரசியல் முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற நோக்கத்திற்காக சட்டத்தை மீறியவர் களுக்கு கருணை காட்டப்படும் என்று ராஜாங்க அறிவிப்பு மிகவும் பெருந்தன்மையுடன் கூறுகிறது. எனது மற்றும் என் சகோதரனது வழக்குகள் இத்தரத்தைச் சார்ந்தவைதான். தனிப்பட்ட முறை யில் தவறிழைத்ததாகவோ அல்லது நலன்களை தடை செய்ததாகவோ அரசாங்கம் மீது நானோ அல்லது எனது குடும்பத்தினரோ குற்றம் சுமத்துவ தற்கில்லை. எனக்கு நல்லதொரு எதிர்காலம் இருந்தது. பயங்கரமான இப்பாதையில் பயணித்த தால் நான் எதையும் சம்பாதிக்கவில்லை.

மாறாக, தனிப்பட்ட முறையில் அனைத்தை யும் இழந்துள்ளேன். "இவ்வளவு கல்வி கேள்வி களை பெற்றுள்ள நீங்கள் எமது அரசாங்கத்தில் உயர் பதவிகளை பெற்றிருக்கலாம்." என்று உள்துறை அமைச்சகத்தின் உயர்திரு உறுப்பினர் ஒருவர் 1913ஆம் ஆண்டு என்னிடம் கூறியது இதற்கு போதிய சான்றாகும். என்னுடைய இந்த வாக்குமூலத்திற்குப் பின்னரும் எவருக்காவது என்னுடைய உட்கருத்து குறித்து சந்தேகம் இருக்குமானால், 1909ஆம் ஆண்டிலிருந்து என்னுடைய குடும்பத்தினர் எவர் மீதும் வழக்குகள் ஏதும் கிடையாது என்பதை நான் அவர்களுக்கு பணிவுடன் சுட்டிக் காட்டுகிறேன்.

இந்த வழக்கின் அடிப்படையான என்னு டைய செயல்பாடுகள் அனைத்தும் அதற்கு முந்தைய வருடங்களுக்கு உட்பட்டவை. மாசினியின் சங்கங்களை நடத்தியது போன்றவை

அனைத்தும் 1899ஆம் ஆண்டிலிருந்து 1909ஆம் ஆண்டுவரை உள்ளதுதான் என்பதை வழக்குகள் நீதிபதிகள் மற்றும் ரௌலட் அறிக்கை ஆகியவை தெரிவிக்கின்றன. ஆனால் எவராவது எங்களுடைய வழக்குகளில் இதே நிலையைக் கொள்வார்களா? ஏறத்தாழ 5000 இந்திய மக்கள் கையெழுத்திட்டு மாட்சிமை பொருந்திய தங்களுக்கு அனுப்பிய ராட்சஸ கோரிக்கையில் (Petition) என்னை தனிச் சிறப்பாக குறிப்பிட்டுள்ளார்கள். விசாரணையில் எனக்கு நீதி மறுக்கப்பட்டது. தற்போது மக்களின் தீர்ப்பானது அரசியல் முன்னேற்றம் தான் என்னுடைய செயல்கள் அனைத்திற்குமான மூலம் என்றும் சட்டங்களை மீறியதற்கும் இதுவே காரணம் என்றும் கருத்து தெரிவித்துள்ளது.

2) கொலைக்கு உடந்தையாக இருந்த இந்த இரண்டாவது வழக்கும் ராஜாங்க கருணையில் இருந்து என்னைத் தூரமாக்கிவிடாது. இவ்வாறு நான் கூறுவதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன.

1) குற்றத்தின் நோக்கம் தவிர்த்து, குற்றத்தின் தன்மை மற்றும் பிரிவு அல்லது நீதிமன்றம் குறித்து இந்த அறிவிப்பானது எவ்வித வித்தியாசத்தையும் காட்டவில்லை. குற்றத்திற்கான நோக்கம் அரசியல் இலாபமாக இருக்க வேண்டும் என்று மட்டுமே அது குறிக்கிறது.

2) இரண்டாவதாக அரசாங்கமும் இதனை அதே விதத்தில்தான் விசாரித்து பாரின், ஹாசு உள்ளிட்ட பிறரையும் விடுவித்துள்ளது. முக்கிய அரசாங்க அதிகாரிகளை கொலை செய்ய ஆட்களை அனுப்பியதும் தாங்கள்தான் என்று தங்களின் வாக்குமூலத்தில் அவர்கள் கூறியுள்ளார்கள். பாரினின் சகோதரன் அரபிந்தா சம்பந்தப்பட்ட 'வந்தே மாதரம்' நாளிதழ் வழக்கை விசாரித்தவர் இந்த நீதிபதிதான். ஆனால் "பாரின்" விடுதலை அடைவதை எதுவும் தடை செய்யவில்லை. ஆனால் என் மீதான வழக்கோ பலஹீனமானதுதான். திரு. ஜாக்ஸன் அவர்களை கொலை செய்ய நடந்த சதி குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றும் நான் அப்போது இங்கிலாந்தில் இருந்தேன் என்றும் வழக்கு விசாரணையில் ஒப்புக் கொள்ளப்பட்டது. என்னுடைய சகோதரனின் கைதுக்கு முன்னால் ஆயுதங்களை அனுப்பியதிலும் எனக்கு தொடர்பில்லை.

ஆகவே குறிப்பாக எந்தவொரு அதிகாரி மீதும் தனிப்பட்ட வன்மம் ஏதும் எனக்கில்லை என்பது தெளிவாகிறது.

கென்னடி கொல்லப்பட்ட வெடி குண்டை தயாரித்ததே ஹெம்தான். (ரௌலட் அறிக்கை, பக்கம் 33) ஆனால், இதையெல்லாம் மன்னிப்பு பெறுவதிலிருந்து ஹெம்மை தூரமாக்கி விடவில்லை. சதித்திட்ட வழக்கில் அதிகபட்ச தண்டனை வழங்கப்பட்டதால் பாரினும் மற்றவர்களும் கொலைக்கு உடந்தையாக இருந்ததாக தனியாக குற்றம் சாட்டப்படவில்லை. ஆனால், சதித் திட்ட வழக்கில் நான் சம்பந்தப்படுத்தப்பட்டதால் என்மீது கொலை குற்றம் சுமத்தப்பட்டது.

கொலைக்கு உடந்தையாக இருந்த குற்றச்சாட்டில் உறுதி செய்யப்பட்ட, இன்னும் அதில் முக்கிய பகுதி வகித்த பாரின் மற்றும் ஹெம் ஆகியோருக்கு மன்னிப்பு வழங்கியதுபோல் எனக்கும் மன்னிப்பு வழங்கப்பட வேண்டும் என்பதை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். கொலை குற்றம் என்ற பிரிவில் என் மீது வழக்குத் தொடரப்பட்டபோதும், செய்த குற்றத்திற்கு தான் தண்டனை வழங்க வேண்டும் என்பதை நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கொலை செய்தது பற்றி எவ்வித வழக்கும் இல்லாததால் என் சகோதரன் விஷயத்தில் இக்கேள்வி எழுவதற்கான வாய்ப்பில்லை.

3) பாரின், ஹெம் மற்றும் பிறரின் விசயத்தில் அரசாங்கம் இவ்வறிவிப்பை பயன்படுத்தியதை வைத்து பார்க்கும்பொழுது, ராஜாங்க மன்னிப்பிற்கு நானும் எனது சகோதரனும் முழு அளவில் (In the fullest measure) தகுதி உடையவர்கள் என்பது தெளிவாகிறது. ஆனால் இது நாட்டின் பாதுகாப்பிற்கு உடன்படுமா? உள்துறை அதிகாரி தெரிவித்ததுபோல் அரசாங்கத்தை எதிர்க்கும் வன்முறையாளர்கள் (Microlestes of anarchism) நாங்கள் அல்ல என்பதை தெளிவாக அறிவிக்கிறேன். இம்முயற்சிகளின் இராணுவப் பயிற்சிகளில் நம்பிக்கை இருந்தபோதும் அரசாங்கத்தை எதிர்க்கும் கொள்கையில் எனக்கு உடன்பாடு கிடையாது. முன்னர் நான் கொண்டிருந்த தீவிரவாத சிந்தனைகள் குறித்து கூற வேண்டுமானால், அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு கட்டுப்பட்டு நடப்பதில் எனது உறுதிப்பாட்டை நான் இதற்கு

முன்னரும் கூறியுள்ளேன்.

*1914* மற்றும் *1918*ல் அரசாங்கத்திற்கு எழுதிய கோரிக்கையிலும் இதனை குறிப்பிட்டுள்ளேன். திரு. மாண்டேக் அவர்கள் அரசியல் அமைப்புச் சட்டத்தை எழுத ஆரம்பித்த நாட்களிலிலேயே நான் இதனை கூறிவிட்டேன். மன்னிப்புப் பெற வேண்டும் என்ற நோக்கத்திற்காக மட்டும் நான் இதனை கூறவில்லை. அதனை அடுத்து வந்த சீர்த்திருத்தங்களும் அதனை அடுத்து வந்த அறி-விப்புகளும் என்னுடைய நிலையில் உறுதியை அளித்துள்ளன.

மேலும் சமீபத்தில் முறையான அரசியல் அமைப்பு முன்னேற்றத்திற்கு துணை நிற்பதாக நான் வெளிப்படையாக உறுதி அளித்துள்ளேன். கடந்த காலங்களில் இருந்தது போன்றே தற்போதும் வட, பகுதியில் இருந்து ஆசிய மத வெறிக் கூட்டத்தால் நம் நாட்டிற்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது.

இவர்கள் அப்போது நமது எதிரிகளாக வந்தார்கள். எதிர்காலத்திலும் அவர்கள் எதிரி களாகவே இருப்பார்கள். இப்போது இவர்கள் நண்பர்களாக வர உத்தேசித்த சூழ்நிலையில் இந்தியாவை நேசிக்கும் அறிவுள்ள ஒவ்வொரு வரும் உளப்பூர்வமாகவும் விசுவாசத்துடனும் ஆங்கிலேயர்களுடனும் ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கையை எனக்குத் தருகிறது. அதனால் நான் *1914*ல் போர் ஏற்பட்டவுடன் அரசாங்கத்திற்கு நானே விரும்பி தொண்டாற்ற முன் வந்தேன். ஜெர்மானிய, துருக்கி, ஆப்கான் படையெடுப்பு அப்போது இந்தியாவின் மீது நடக்க வாய்ப்பிருந் தது. நீங்கள் நம்பிக்கை கொண்டாலும் இல்லா விட்டாலும் அரசியல் அமைப்பு விதிகளை பின்பற்றுவதில் எனக்குள்ள உண்மையான எண்ணத்தை மனதார வெளிப்படுத்துகிறேன்.

மேலும் ஆங்கிலேய அரசுடன் பாசப்பி ணைப்பையும் ஏற்படுத்த என்னால் இயன்ற அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறேன். அறிவிப்பில் கூறப்பட்டுள்ள இத்தகைய ராஜ்ஜியம் என்னுடைய மனப்பூர்வ ஒத்துழைப்பை பெறுகிறது. இந்தியர்கள் அல்ல என்ற ஒரே காரணத்திற்காக நான் எந்தவொரு இனத்தையும் குலத்தையும் மக்களையும் வெறுப்ப தில்லை.

*4)* இதன்பின்னரும் அரசாங்கம் என்னிட மிருந்து உத்தரவாதத்தை எதிர்பார்க்குமானால், அரசாங்கம் விரும்பும் குறிப்பிட்ட தீர்க்கமான காலத்திற்கு நானும் எனது சகோதரனும் அரசியலில் ஈடுபடவில்லை என்ற உறுதியை அளிப்பதற்கு தயாராகவே உள்ளேன். மோசமான எனது உடல் நிலை, குடும்பத்தில் உள்ளவர்களின் அன்பான அரவணைப்பை இழந்தது. ஆகிய வற்றை நானே தேடிக்கொண்டேன். இனிவரும் காலங்களில் அமைதியான ஒரு வாழ்க்கையை வாழவே ஆசை கொள்கிறேன். அரசியலுக்கு என்னை இப்போது எதுவும் கொண்டு செல்லாது. ஆக, ஒரு உறுதிமொழியை கொடுக்க வேண்டும் என்ற அவசியம் கூட தற்போதில்லை.

*5)* குறிப்பிட்ட பிராந்தியத்தில் தங்கி இருப்பது எங்களுடைய நடவடிக்கைகள் குறித்து குறிப்பிட்ட காலத்திற்கு காவல்துறைக்கு தகவல் தெரிவிப்பது போன்ற தேச பாதுகாப்பு உத்தர வாதம் அளிக்கும். இதுபோன்ற வாக்குறுதிகளை மகிழ்வுடன் அளிக்க நானும் எனது சகோதரனும் தயாராகவே உள்ளோம். இறுதியாக எந்த மக்களின் பாதுகாப்பு குறித்து பேசப்படுகிறதோ அந்த மக்கள் பழம்பெரும் மிதவாத தலைவர் திரு. சுரேந்திரநாத்திலிருந்து சாதாரண மக்கள் வரை அனைத்து தரப்பினரும் இந்துக்களும், முஸ்லிம்களும் பஞ்சாபிலிருந்து மெட்ராஸ் வரை அனைவரும் எங்களின் உடனடி விடுதலைக்காக தொடர்ந்து கோரிக்கை வைத்த வண்ணம் உள்ளனர். எங்களின் விடுதலை அவர்களின் பாது காப்பிற்கு இடையூராக இருக்காது என்பதையே இது உணர்த்துகிறது. மேலும் எங்கள் மீது சுமத்தப்பட்ட காழ்ப்புணர்ச்சிகளை மக்கள் நீக்கி விட்டார்கள் என்பதையும் இது உணர்த்துகிறது.

*6)* ஆக பெருந்தன்மை மிக்க மன்னிப்பானது எங்களுக்கு அளிக்கப்படாத வரையில் இத்தீர்மா னத்தின் உண்மை நோக்கமானது நிறைவேறவும் செய்யாது. வெறுப்புணர்வுகளும் நீக்கப்படாது என்று மக்களின் உள்ளங்களை நான் எச்சரிக் கிறேன்.

*7)* மேலும் எங்கள் வழக்கின் அனைத்துப் பிரிவுகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன. நாங்கள் பத்து முதல் பதினொரு வருடங்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளோம். ஆனால் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட திரு. சன்யால் நான்கு வருடங்களில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

# சாவர்க்கர் மன்னிப்புக் கடிதமும்... பகத்சிங்கின் கடிதமும்...

சாவர்க்கரின் வாழ்நாள் சாதனை என்னவெனில் 8 முறை ஆங்கிலேயர்களுக்கு மன்னிப்புக் கடிதம் எழுதியதுதான். இந்த மன்னிப்புக் கடிதங்களில், ஆங்கிலேயர்களுக்கு நிபந்தனை இன்றி அடிமைப்பட்டுக் கிடப்பேன் என்பதும் ஒன்று. தேசப் பிரிவினை அவரது பிரிதொரு சாதனை.

சாவர்க்கரின் கடிதத்தை விரிவாகத் தந்துள்ளோம்.

ஆனால் வீரதியாகி பகத்சிங்-கும் ஆங்கிலேயர்களுக்கும் கடிதம் ஒன்றை எழுதினார். அந்தக் கடிதத்தில் அவர் இப்படிக் குறிப்பிட்டார்.

"உங்கள் நீதிமன்றத்தின் தீர்ப்பு எங்களைப் போர் கைதிகளாக வகைப்படுத்துகின்றது. ஆம், நாங்கள் போர்க்கைதிகள் தாம். ஆகவே எங்களை நீங்கள் தூக்கிலிடக் கூடாது. மாறாக துப்பாக்கித் தோட்டாக்களால் சுட வேண்டும். எங்களுக்குப் பின்னும் இந்தப் போர் தொடரும். எங்களைக் கொல்லப்போகும் இராணுவ அதிகாரிகளை எப்போது அனுப்புகின்றீர்கள்."

*1931* ஆம் ஆண்டு பகத்சிங் ஆங்கிலேயே அதிகாரிக்கு அனுப்பிய கடிதம்.

இப்படி மரணத்தை கிஞ்சிற்றும் பொருட்படுத்தாமல் இந்தக் கடிதத்தை எழுதியபோது பகத்சிங்-இன் வயது *23*. வாழ வேண்டிய வயதில், அந்த மன்னிப்புக் கேட்கவில்லை. மரணத்தைக் கேட்கின்றார்.

Extracted from an article from "விகடன்" by Vadiyalingam Natraran : Re-Produced in Vaigarai Velicham, 2020 Nov.

சாவர்க்கரின் கடிதங்களில் ஒன்றில் அவர் இப்படிக் குறிப்பிடுகின்றார். இந்தக் கடிதம் சாவர்க்கரால்,

To,

The Home Member,
Govt. of India. -க்கு எழுதப்பட்டது.

சிறைக் கொடுமைகளை என்னால் தாங்கிட முடியவில்லை. எண்ணெய் ஆலையில் போட்டு வதைக்கின்றார்கள். அரசு கருணைக் காட்டி என்னை விடுவித்தால், நான் (ஆங்கிலேயர்களின்) அரசு அமைப்பின் தீவிர ஆதரவாளராகச் செயல்படுவேன் என உறுதி கூறுகின்றேன். எந்தச் சூழ்நிலையிலும் அரசுக்கு சேவகம் செய்ய நான் தயாராக இருக்கின்றேன். எங்களுக்கு அன்னையாக இருக்கும் (ஆங்கில) அரசே கருணை காட்டிடவில்லை என்றால் இந்த மகன்வேறு எங்கே சென்று நிற்பேன்.

வன்முறை வழக்கில் கைது செய்யப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டவர்கள் ஓராண்டிற்குள் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இந்தியாவிலும் இங்கும் செக்கிழுத்தல் போன்ற பல கடினமான வேலைகளை நாங்கள் செய்துள்ளோம். இதற்கு முன்னர் விதிக்கப்பட்டவர்களின் நடத்தை முறைகளை விட எங்களின் நடத்தைகள் கேள்விக்குறியாக இருக்கவில்லை. அவர்கள் போர்ட் பிளேய்ரில் கூட சதித்திட்டம் தீட்டியதாக சந்தேகப்பட்டு மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டனர். ஆனால் இதற்கு மாற்றமாக நாங்கள் இருவரும் இதுநாள் வரை மேற்கொண்டு வந்துள்ளோம். ஏறத்தாழ கடந்த ஆறு ஆண்டுகளாக சாதாரண நடத்தை முறைகளை மீறியதாகக் கூட எங்கள் மீது வழக்கு கிடையாது.

இறுதியாக அந்தமான உள்ளிட்ட சிறைச்சாலைகளில் இருந்து நூற்றுக்கணக்கான அரசியல் கைதிகள் விடுவித்ததற்கான என்னுடைய நன்றியை மிகவும் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இது குறித்து *1914* மற்றும் *1918* ஆம் ஆண்டுகளில் நான் எழுதிய மனுக்களின் கோரிக்கையில் பாதியை நிறைவேற்றியுள்ளீர்கள். இதே காரணங்களுக்காக சிறையில் அடைக்கப்பட்டுள்ள நான், என் சகோதரன் உள்ளிட்ட கைதிகளை மேன்மை பொருந்திய தாங்கள் விடுதலை செய்வீர்கள் என நம்புகிறேன்.



குறிப்பாக கடந்த பல ஆண்டுகளாக மஹாராஷ்டிராவின் அரசியல் சூழ்நிலையானது மூர்க்கத்தனமான தொல்லைகள் அற்றதாகவே உள்ளது. இதுவரை விடுதலை செய்யப்பட்டவர்களின் நடத்தைகளை கருத்தில் கொண்டு எங்களுடைய விடுதலைக்கு கட்டுப்பாடுகளை இடக்கூடாது என்று நான் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறேன். பிறர் செய்த தவறுக்காக எங்களை தண்டிப்பதும் பொது மன்னிப்பை எங்களுக்கு மறுப்பதும் அறிவுக்கு ஒவ்வாத செயலாகவே இருக்கும்.

அறிவுள்ள உறுதிமொழிகளை கொடுப்பதற்கு தயாராக உள்ளது, துருக்கி - ஆஃப்கான் வெறியர்களின் எதிர்ப்பில் இருந்து இரு நாடுகளையும் காப்பாற்ற உங்களுடன் உண்மையான ஒத்துழைப்பை நல்குவது போன்ற காரணங்களால் அரசாங்கம் என்னை விடுவித்து என்னுடைய தனிப்பட்ட நன்றியைச் சம்பாதித்துக் கொள்ளும் என நம்புகிறேன். வளமான வாய்ப்புகளை கொண்டிருந்த என் ஆரம்பகால வாழ்க்கையானது விரைவாகவே இருள் மயமானது. இது எனக்கு கடுமையான வருத்தத்தை அளித்துள்ளது. என்னுடைய விடுதலையானது எனக்கு ஒரு புது வாழ்வை அளித்து உணர்ச்சிமிக்க கீழ்ப்படியும் நிலையில் உள்ள எனது இதயத்திற்கு இதமாக அமையும். வல்லமை தோல்விகண்ட இடங்களில் கூட பெருந்தன்மை வெற்றி பெற்றுள்ளது.

நான் முதன்மை கமிஷனரிடம் அவரின் பணி காலங்களில் கொண்டுள்ள தனிப்பட்ட மரியாதை அப்போது நான் சந்தித்த நிராசைகள் ஆகியவற்றை நினைவில் கொண்டு, எவ்விதத்திலும் பாதிப்பில்லாத என்னுடைய கோரிக்கையை வைஸ்ராயக்கு அனுப்புவதில் வன்மம் கொள்ள மாட்டார் என எண்ணுகிறேன். மேண்மை பொருந்திய இந்தியாவின் வைஸ்ராய் அவர்களுக்கு இந்த மனுவை அவரின் சொந்த பரிந்துரைகளுடன் அனுப்பி வைப்பார் என்றும் நம்புகிறேன்.

*தங்களின் மிகவும் பணிவான ஊழியன்,*

*கையொப்பம்*
*குற்றவாளி எண். 32778*

இக்கடிதத்தை படிப்பவர்களுக்கு பல கேள்விகள் எழலாம். எழுதப்பட்ட வருடத்தையும், எழுத்து நடையையும் நோக்கும் போது இது விடுதலைப் போராட்டக் காலத்தில் ஆங்கிலேயே அரசுக்கு எழுதப்பட்டது என்பது தெரிகிறது. எழுத்து நடையைப் பார்த்தால் ஆங்கிலேயரிடம் மன்னிப்பு கேட்டு எழுதப்பட்டது. இன்னும் சொன்னால் உயிர்ப்பிச்சை கேட்டு எழுதப்பட்டது என்பது தெளிவாகிறது. ஆனால் இவ்வளவு கீழ்த்தரமான அடிமை நிலைக்கு தன்னை தாழ்த்தி ஆங்கிலேயரிடம் மண்டியிட்ட இம்மாபாதகன் யார்? தனக்கு மன்னிப்பு வேண்டும் என்பதற்காக பிறரை காட்டிக் கொடுக்கவும் தயங்காத இந்த நபர் யார்? அவரை அறிந்துகொள்வதில் உங்களுக்குள் ஆர்வம் மிகுதியாக காணப்படும்.

ஆனால் விடுதலைப் போரின் உண்மை வரலாற்றை அறிந்தவர்கள், இந்த மன்னிப்பு கடித நபரை அடையாளம் கண்டிருப்பார்கள். ஆம்! மன்னிப்புக் கடிதம் என்றவுடன் அவரது பெயர் நமது ஞாபகத்திற்கு வந்துவிடும். யாருடைய உருவப்படத்தை பாராளுமன்ற வளாகத்தினுள் வைத்து பாசிசவாதிகள் அழகுபார்த்தார்களோ அதே வினாயக் தாமேதர் சாவர்க்கர்தான் இக்கடிதத்திற்கு சொந்தக்காரர். இவர் எழுதிய மன்னிப்புக் கடிதங்கள் அவ்வப்போது வெளி வந்து சாவர்க்கர் மற்றும் பாசிசவாதிகளின்

உண்மை முகத்தை மக்களுக்கு உணர்த்தின. சாவர்க்கரின் உண்மை முகத்தை முதலில் வெளிக் கொணர்ந்ததும் ஒரு பாசிசவாதிதான். வரலாற் றாசிரியர் என்ற போர்வையில் உலாவந்த R.C. மஜூம்தார். 1975 ஆம் ஆண்டு Penal Settlements in Andaman என்ற பெயரில் ஒரு புத்தகத்தை எழுதினார். சாவர்க்கரை தன்னால் இயன்றவரை போற்றிப் புகழ்ந்து எழுதியபோதும் உண்மையை அவரால் மறைக்க இயலவில்லை. சாவர்க்கர் எழுதிய மன்னிப்புகளின் குவியலில் இருந்து ஒரு கடிதம் அப்போதுதான் வெளிவந்தது. அன்றி லிருந்து அவை தொடர்ந்து வந்தவண்ணம் உள்ளன.

இங்கே நாம் குறிப்பிட்டுள்ள இக்கடிதம் தற்போதுதான் வெளி உலகிற்கு கிடைத்துள்ளது. இதனை பிரண்ட் லைன், ஏப்ரல்-8,2005 இதழில் A.G. நூரானி அவர்கள் தம்முடைய கட்டுரையில் வெளியிடுள்ளார்கள். இந்திய தேசிய பத்திரப் பாதுகாப்பு ஆணையத்திடமிருந்து (National Archives of India) சிறப்புமிக்க ஆவணத்தை பெற்றுள்ளார்கள். தமிழ் பேசும் மக்களும் இந்த உண்மையை அறிய வேண்டும் என்பதற்காகவே இதனை நாம் வைகறையில் வெளியிடுகிறோம்.

விடுதலைக்காக மக்கள் போராடிக் கொண்டி ருந்த காலத்தில் தன்மானத்தை அடகுவைத்து மன்னிப்புக் கடிதம் எழுதுவதையே வேலையாக கொண்டுள்ளார் சாவர்க்கர். இவரின் பாசிச சகாக்களும் மற்றவர்களும் இப்பணியையும், காட்டிக் கொடுக்கும் பணியையும் அப்போது செய்து வந்துள்ளனர்.

ஆனால், இன்றோ சாவர்க்கரின் வாரிசுகள் தேசபக்தி குறித்து வாய்கிழிய பேசுவதோடு மட்டுமல்லாமல் விடுதலைக்காகப் போராடிய முஸ்லிம்களை தேசப்பற்று இல்லாதவர்கள் என்று கூறுவது வேடிக்கையானது.

விடுதலைக்காகப் போராடி தூக்குக் கயிற்றை முத்தமிட்ட முஸ்லிம்களின் முன் நிற்பதற்குக் கூட தகுதியற்றவர்கள் இவர்கள். மரண தண்ட னையை எதிர்பார்த்து கஃப்பன் துணியுடன் நீதி மன்றத்திற்கு வந்த முஸ்லிம்களின் வீரம் எங்கே? ஆங்கிலேயரின் சட்டங்களுக்கு அடிபணிந்து அவர்களிடம் மண்டியிட்ட பாசிசவாதிகள் எங்கே? தான் மட்டும் தனியாக நில்லாமல் தன் சகோதரன், குடும்பம் என அனைவரின் தன்மானத்தையும் அல்லவா அடமானம் வைத்துவிட்டார் சாவர்க்கர்.

இக்கடிதத்தில் சாவர்க்கர் பயன்படுத்தியுள்ள ஆங்கில வார்த்தைகள் சிலவற்றிற்கு இணையான தமிழ் வார்த்தைகள் ஏதுமில்லை. அவற்றிற்கு ஒத்த பொருளை தரும் வார்த்தையை கொடுத் துள்ளோம். அதற்காகத்தான் ஒருசில இடங்களில் ஆங்கில வார்த்தைகளையும் அடைப்புக் குறிக்குள் கொடுத்துள்ளோம்.

Clemency (மன்னிப்பு, கருணை) என்ற வார்த் தையை மிகவும் தாராளமாகப் பயன்படுத்தியுள் ளார் சாவர்க்கர்.

இனி, இக்கடிதத்திற்கு பதில் என்ற பெயரில் சில சாக்குபோக்குகளை ஃபாசிசவாதிகள் கூறுவார்கள் அவற்றிற்கான பதிலையும் நாம் இப்போதே அளித்து விடுகிறோம். உடல் நிலை மோசமாக இருந்த காரணத்தினால்தான் அவர் மன்னிப்புக் கேட்டார் என்று கூறுவார்கள்.

ஆனால், அவர் பேதி நோயிலிருந்து ஐந்து மாதங்களுக்கு முன்பே பூரண குணமடைந்து விட்டார். ஆக திடகார்த்த உடல் நிலையுடன் தான் இக்கடிதத்தை எழுதியுள்ளார். இதுஒரு 'ராஜதந்திரம்' என்று கூறுவார்கள். இவரின் கடிதங்களை படிக்கும் சாதாரண அறிவு படைத்த ஒருவர் கூட இதனை ராஜதந்திரம் என்று கூற மாட்டார். உண்மையான வீரன் எவனும் இவ்வளவு தரம் தாழ்ந்து ஒரு ராஜரந்திரத்தை செய்யமாட்டான். அதுவல்லாமல், ராஜதந்திரம் என்ற பெயரில் அடுத்தவர்களை காட்டிக் கொடுக்க ஒரு விடுதலைப்போராட்ட வீரன் முன்வர மாட்டான். அடுத்தவர்களை தூண்டி விட்டு குளிர் காய்ந்து வந்த சாவர்க்கர், தான் மாட்டியவுடன், உயிர் பிழைக்க மேற்கொண்ட சுயநல முயற்சிகளே இவை. ஆக சாவர்க்கர் எழுதியது வெறும் மடல் அல்ல; ஆங்கிலேயரிடம் தன்னையும் தன் குடும்பத்தையும் அடிமையாக மாற்ற அவர் இயற்றிய அடிமை சாசனம். இன்னும் சொன்னால் மடிப்பிச்சை வேண்டி இவர் எழுதிய ஓர் அவமானக் கடிதம்.

ஃபாசிசவாதிகளின் உண்மை முகத்தை சமுதாயம் இனியேனும் உணர வேண்டும்; அதை பிறருக்கும் எடுத்துரைக்க வேண்டும்.

- Frontline, April-8




# பகடை காயாக பண்டிட்கள்

# பா.ஜ.க-வின் அரசியல்

இந்தியாவின் குடிமக்களே எங்களை காப்பாற்றுங்கள். இப்படி ஒரு ட்வீட்டை பதிவு செய்து பாஜகவின் ஆட்சியில் பண்டிட்கள் ஆபத்தில் இருக்கிறார்கள் என்பதை இந்திய மக்களுக்கு உணர்த்தியுள்ளனர் காஷ்மீர் பண்டிட்டுகள்.

காஷ்மிரி பண்டிட்களின் அமைப்பான காஷ்மிரி பண்டிட் சங்கர்ஷ் சமிதியின் (KPSS) டிவிட்டர் கணக்கில் இருந்து தான் கடந்த ஜூன் 13 அன்று பின்வரும் பதிவு இடப்பட்டுள்ளது.

‘இந்தியாவின் குடிமக்களே எங்களை காப்பாற்றுங்கள். சந்தேகப்படும்படியான ஏதோ ஒன்று எங்களுக்கு எதிராக நடக்கவிருக்கிறது.’

1990களில் காஷ்மிர் பள்ளத்தாக்கில் ஏற்பட்ட கிளர்ச்சியில் பல காஷ்மிர் பண்டிதர்கள் அங்கிருந்து வெளியேறி ஜம்மு, டில்லி மற்றும் இந்தியாவின் இதரபகுதிகளில் குடியேறினர். அந்த சமயத்தில் அங்கிருந்து வெளியேறாதவர்களை கூட தற்போது அச்சத்தின் பிடியில் தள்ளியிருக்கின்றது மோடியின் ஆட்சி.

பண்டிதர்களும், குடியேறியவர்களும் மற்றும் சிலரும் தொடர்ச்சியாக கொலை செய்யப்பட்டதால் அங்கே ஒரு பாதுகாப்பற்ற சூழ்நிலை நிலவி வருகிறது. எனவே இந்திய மக்களின் கவனத்தை இழுப்பதற்காகவே அப்படி ஒரு டிவிட்டை பதிவு செய்ததாக Article 14 இணைய தளத்திற்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார் காஷ்மிரி பண்டிட் சங்கர்ஷ் சமிதி அமைப்பின் தலைவர் டிக்கோ (Sanjey Tickoo).

இந்த நேரத்தில் தான் காஷ்மீரின் நிலைமை முன்னெப்பொழுதையும் விட நன்றாக உள்ளதாகவும், ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் வருகை புரிகின்றனர். வளர்ச்சி திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு கொண்டிருக்கின்றன என்று கூறியுள்ளது ஜம்மு காஷ்மீர் அரசு.

எல்லாமே நன்றாக போய் கொண்டிருக்கிறது என்று பொய் கூறுகின்றது காஷ்மீர் அரசு. 5 ஆகஸ்ட் 2019 இல் பிரிவு 370 ஐ ரத்து செய்யப் போவதாக மோடி அறிவித்தபோது ஏற்பட்ட மரண பயம் மீண்டும் இப்பொழுது தொற்றி கொண்டுள்ளது என்கிறார் டிக்கோ.

1990களில் பண்டிட்களிடம் ஏற்பட்ட அதே பயத்தை அவர்கள் இப்போது உணருகின்றனர். 1989இலிருந்து இதுவரை 209 காஷ்மீர் பண்டிட்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று மே 2008 இல் அறிவித்தது ஜம்மு காஷ்மீர் காவல் துறை. 2021 இல் 89 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று கூறுகிறது காவல்துறை. எனினும் 1990 களில் இருந்து இதுவரை 803 பேர் கொல்லப் பட்டுள்ளனர் என்கிறார் டிக்கோ.

எனினும் 272 கிராமங்களில் வசிக்கும் 808 குடும்பங்கள் காஷ்மீரை விட்டு வெளியேற வில்லை. தொடர்ந்து அவர்கள் எந்தவித தொந்தர வுக்கும் ஆளாகாமல் முஸ்லிம் சமூகத்துடன் இணைந்தே அங்கே வாழ்ந்து வருகின்றனர்.

காஷ்மீர் சிறப்பு அதிகாரம் நீக்கப்பட்ட நாளன்று நான் என்னுடைய அனைத்து ஆவணங் களையும் ஒரு பெட்டியில் வைத்து அருகாமை யில் வசித்த ஒரு முஸ்லிம் அண்டை வீட்டாரிடம் கொடுத்து விட்டேன். ஏனெனில் சிறப்பு அதிகாரம் நீக்கப்பட்டதால் பொதுமக்களால் நாங்கள் தாக்கப்படலாம் என்ற அச்சம் நிலவியது. எனினும் அதிர்ஷ்டவசமாக அப்படி ஒரு நிகழ்வு அன்று நடக்கவில்லை.

ஆனால் என்ன நடந்தது என்றால் கொலைகள் நடக்க ஆரம்பித்து விட்டன. பிரிவு 370 ரத்து செய்த நாளிலிருந்து ஜூன் 2022 வரை 15 ஹிந்துக்கள் கொல்லப்பட்டுள்ளனர். அதில் நான்கு பேர் காஷ்மீர் பண்டிட்டுகள்.

5 அக்டோபர் 2021 அன்று மக்கன் லால் பிந்துரு எந்த என்ற பிரபலமான காஷ்மீர் பண்டிட் அவரது கடையில் வைத்து கொல்லப்பட்ட பின்பு, டிக்கோவை அவரது வீட்டில் இருந்து வெளியேற்றி பாதுகாப்பான இடத்தில் அமர்த்தி யது ஜம்மு காஷ்மீர் காவல்துறை. அதன் பின்பு அவர் மூன்று பாதுகாப்பாளர்கள் துணை உடனே வீட்டிற்கு வந்தார். அவரது வீட்டை சுற்றி கேமராக்களும் பொருத்தப்பட்டன.

நான் வீட்டிற்கு திரும்பிய பொழுது என்னை எது மிகவும் காயப்படுத்தியது என்றால் என்னை பல ஆண்டுகளாக அதுவரை தெரிந்து வைத்திருந் தவர்கள் என்னை கண்டு கொள்ளவே இல்லை.

என்னை பார்க்க வேண்டும் என்றோ நான் நலமாக இருக்கிறேனா என்றோ ஒருவர் கூட நான் வசிக்கும் பகுதியில் இருந்து, ஏன் என் அண்டை வீட்டார் கூட வந்து கேட்கவில்லை என்று வருத்தப்பட்டுள்ளார் டிக்கோ.

மே 2022 இல் ராகுல் பட் என்ற காஷ்மீர் பண்டிட் சுட்டுக் கொல்லப்பட்டார். இவர் 1990களில் காஷ்மீரை விட்டு வெளியேறியவர். 2011 இல் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் பிரதமராக இருந்த மன்மோகன் சிங் அவர்களால் காஷ்மீர் பண்டிட்களின் மறுவாழ்விற்காக அறிமுகப்படுத்தப்பட்ட பிரதம மந்திரி சிறப்பு வேலை வாய்ப்பு திட்டத்தில் மூலம் பணி கிடைக்கப்பெற்று காஷ்மீரில் குடியேறியவர்.

ராகுல் பட்டின் கொலை காஷ்மீர் பள்ளத் தாக்கில் பணியாற்றிய அரசு ஊழியர்களிடையே பெரிய அளவு போராட்டத்தை தூண்ட காரண மாகியது. ஸ்ரீநகரில் சாலைகளை அவர்கள் மறித்தனர். தங்களை பாதுகாப்பான இடத்திற்கு குடி அமர்த்துமாறு கோரிக்கை வைத்தனர். ஆனால் அந்த கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட வில்லை.

ஜூன் 20 அன்று போராட்டக்காரர்களை ஒரு இடத்தில் அடைத்தது காஷ்மீர் அரசு. இப்படித் தான் முன்னரும் அவர்கள் அகதிகள் காலணிகளில் வசித்த போதும் நடத்தப்பட்டனர்.

பிரிவு 370 ரத்து செய்த பின்பு ஏற்பட்ட மாற்றங்களை டிக்கோ அளித்த பேட்டியில் இருந்து சுருக்கமாக காண்போம்.

காஷ்மீர் பண்டிட்களை காப்பாற்றுமாறு இந்திய மக்களிடம் ஒரு கோரிக்கையை ட்விட் டர் வழியாக ஜூன் 13 அன்று வைத்தீர்கள். ஏன் இப்படி ஒரு கோரிக்கையை நீங்கள் வைத்தீர்கள் என்று விளக்க முடியுமா?

ஆம், காஷ்மீரின் தெற்குப் பகுதியில் இன்னும் அதிகமான கொலைகள் நடக்கும் என எங்களுக்கு குறிப்பிட்ட தகவல்கள் கிடைத்துள்ளன. அதன் எண்ணிக்கை அதிகமாக இருக்கலாம். மிகவும் எச்சரிக்கையாக இருக்குமாறு எங்கள் சமுதாயத்தை சேர்ந்தவர்களுக்கு போன் மூலம் காவல்துறை கூறியுள்ளது.

நாங்கள் எங்கள் வீட்டை விட்டு வெளியே வர அனுமதிக்கப்படவில்லை. இதே போன்ற தகவல்கள் எங்களுக்கு கடந்த வருடமும் கிடைத்தன. லட்டினென்ட் கவர்னர் மனோஜ் சின்காவை சந்திக்க வேண்டும் என கோரினோம். ஆனால் எந்த பதிலும் வரவில்லை. சமீபத்தில் நடந்த கொலைகள் நாங்கள் ஒரு பாதுகாப்பற்ற சூழ்நிலையில் வாழ்வதாக உணர்த்தியது. காஷ்மீர் பண்டிட்கள் குறிவைத்து கொல்லப்படுவது முடிவுக்கு வரவில்லை.

எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்றும் எங்களுக்கு தெரியாது. எங்களுக்கு என்ன நடக் கின்றது என்பதை மக்கள் தெரிந்து கொள்ள

வேண்டும் என நினைத்தோம். அதனாலேயே அப்படி ஒரு டிவிட்டை நாங்கள் பதிவு செய்தோம்.

*எந்த மாதிரியான அச்சத்தில் காஷ்மீர் பண்டிட்கள் வாழ்ந்து வருகின்றனர்?*

கடந்த சில மாதங்களாக தூக்கமில்லா இரவு களை அனுபவித்து வருகின்றோம். கொல்லப் பட்டு விடுவோமோ என்ற அச்சம் எப்பொழுதும் நிலவுகிறது. எங்களுடைய குடும்பங்கள் பாதுகாப் பாக இல்லை. 1990ல் ஏற்பட்ட அதே நிலைமை இன்று உள்ளது.

*பிரிவு 370ஐ ரத்து செய்தது காஷ்மீர் பண்டிட்களின் நிலைமையை மிகவும் ஆபத்தான தாக மாற்றியுள்ளதா? பண்டிட்களின் பல அமைப்புகள் இந்த ரத்தை வரவேற்று உள்ளனவே?*

ஆபத்தானதாக மாற்றியுள்ளதா என்று கேட்டால், ஓரளவிற்கு ஆம் என்றே கூற வேண்டும். ஆனால் அதற்காக ஒட்டுமொத்த சமுதாயத்தையும் பழி சுமத்த வேண்டும் என்று இல்லை. சில உதிரி அமைப்புகளின் செயலை வைத்து ஒட்டுமொத்த சமுதாயத்தையும் நீங்கள் எடை போட கூடாது. அப்படி செய்தால் நீங்கள் ஒரு முட்டாள். சிலர் இந்த ரத்தை கொண்டாடி மகிழ்ந்தனர் என்பதில் சந்தேகம் இல்லை. அதற்காக எல்லோரையும் நீங்கள் பழி சுமத்த முடியாது. பெரும்பான்மை சமுதாயம் அனுப வித்து வரும் அதே கஷ்டங்களை நாங்களும் அனுபவித்து வருகிறோம். எல்லா சமுதாயத்திலும் சில உதிரி அமைப்புகள் இருக்கும் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

*பிரிவு 370 ரத்தை பற்றி என்ன நினைக்கின் றீர்கள்?*

இது பாஜகவின் நீண்ட கால அஜெண்டா. அவர்கள் பெரும்பான்மையாக வெற்றி பெற்றதும் அதை நிறைவேற்றி விட்டார்கள். மக்கள் தொகை யில் (Demography) மாற்றத்தை பாஜக கொண்டு வந்து விடுமோ என்று இங்கே வசிக்கும் பெரும் பான்மையான மக்கள் அச்சப்படுகின்றனர். இது ஒரு மாயை என நான் நம்புகிறேன். ஏனெனில் அவர்களால் அப்படி செய்ய முடியாது.

*ஏன் அப்படி கூறுகிறீர்கள்?*

2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, இந்த யூனியன் பிரதேசத்தில் 85.67 லட்சம் (8.5 மில்லியன் அல்லது 68.31%) முஸ்லிம்கள் வாழ்கின்றனர். மக்கள் தொகையில் மாற்றத்தை கொண்டு வர அவர்களை கொன்று விடுவீர்களா? முடியாது. உங்களால் செய்ய முடியாது. அல்லது ஒரு கோடி பேரை குடியமர்த்தி விடத்தான் முடியுமா?

*2021 இல் கொலைகள் நடந்த உடனேயே உள்துறை அமைச்சர் அமித் ஷாவை நீங்கள் சந்தித்தர்கள். உங்களுடைய கோரிக்கை என்ன? அவை நிறைவேற்ற பட்டனவா?*

கஷ்மீர் பள்ளத்தாக்கில் வசிக்கும் 808 குடும் பங்களையும் அங்கிருந்து நகர்த்திட வேண்டும், அதன் மூலம் அவர்கள் நிம்மதியாக வாழ்ந்திட முடியும் என்பதும் மட்டும் தான் எங்களிடம் இருந்த ஒரே கோரிக்கை. ஆனால் அது கவனத்தில் எடுத்து கொள்ளப்பட வில்லை. அவர் (ஷா) 2019 ஆகஸ்ட்டிற்கு பின் இதுவரை எத்தனை காஷ்மீர் பண்டிட்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று எங்களிடம் வினவினார். மற்ற ஊர்களில் இருந்து வந்து வேலை பார்பவர்களில் 30 பேர் கொல்லப் பட்டுள்ளனர். பல காஷ்மீர் முஸ்லிம் இளைஞர் களும் கொல்லப்பட்டுள்ளனர். ஆனால் சில காஷ்மீர் பண்டிட்களும் கொல்லப்பட்டுள்ளனர் என்றார் அவர். அவர் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையை வைத்து அரசியல் செய்யலாம் என பார்க்கின்றார் என்பதை நாங்கள் புரிந்து கொண்டோம். உடனடியாக அங்கிருந்து கிளம்பி விட்டோம்.

*தங்கள் சொந்த அரசியல் லாபத்திற்காக பண்டிட்களை பாஜக இரையாக்குகின்றது என்று நீங்கள் குற்றம் சுமத்தி உள்ளீர்கள்?*

அதில் உண்மை இல்லையா? 1990 களில் இருந்தே நாங்கள் அப்படிதான் பயன்படுத்தப் பட்டு கொண்டிருக்கிறோம். எட்டு வருடமாக அவர்கள் (பாஜக) ஆட்சியில் இருக்கிறார்கள். பண்டிட்களின் வாழ்வில் ஏதும் மாற்றம் நடந்துள்ளதா என்ன? உண்மையை கூறின், நிலைமை மோசமடைந்து உள்ளது. குடிபெயர்ந்த பண்டிட்களுக்கு மறுவாழ்வு அளிப்பதில் அவர்கள் தோல்வி அடைந்துள்ளனர். பண்டிட் களுக்காக தற்காலிக வாழ்விடங்களை அமைத்து கொடுத்தது அன்றைய ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு. ஆனால் இவர்கள் சுற்றுலாவை

வளர்த்து எடுப்பதிலேயே கவனம் செலுத்துகின்றனர். மேலும் இங்கு எல்லாமே நன்றாக உள்ளது என்கின்றனர். ஆனால் அதில் உண்மை யில்லை.




*1990 களில் தாக்குதல்கள் அதிகமாக நடந்த நேரத்தில் ஆயிரக்கணக்கான பண்டிட்டுகள் பள்ளத்தாக்கை விட்டு வெளியேறிய போதும் நீங்கள் வெளியேறவில்லை. ஆனால் ஏன் இப்பொழுது வெளியேற வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?*

எல்லாவற்றிற்கும் ஒரு எல்லை உண்டு. அது கடந்து விட்டது என்றால் வேறு என்ன தேர்வு இருக்கும்? எங்களுடைய பிரச்சனைகளை அரசு கவனம் செலுத்துவதில்லை. சொந்த அரசியல் லாபத்திற்காக நாம் பயன்படுத்தபட்டு கொண்டிருக்கிறோம் என்பதை நாங்கள் உணர்ந்து விட்டோம். எங்கள் சமுதாயத்துடைய பொருளாதார சூழ்நிலை நலிவடைந்து கொண்டே செல்கிறது. இங்கே நாங்கள் ஒரு சாதாரண வாழ்கையை நடத்த முடிவதில்லை. பின்னர் ஏன் ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சிக்கு நாங்கள் பலிகடாவாக மாற வேண்டும்? அவர்கள் காஷ்மீர் பண்டிட்களின் பெயரைதான் எப்பொழுதும் குறிப்பிடுகின்றனர். அதனால்தான் இப்பொழுது வெளியேற வேண்டும் என்று நினைக்கின்றோம். கண்ணியமான வாழ்க்கை வாழ வேண்டும் என நினைக்கின்றோம்.

*சமீபத்தில் நடந்த கொலைகளுக்கு பின்பு, பெரும்பான்மை (முஸ்லிம்) சமூக மக்கள் உங்களை சந்தித்தார்களா?*

துரதிருஷ்டவசமாக, அவர்கள் அமைதி காக்கின்றனர். எனக்கு ஏன் என்று தெரியவல்லை. காரணத்தை தேடுகின்றேன். நான் வசிக்கும் இருப்பிடத்தை குறித்து உங்களுக்கு கூறுகிறேன். 60 முஸ்லிம் குடும்பங்கள் இங்கே சுற்றி வசிக்கின்றன. நல்ல முறையிலே அவர்கள் எங்களிடம் நடந்துள்ளனர். நல்ல உரையாடல்கள் எங்களிடையே நடந்துள்ளன.

ஆனால் 2021 அக்டோபரில் என்னை ஜம்மு காஷ்மீர் காவல்துறை பாதுகாப்பான இடத்திற்கு அழைத்து சென்றதற்கு பின் எல்லாமே மாறி விட்டன. போராளிகளின் தாக்குதல் இலக்கில் என்னுடைய பெயரும் உள்ளது. எனவே நான் இடமாற்றம் செய்யப்பட்டேன். ஆனால் நிலைமை சீரான பின்பு நான் என் வீட்டுக்கு மீண்டும் வந்தேன். இந்த பகுதியில் இருந்து ஒருவர் கூட , ஏன் என் அண்டை வீட்டார் கூட வந்து என்னை பார்க்க வில்லை. என்னுடைய நலனை பற்றி விசாரிக்க வில்லை.

*நடந்த எல்லாவற்றிலும் ஜம்மு காஷ்மீர் அரசியல் கட்சிகளின் பங்கு என்ன?*

குழப்பத்திற்கு அவர்களே காரணம். அவர்களுடைய பதவியை தவறாக பயன்படுத்தினர். மக்களின் விருப்பத்திற்கு மாறாக செயல்பட்டனர். வெளிப்படையாக கூற வேண்டுமென்றால் காஷ்மிரிகள் அனைவரையும் இந்தியர்களாக அவர்கள் கருதவில்லை. காஷ்மீர் பண்டிட்களை ஐபி என்கிற மத்திய உளவுத்துறையின் முகவர்களாகவும் முஸ்லிம்களை பாகிஸ்தானியர்களாகவும் சித்தரித்தனர்.

*அவர்கள் மக்களுக்கான நிலைபாட்டை எடுக்கவில்லை. காஷ்மீர் பைல்ஸ் திரைப்படம் காஷ்மீர் பண்டிட்டுகளுக்கு பாதுகாப்பற்ற சூழ்நிலையை உருவாக்கி கொடுத்துள்ளது என்று கூறியுள்ளீர்கள். எப்படி ,?*

ஆம். படத்தில் வரும் பல காட்சிகள் தவறாக சித்தரிக்கப்பட்டுள்ளன. எல்லா காஷ்மீர் முஸ்லிம்களையும் தீவிர போக்கு உடையவர்களாகவும் ஜிகாதிகளாகவும் காட்டியுள்ளனர். இந்துக்கள் எப்படி கொல்லபடுகிறார்கள் என்று படத்தில் காட்சிப்படுத்தப்பட்ட முறை தவறு. அப்படி நடக்கவே இல்லை. நிச்சயமாக அது முஸ்லிம்களை சீண்டி விட்டுள்ளது. இரண்டு சமூகங்களுக்கு இடையே பெரிய விரிசலை உண்டாக்கி உள்ளது என்றுதான் நான் கூறுவேன்.

ஆதாரம்: https://article-14.com

**- அபூஹாசின்**



வீரமகள்

# டீஸ்டா செட்டல்வாட்

**பல்வேறு காரணங்களையும் சொல்லி, அல்லது இட்டுக்கட்டி முஸ்லிம்களும், தலீத்களும் 200 ஆண்டுகளாக இந்த நாட்டில் கோரமாகக் கொலை செய்யப்பட்டு வருகின்றார்கள்.**

*முஸ்லிம்கள் இல்லாத இந்தியாவை உருவாக்க வேண்டும். இங்குள்ள இந்துத்துவா பாசிஸ்ட்டுகளின் 200 ஆண்டுகாலத் திட்டமாகும்.*

இவையெல்லாம் மிகப்பெரிய இனப்படு கொலைகளாகும். இவை எதிர்கால இந்தியாவை உலகமே பழிக்கும் ஓர் பயரங்கர தலைகுனிவை அவமானத்தை ஏற்படுத்திடும் என்பது இந்த நாட்டில் ஒற்றுமையிலும், ஒருமைப்பாட்டிலும், தன்மானத்திலும் நம்பிக்கை உள்ளவர்களின், கவலை தாபம்.

இதனை எப்படியேனும் தடுத்தாக வேண்டும். இந்த நாடு அழகான - விதவிதமான மலர்களைக் கொண்ட ஓர் அழகியப் பூந்தோட்டம். 16 மொழி பேசும் அழகான வீடு என்ற தனித் தன்மைகளைத் தக்க வைத்திட வேண்டும் என்ற எண்ணத்தால் மூழ்கடிக்கப்பட்ட சகோதர, சகோதரிகள் ஏராளம்... ஏராளம்...

**அவர்களில் ஒருவர்தான் வீரமங்கை டீஸ்டா செட்டல்வாட் அவர்கள்.**

இந்து பாசிஸ்ட்டுகளின் திட்டம் நீண்ட காலத்திட்டம் என்பதால் அவர்களுக்கெதிரான திட்டங்களும் நீண்ட காலத் திட்டங்களாக இருக்க வேண்டும் எனத் திட்டம் தீட்டி செயற்களத்தில் குதித்தவர் வீரமங்கை டீஸ்டா செட்டல்வாட் அவர்கள்.

இதனை மனதிற் வைத்துக்கொண்டு தனது சட்ட அறிவைப் பயன்படுத்துவது, இவருடைய தந்தை வழக்கறிஞர். இந்திய அரசின் வழக்கறிஞராக

இருந்தவர். ஜாலியன் வலாபாத் படுகொலையில் கொலை செய்யப்பட்டவர்களுக்கு ஆதரவாக ஆங்கிலேயர்களுக்கு எதிராக வாதாடியவர்.

பாசிச சக்திகளின் வெறுப்பு அரசியலையும், கொலை பாதகங்களையும் தனது சட்ட அறிவோடு எழுத்தாற்றலையும் கொண்டு எதிர்ப்பது என முடிவு செய்தார்.

இந்த இலட்சியத்தோடு 45 ஆண்டுகளாகக் கடினமாக ஓய்வின்றி உழைத்து வருபவர். இவரால் பெரும்பாலும் பாதுகாக்கப்பட்டவர்களும் பயனடைந்தவர்களும் முஸ்லிம்கள்தாம்.

இதனை பல கட்டுரைகள் வழியாக அன்றைய விடியல் வெள்ளி வழியாகவும் இப்போது கடந்த 15 ஆண்டுகளாக வைகறை வெளிச்சம் வழியாகவும் வாசகர்களுக்கு சொல்லி வந்திருக்கின்றோம்.

தன்னுடைய ஆக்கப்பூர்வமான ஆராய்ச்சிகள், ஆதாரங்கள், தர்க்கவாதங்கள் இவற்றின் வழி இந்துத்துவவாதிகளையும் சாதாரண மக்களையும் சீர் செய்து விடலாம், மக்கள் வெறுப்பின் பக்கம் சாய்ந்து விடாமல் காப்பாற்றிடுவது, அறிவாயுதத்தைப் பயன்படுத்தி பாசிச சிந்தனைகளைச் சாய்த்து விடலாம் என அயராது உழைத்தார்.

அத்தோடு, வகுப்புவாதத்தோடு பொருதுவோம் "Communalism! Compact" என்ற ஆங்கில இதழ் ஒன்றையும் தொடங்கினார். இதன் முதல் இதழ் ஜூன் 1993-இல் வெளிவந்தது. இது சாரங் இந்தியா என்ற நிறுவனத்தின் வழி வெளிவந்தது.

இந்த இதழ் தொடங்கப்பட்ட நாள் முதல் அது நிறுத்தப்பட்ட நாள்வரை நாம் அதில் சந்தாதாரராகவும், ஆதரவாளராகவுமிருந்தோம்.

வெறும் எழுத்து பேச்சு, என்பதோடு நின்று விடாமல் இந்துத்துவா பாசிஸ்ட்டுகள், சட்டத்தை மீறும் போதெல்லாம் அவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தினார். பல நேரங்களில் தண்டனைகளையும் வாங்கித் தந்தார்.

பாபரி மஸ்ஜித் - பாபரி மஸ்ஜித்-ஐ எல்லா விபரங்களையும் ரகசியத் தகவல்களையும், அவ்வப்போது திரட்டித் தந்து அதனை இடித்து விடவே முனைகின்றார்கள். அதை இடிப்பதோடு சில அரசியல் இலாபங்களையும் அடைய விரும்புகின்றார்கள் என்பனவற்றையெல்லாம் அன்றைய மத்திய மாநில அரசுகளுக்கு சொல்லிக்கொண்டே இருந்தார். ஆனால், எதுவும் நடக்கவில்லை. மஸ்ஜித் இடிக்கப்பட்டது. இடிக்கப்பட்டப் பின்னணியில் அப்போதைய பிரதமர் நரசிம்ம



ராவ், இடிக்கப்பட்ட மஸ்ஜித் மீண்டும் கட்டிக் கொடுக்கப்படும் என வாக்களித்தார். (இந்த, நரசிம்ம ராவ்தான் இந்தியாவின் முதல் பாசிச பிரதமர் என அறியப்பட்டவர்)

பிரதமர் நரசிம்மராவ் தந்த வாக்குறுதி நிறை வேற்றப்பட வேண்டும். அப்போது மட்டுமே இந்த நாட்டில் ஜனநாயகமும், மத சார்பின்மையும் நிலைக்கும். பாபரி மஸ்ஜித் இடிப்பும் வழக்கும் இந்த நாட்டின் ஜனநாயகத்திற்கும், மதச்சார் பின்மைக்கும் வைக்கப்படும் சோதனை. இதில் அரசாங்கங்களும் நீதிமன்றங்களும், தங்கள் பணி களை - கடமைகளை நிறைவாக நிறைவேற்றிட வேண்டும் எனத் தொடர்ந்து அழுத்தங்களைக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

இறுதியில் பாபரி மஸ்ஜித் விவகாரம் இந்த நாடு ஜனநாயக மதசார்பற்ற நாடுமில்லை, நீதிமன்றங்கள் - தங்கள் பணிகளில் கடமைகளில் தாராளமாகத் தவறும், என்பதையெல்லாம் நிரூபித்தது.

எனினும் நீதிமன்றங்கள் தங்கள் கடமையை நிறைவேற்றும். நீதிமன்றங்களைக் கடமையைச் செய்திட வைத்திடலாம் என்பனவற்றில் மிகைத்த நம்பிக்கையோடு தன் நீதிக்கான போரையும் தன் எழுத்துப் போரையும் தொடர்ந்தார். அத்தோடு களத்தில் ஆதாரங்களைத் திரட்டித் தந்திட ஒரு பெரும் களப் பணியாளர் கூட்டத்தை உருவாக்கினார்.

அத்தோடு நாட்டிலுள்ள அறிவு ஜீவிகளை யும்தன்னோடு இணைத்துக்கொண்டார். இப்படி உருவாக்கப்பட்டதே CJP Citizens for Justice and Peace, April-1, 2002 இல் தொடங்கினார். குஜராத் இனப்படுகொலைகள், பிப்ரவரி 2002இல் தொடங்கி மார்ச்சு 2002இல் முடிந்தன. ஏப்ரல்-1, 2002 இந்த அமைப்பைத் தொடங்கினார்.

**வகுப்புவாதங்களைப் பற்றிய கள ஆய்வுகள்**

இந்த அமைப்பின் வழி அதாவது, நீதி அமைதிக் கான குடிமக்களின், அமைப்பு தன் களப்பணி யாளர்களைக் கொண்டு பல கள ஆய்வுகளைச் செய்தது.

இந்தக் கள ஆய்வுகள், எப்படியெல்லாம் இந்துத்துவ பாசிஸ்ட்டுகள், களத்தில் முஸ்லிம் களுக்கெதிரான வெறுப்புப் பிரச்சாரத்தைச் செய்கின்றார்கள்.

எப்படியெல்லாம் முஸ்லிம்களைப் பூண்டோடு ஒழிக்க ஆயுத பயிற்சிகளையெல்லாம், கொடுக் கின்றார்கள் என்பதையெல்லாம் கள ஆதாரங் களோடு வெளியிட்டார்.

வெளியிட்டதோடு நிற்கவில்லை அவற்றை அரசாங்கத்தின் பார்வைக்கும், உள்துறையின் பார்வைக்கும் சட்டம் ஒழுங்கை பாதுகாத்திடும் கடமையைச் சுமக்கும் அதிகாரிகளின் பார்வைக் கும் கொண்டு வந்தார். இதை அவ்வப்போது விடியல் வெள்ளி இதழிலும் பின்னர் வைகறை வெளிச்சம் இதழிலும் வெளியிட்டோம்.

இப்படித்தான் 1995 முதலே குஜராத்தில் முஸ்லிம்களுக்கெதிராக நடந்த கொடுமைகளை வரிசைப்படுத்தினார். 1998 முதலே குஜராத்தில் ஒரு பெரிய இனப்படுகொலை நடக்கப்போ கின்றது என்றொரு ஆய்வறிக்கையை வெளியிட் டார். அதனை மத்திய உள்துறை அமைச்சத்திற்கு அனுப்பி வைத்தார்.

பின்னர் 1999 டிசம்பர் இதழில், நான் எவ்வளவு எச்சரித்தும், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆனால், நிச்சயமாக ஓர் இனப்படுகொலை விரைவில் குஜராத்தில் நடை பெறும் எனக் காட்டமாகவே சுட்டிக் காட்டினார்.

அவர் சுட்டிக்காட்டியதைப்போல் 2002 பிப்ரவரி-இல் தொடங்கி மார்ச்சு 5ஆம் நாள் வரைத் தொடர்ந்தது. குஜராத் நிலவரங்களை முற்றாக அறிந்திருந்த - ஆய்வு செய்து வைத்திருந்த டீஸ்டா உடனேயே களத்தில் குதித்து, எல்லா நிகழ்வுகளையும் ஆவணப்படுத்தினார். பின்னர் பலநூறு வழக்குகளைத் தொடர்ந்தார். குஜராத் நீதிமன்றங்கள் தடுமாறியது. அந்த வழக்குகளை, மும்பை நீதிமன்றங்களுக்கு மாற்றினார். குறையா மல் சங்கப்பரிவாரத்தைச் சார்ந்த 500 பேருக்குத் தண்டனை வாங்கித் தந்தார். இது வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வு. தண்டனைப் பெற்றவர்களில் முத்தாய்ப்பாக, மயாகோடானி என்ற பெண் அமைச்சரும் உண்டு.

இவர் குஜராத் இனப்படுகொலைகள் நடந்போது முதலமைச்சராக இருந்த மோடியின் அமைச்சரவையில் பெண்கள் மற்றும் குழந்தைகள் வளர்ச்சி அமைச்சராக இருந்தார். ஆனால், முஸ்லிம் பெண்களும் குழந்தைகளும் கூட்டாகக் கொலை செய்யப்படுவதைக் கண்டும் காணாதது போலிருந்தார். முடிவு 29 வருடம் தண்டனை


யைப் பெற்றார். அத்துணைத் துல்லியமாக ஆவணங்களைத் திரட்டித் தந்தார்.

பல்வேறு எதிர்ப்புகளையும் அடி, உதைகளையும் வாங்கிக் கொண்டு, அவர் ஆவணங்களை, கொலைபாதகச் செயல்களை சாட்சிப்படுத்தும் போது, குஜராத்-இன் முதலமைச்சர் மோடி! எத்துணை இன்னல் எதிர் கொண்டிருப்பார் என்பதை எல்லோரும் யூகித்துக் கொள்ள இயலும்.

பின்னர் எல்லா ஆவணங்களையும், ஆதாரங்களையும் சீர்த்தூக்கிப் பார்க்க ஓர் நீதிபதிகள் குழுவை ஏற்பாடு செய்தார். அதில் காலஞ்சென்ற நீதி அரசர் V.R. கிருஷ்ணய்யர் அவர்களும் உண்டு.

இப்படிச் சீர்தூக்கி ஆய்வுக்குட்படுத்தப்பட்ட ஆவணங்கள் எல்லாம் பின்னர், Crime Against Activity" என்ற பெயரில் அதாவது மனித இனத்திற்கெதிரான குற்றங்கள் என்ற பெயரில் இரண்டு வால்யூம்களாக பெருந் தொகுப்புகளாக வெளியே வந்தது. உலகை உலுக்கியது.

இந்த இரண்டு தொகுப்பில் உள்ளவற்றையும் நாம் அப்போது விடியல் வெள்ளியிலும், இப்போது வைகறை வெளிச்சம் ஆகியவற்றில் தெளிவாக வெளியிட்டுள்ளோம்.



இங்கே டீஸ்டா செட்டல்வாட்டின் கைகளில் குஜராத் கலவரத்திற்குப் முன்னும் - பின்னும் என்னென்ன நடந்தன என்பவையெல்லாம் இருந்தன.

இதனால் அவரால் RSS என்ற அமைப்பைச் சார்ந்த பலரை சட்டத்தின் முன் நிறுத்திட முடிந்தது. மோடியின் கண்களின் முன்னாலயே அவர்களைச் சிறையிலும் தள்ளிட முடிந்தது. (இவற்றையெல்லாம், நாம் வைகறை வெளிச்சம் வாசகர்களுக்கு அவ்வப்போது விரிவாகத் தந்துள்ளோம்)

அதேபோல் இந்த இனப்படுகொலைகளுக்கு முன்னும் பின்னும் மோடி எங்கெங்கே இருந்தார் என்பது குறித்துத் தகவல்களையும், அவர் துல்லியமாகத் துளாவிக் கண்டுபிடித்தார்.

இவையெல்லாம் மோடியை குஜராத் 2002 இனப்படுகொலைகளுக்கு காரணமாக்கிக் குற்றப்படுத்தும், நீதியின் முன் நிறுத்தும் என பாசிஸ்ட்டுகள் பயந்தார்கள். தூக்குத் தண்டனை அல்லது ஆயுள் தண்னை அவசியம் கிடைக்கும் என்ற நிலை வந்தது.

இந்திய நீதிமன்றங்களுக்கு மோடி கும்பலை தண்டிக்கும் தைரியமிருக்காது என்பதே அனைவரும் ஒரு கட்டத்தில் உணர்ந்தனர். அதன்பின் 2004 முதல் 2014 வரை ஆட்சியிலிருந்த காங்கிரஸ் கட்சி ஊழலில் உழன்றது. இந்துத்துவாவை வளர்த்தது.

காங்கிரஸ் அரசின் ஆட்சியின்போது காங்கிரஸ் இந்துத்துவாவின் காலில் வீழ்ந்து கிடந்தது எதுவும் செய்யவில்லை என்பதனால் உலக நீதிமன்றம் கொண்டு செல்ல முயற்சியை மேற்கொண்டார். அதனை வழிமறித்தது நமது உச்ச நீதிமன்றம். நாங்களே தண்டிப்போம். ஆதாரங்களைத்தா எனக் கேட்டு வாங்கி, தட்டிக் கழித்ததுடன், அத்தனை ஆதாரங்களையும் ஒன்று திரட்டிய டீஸ்டாவையும் சிறையில் அடைத்து விட்டது. பிணை கிடைப்பதையும் கடினமாக்கி விட்டது.

**சுருங்கச் சொன்னால் நமது நீதித்துறை குற்றவாளிகளை சிம்மாசனத்தில் அமர்த்திவிட்டு, நீதியை சிறையில் அடைத்துவிட்டது.**

- MGM

# நபிமணித் தோழர்களின் பற்றற்ற வாழ்வு
# அபூதர்கிஃபாரி (ரழி)



ஹாஜி.பீ.எம்.அப்துல் கரீம்
களச்சல்

என்னுடைய தோழர்கள் வானிலுள்ள தாரகையை போன்றவர்கள். அவர்களில் யாரைப் பின்பற்றினாலும் நீங்கள் வழி தவற மாட்டீர்கள் என்பது நபிமொழி. நபி பிரானோடு எந்நேரமும் உடன் இருந்து சொல், செயலை பின்பற்றி ஒழுகிய ஒழுக்க சீலர்கள் உன்னதமான வர்கள் உத்தமர்கள். இவர்களில் எளிமையை போர்வையாகக் கொண்டு வாழ்ந்த நபிமணித் தோழரில் ஒருவர் அபூதர்கிஃப்பாரி (ரழி) ஆகும்.

மக்காவிலிருந்து சிரியா செல்லும் பாதையில் வாழ்ந்து வந்தவர்கள். கிஃப்பார் கிளையார். இவர்களின் தொழில் கொள்ளையடிப்பது. இவர்கள் அண்ணல் நபி (ஸல்) பற்றி அறிந்துவர தம்பி அனீஸை அனுப்பி விசாரித்த செய்தி திருப்தி ஏற்படாமல் தாமே நேரில் அறிய விரும்பி மக்காவில் கஃபா அருகே வந்து தங்கியிருந்தார்கள்.

ஹஸ்ரத் அலீ (ரழி) அபூதர் (ரழி)யை வேற்று ஊர் மனிதரென நினைத்து தம் இல்லம் கூட்டி சென்று உணவளித்தனர். கஃபா அருகே தொடர்ந்து இருப்பதை பார்த்து நீங்கள் வந்த வேலை முடியவில்லை போலும்யென அலீ (ரழி) வினா தொடுத்து அவர்களை நம்பிக்கை நபி (ஸல்) மீது இருப்பதை அறிந்து உங்களை நான் நபி (ஸல்) அவர்களை பார்க்க அழைத்து செல்கிறேன் எனவும், என்னோடு வரும்போது யாராவது அன்னியர் கண்டால் என்னை பின் தொடர்வதை விட்டும் தனிமைப்பட வேண்டும். நான் செருப்பை செப்பனிட முயற்சிப்பதைப் போல நடந்து கொள் வேன். பிறருக்கு உம்மை எனக்கு தெரியாதபடி ஓர் ஏற்பாட்டை நான் கையாண்டு நபி (ஸல்) அவர்களிடம் ஒப்படைப்பேன் என சொல்லி அழைத்து சென்றார்கள்.

நபி பிராணைப் பார்த்து இஸ்லாத்தில் இணைந்து இச்செய்தியை கஃபாவில் வைத்து வெளிப்படுத்தி னார்கள். இதனால் தாங்கொணா இன்னலுக்கு ஆளானார்கள். அப்பாஸ் (ரழி) தலையீட்டால் உயிர் காத்தார்கள். நபி (ஸல்) அவர்களின் ஆணைப்படி இவர்கள் கிஃப்பாரி கிளையாரை தன் வயப்படுத்தினர். பத்ர், அகழ் போருக்குப் பின் தம் கிளையாரை மதீனா அழைத்து வந்து தங்க வைத்தனர்.

நபி பிரான் இவர்களை தம் வாகனத்தின் பின்னால் இருக்கச் செய்வர். ஹள்ரத் அலீ(ரழி), மிக்தாத், அபூதர், ஸல்மான் இவர்களை அல்லாஹ் நேசிக்குமாறு எனக்கு கட்டளையிட் டுள்ளான் என நபிபிரான் சொல்லியுள்ளார்கள். அஸ்ஹா புஸ்ஸாப்பாக்களில் ஒருகூரான இவர் களை வெளியிடம் செல்லும் போது இருதடவை மதீனாவில் தம் பிரதிநிதியாக நியமித்தார்கள். இவர்களுடைய துறவு வாழ்க்கையைப் பார்த்த நபிபிரான் என்னைப் பின்பற்றுவரில் இவர் ஈசாவைப் போன்றவராவார்.

நபி பிரான் இறப்பு படுக்கையில் கிடந்தபோது இவரை வரவழைத்து அபூதர் நீர் வாழ்நாள் பூராவும் இது போன்றிருப்பீர்யெ வாழ்த்தி னார்கள்.

அபூபக்கர், உமர் தங்கள் கிலாபத்தின்போது பெரிதும் இவர்களை மதித்தனர். பத்ர் போரில் இவர்கள் கலந்துகொள்ளாத போதிலும் உமர் (ரழி) தம் கிலாபத்தின் போது இவர்களுக்கு உதவித் தொகை நல்கினர்.

இவர்கள் செல்வம் சேர்ப்பதையும் ஆடம்பர வாழ்வையும் எதிர்த்தனர். மதீனாவில் இவர்கள் தம் சமதர்ம பிரச்சாரத்தை செய்தனர். பஃரைன் கவர்னர் அபூஹூரைரா (ரழி) இவர்களை காண வந்தபோது, முதலில் சந்திக்க மறுத்தார்கள். இதற்கு காரணம் கேட்டபோது நீர்மாட மாளிகை நிலபுலன்களோடு வாழ்கிறாயென அபூஹூரைரா (ரழி)யை வினவ நான் ஆளுனராயினும் எளிமை யுடனே வாழ்கிறேன் என பதிலளிக்க அவ்வித மாயின் என் சகோதரனே என பதிலுரைத்துக் கட்டி அணைத்து இஸ்லாமிய பாசத்தைப் பொழிந்தனர்.

அபூதர்கிஃப்பாரி (ரழி) ஓர் சமதர்ம வாதியாக திகழ்ந்தார். இது ஏனைய தோழர்களோடு ஒத்து போவது கடினமாக இருந்தது. மதீனாவின்

மூன்று கல் தொலைவிலுள்ள ரப்ஸா என்ற சிற்றூரில் குடும்பத்தாரோடு சென்று தங்கினார். ஒட்டகை, ஆடு, மாடு வாங்கி அதன்மூலம் வருமானம் ஈட்டி எளிமையோடு வாழ்ந்தனர்.

ஹிஜ்ரி 32ல் நோய் வாய்ப்பட்டனர். ஊரி லிருந்து ஹஜ்ஜிக்கு எல்லோரும் சென்றதால் இவரும் குடும்பமும் தனிமைப்படுத்தப்பட்டது. இவர்கள் தாம் இறப்பதால் குளிப்பாட்டி, கபனிட்டு சாலை ஓரத்தில் வைத்து வழிப் பயணி களிடம் கூறின் அவர்கள் என்னை அடக்குவர் என கூறினார். காலமானதும், குடும்பத்தார்க் குளிப்பாட்டி வழிப் பயணிகளிடம் கூறினார். இறை நாட்டம் வழிப் பயணிகளாக மக்கா சென்ற அப்துல்லா இப்னு மஸ்ஊத் (ரழி)யும் தோழர்களும் அபூதர்கிஃபாரி (ரழி) அவர்களின் உடலை நல்லடக்கம் செய்து அபூதர் குடும்பத் தாரை தம்முடன் மதீனா அழைத்து சென்றனர். என் சமுதாயத்தில் ஈஸாவைப் பார்ப்பதானால் அது அபூதர்கிஃபாரியை பார்த்துக் கொள்ளுங் களென்ற பூமான் நபி (ஸல்) அவர்களின் சொல்லுக்கு இலக்கணமாக வாழ்ந்தார்கள் அபூதர்கிஃபாரி (ரழி)

# தமிழ்நாடு மருத்துவ கவுன்சில் சார்பில் மருத்துவரை கண்டறியும் செயலி

# இந்தியாவில் முதல்முறையாக அறிமுகம்




பொதுமக்கள் தங்கள் பகுதியில் உள்ள மருத்துவர்களைக் கண்டறிய ‘Search for doctor App’ என்ற செயலியை தமிழ்நாடு மருத்துவ கவுன்சில் அறிமுகப்படுத்தி உள்ளது. அஞ்சல் குறியீட்டு எண், பகுதியை வைத்து தேடினால் அப் பகுதியில் உள்ள மருத்துவர்கள் பட்டியல் கிடைக்கும். இதன் மூலம் பொதுமக்கள் அவசர காலங்களில் மருத்துவர்களை எளிதில் கண்டறிய முடியும். நாட்டிலேயே முதல்முறையாக தமிழகத்தில் இதுபோன்ற செயலி வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் அதிகபட்சமாக தமிழ்நாடு மருத்துவ கவுன்சிலில் பதிவு செய்யப்பட்ட மருத்துவர்கள் 1.60 லட்சம் பேர் உள்ளனர். இந்த செயலியில் தற்போது 80 ஆயிரம் மருத்துவர்கள் இணைந்துள்ளனர்.

இதுபற்றி தமிழ்நாடு மருத்துவ கவுன்சில் தலைவர் கே.செந்தில் கூறும்போது, “கரோனா காலகட்டத்தில் நிறைய போலி மருத்துவர்கள் உருவாகினர். இந்த செயலி மூலம், கவுன்சிலில் பதிவு செய்துள்ள அனுபவம் வாய்ந்த சரியான மருத்துவர்களிடம் மக்கள் சிகிச்சை பெறுவதை உறுதிசெய்ய முடியும். மருந்துகளை பரிந்துரைக்கும் செயலி, மருத்துவச் சான்றிதழ் பெறும் செயலியும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. தகவல்களைப் பாதுகாக்கும்வகையில் இவை வடிவமைக்கப்பட்டுள்ளன” என்றார்.

நன்றி - தி இந்து



# கோடையும் குழந்தைகளும்..!

**வாழ்க்கை ஓட்டத்தில் ஒரு கல்வியாண்டை கடந்து விட்டார்கள் மழலைகள். அவர்களை அனைத்துப் பகுதிகளிலிருந்தும் தாக்கிய "டென்ஷன்" (அழுத்தங்கள்) முடிவுக்கு வந்து கொண்டிருக்கின்றன.**

கோடை தன் வெம்மையைக் காட்டிடத் தொட்ங்கிவிட்டது.

மழலைகள் அதிகமான நேரம் வெளியில் விளையாடிட விரும்புவார்கள். ஆனால், அவர்களை அவ்வாறு வெளியில் வெயிலில் விடுவது முறையாகாது என்கின்றார் மருத்துவ ஆராய்ச்சியார்கள்.

அவர்கள் கடும் வெயிலில் தொடர்ந்து அதிக நேரம் விளையாடினால் சருமங்கள் பாதிக்கப் படும். தொடர்ந்து வரும் கோடைகளிலும் அவர்கள் இதையே தொடருவார்கள் என்றால் அது பயங்கரமான பின் விளைவுகளை ஏற்படுத் துமாம். அந்தப் பின் விளைவுகளுள் ஒன்றாக தோல் புற்றுநோய்க்கூட வரலாம் என்கின்றார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

ஏனெனில் மழலைகளின் தோல்கள் தொடர்ந்து கடும் வெயிலில் படும்போது, அவை பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகுமாம். அதனுடைய தாக்கம் a"Cumulative"அதாவது காலம் போக போக அதிகரித்துக் கொண்டே போகுமாம்.

இந்தக் கோடையில் ஏற்படும் தாக்கம் அப்படியே தோல்பகுதியில் தங்கிவிடுகின்றது. பின்னர் அஃது அடுத்தக் கோடையில் அதிக்கப் படுகின்றது. இப்படி கோடைக்குக் கோடை மிகைப்பட்டுக் கொண்டே செல்லுமாம். இறுதியில் அஃது ஒரு பொல்லாத நோயாகப் புலப்படுமாம்.

இந்தத் தாக்கம் வாழ்க்கை முழுவதும் இருக்குமாம். இதை இன்னும் விளக்கமாய் இப்படிச் சொல்லலாம்.

ஒரு குழந்தையின் வாழ்க்கையில் முதல் 18 ஆண்டுகளை எடுத்துக் கொள்வோம். இதில் 80 சதவிகிதம் அந்தக் குழந்தை சூரிய ஒளிபடும் படியாக இருந்தால் அஃது பிற்காலத்தில் தோல் புற்று நோய்க்கு ஆளாகிவிடும் வாய்ப்புகள் உண்டு. தேமல், தோலில் தொய்வு ஏற்படுதல், கண்களில் நிரந்தரப் பாதிப்பு என பல சேதங்களுக்கு ஆளாகலாம்.

இதனால் நாம் நமது குழந்தைகளை நேரடி யாக வெயில் படாமல் பாதுகாத்து வைத்திட வேண்டும். குறிப்பாக காலை 10 முதல் மாலை 4 மணிவரை இதைச் செய்திட வேண்டும்.

அதேபோல் கோடையில் குழந்தைகளுக்கு அணியும் ஆடையிலும் அதிகமாகக் கவனம் செலுத்திட வேண்டும்.

தலையை மறைக்கும் தொப்பி ஒன்று ஆடை அணிவகுப்பில் நிரந்தரமாக இருக்கட்டும்.

மெல்லிய வெள்ளைநிற ஆடைகள் மிகவும் பொருத்தமானவை. கறுப்பு நிறம், அதேபோல் அடர்த்தியான நிறமுடைய ஆடைகளை அணிய வேண்டாம்.

சிலர் வெள்ளை நிறத்தவர்கள் நாம் கடும் வெயிலில் பாதிக்கப்படுவார்கள் என்பது போன்ற ஒரு தவறான எண்ணத்தில் இருக்கின்றார்கள். இஃது உண்மையல்ல. கறுப்பு நிறத்தை உடைய வர்களும் சமமாகவே பாதிக்கப்படலாம்.

ஆக எந்த நிறத்தையுடைய குழந்தையாக இருந்தாலும், கடும் வெயிலில் வெளியே வரா திருப்பதே சிறந்தது.

வெயில் நேரங்களில் பால்குடி குழந்தை களுக்கு அடிக்கடி பால் கொடுப்பது அல்லது பால்குடி பருவத்தைத் தாண்டிய குழந்தைகளுக்கு பழச்சாறுகள், பாங்கான உணவு, வசதியற்றேதார் சுத்தமான தண்ணீரை அடிக்கடி பருகத்தருவது நலம். கண்ணுக்கு குளுமை தரும் கண் கண்ணாடியையும் அணியலாம்.

இப்படி நாமெடுக்கும் அனைத்து வகை எச்சரிக்கைகளையும் விஞ்சி தோல் சேதப்பட்டுப் போனால் தண்ணீரில் துணியை நனைத்து எரிச்சல் வரும் இடங்களில் சிறிது நேரம் வைக்கலாம். பின்னர் சிறியதொரு இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் தண்ணீரில் நனைந்த துணியை வைக்கலாம். இப்படி இரண்டொரு தடவை தினமும் செய்யலாம். இதையும் விஞ்சி அரிப்போ, எரிப்போ ஏற்பட்டால் மருத்துவரை அணுகுவதே சிறந்தது.

இப்படி நாம் குழந்தைகளை கோடையின் வெளியிலிருந்து பாதுகாத்திட வீட்டுக்குள் வைத் திருந்தால் தொலைக்காட்சிகளைப் பார்த்துக் கண்ணைக் கெடுத்துக் கொள்ளாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

கோடை வெயிலிலிருந்து தப்பிக்க வாய்ப்புகள் உடையோர் குளிர்ந்த இடங்களை நோக்கி பயணங்களை மேற்கொள்வார்கள்.

பாட்டாளி மக்களும், பட்டினிச் சாவுகளும் அதிகரித்து வரும் ஒரு நாட்டில், உல்லாசப் பயணங்கள் ஒரு பெரும் ஆடம்பரம் தான் என்றாலும் முடிந்தவரை செலவு குறைந்த இடங்களுக்குப் போய் வருவது சிறந்தது.

அவ்வாறு நாம் பயணங்களைச் செய்யும் போது அந்தப் பயணங்களையும் படிப்பினைகள் வருவனவாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

இறைவனும் இதையே வலியுறுத்துகின்றான்.

நாம் பூமியில் விரிந்து விசாலமாய் பயணம் செய்வதை வலியுறுத்தும் இறைவன். அவை தரும் படிப்பினைகளாகப் பின் வருவனவற்றைக் குறிப்பிடுகின்றான்.

இதற்கு முன்னால் எத்தனையோ சமுதா யங்கள் படைத்தவன் இறைவன். ஒருவன்தான் என்பதைப் புறக்கணித்தன. அனைவரையும் படைத்த இறைவன் ஒருவனே என்பதைப் பிரச்சாரம் செய்த இறைவனின் தூதர்களையும் புறக்கணித்தன. ஆணவம் கொண்டு அலைந்தன. அவையெல்லாம் இன்று மண்மூடிக் கிடக்கின்றன.

நாம் கண்டு களிக்கும் இயற்கையும், எளிலும், வணங்குகளும் அலை வெளிப்படுத்தும் வனப்பும் இறைவன் இருக்கின்றான். அவன் ஒருவன், அவனே நம்மையெல்லாம் படைத்து பரிபாலித்து வருபவன். என்பனவற்றைப் பறைசாற்றுபவை என்பதை பக்குவமாய் அவனே இந்த உலகை ஒரு முடிவுக்கும் கொண்டு வருவான். அந்த நாளே இறுதி முடிவுநாள்.

அவன் அப்போது நாம் இந்த உலக வாழ்க் கையில் செய்த நன்மைகள், தீமைகள் இவற்றின் அடிப்படையில் தீர்ப்பு வழங்குவான்.

நாம் செய்த நன்மைகள் அதிகமானால் நல்ல சொர்க்கம் கிடைக்கும். தீமைகள் அதிகமானால், நாம் இப்போது தப்பிக்க நினைத்து உல்லாசப் பயணம் மேற்கொண்டிருகின்றோமே. அதனை யும் விஞ்சும் 'கடுதழூலல்' சேருவோம்! என்பன வற்றைக் குழந்தைகளுக்குச் சொல்வோம்.

இப்போதே அவர்களை நேரான வழியில் செலுத்துவோம்!

அக்கிரமக்காரர்கள் வசித்த எத்தனையோ ஊர்களை, நாம் அழித்திருக்கிறோம். அதனுடைய முகடுகள் இடித்து குட்டிச்சுவாராகக் கிடக்கின் றன. எத்தனையோ கிணறுகள் பாழடைந்து கிடக்கின்றன. எத்தனையோ மாடமாளிகைகள் பாழாய்க் கிடக்கின்றன.

அவர்கள் பூமியில் சுற்றித் திருந்து (இவை களைப்) பார்க்கவில்லையா? (அவ்வாறு பார்ப் பார்களாயின்) உணர்ந்து கொள்ளக்கூடிய இருத யங்கள் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் அல்லது (நல்லுபதேசத்தைக்) கேட்கக்கூடிய செவி அவர் களுக்கு உண்டாயிருக்கும் (வெயில்) கண்கள் குருடாக வில்லை எனினும், நெஞ்சங்களில் இருக்கும் (அவர்களுடைய அகக்) கண்கள் தாம் குருடாகி விட்டவன் - (அல்குர்ஆன் *22:45, 46)*

மேலும் பார்க்க திருக்குர்துஆன் வசனங்கள் *40: 21. 80:82. 39:9, 35_44. 250?20* Courtersy : TNLE 25-4-2005

**- MGM**

# நாங்களும் உங்களிடமிருந்து வந்தவர்களே!

**சேர மன்னன் சேரமான் பெருமாள் இஸ்லாத்தைப் புரிந்து கொண்டு மக்காவிற்கு செல்வதற்கு முன்பே இஸ்லாம் இந்தியாவுக்கு வந்துவிட்டது என்பது ஆய்வாளர்களின் கண்டுபிடிப்பு. இஸ்லாம் நசுக்கப்பட்ட மக்களை, ஒடுக்கப்பட்ட மக்களை, தாழ்த்தப்பட்ட மக்களை கவர்ந்திழுத்து களீகரித்துக் கொள்ளக்கூடிய கொள்கையாக இருக்கிறது என்பது அறிஞர்களின் முடிவு.**

*எனது நண்பர் ஒருவர் இஸ்லாத்தை உயர் ஜாதியினர் மத்தியில் எடுத்துச் சொல்லி அவர்களை இஸ்லாத்தின் பால் கொண்டுவர வேண்டும் என்ற கொள்கையுடையவராக இருந்தார். அதற்கு நாமெல்லாம் உயர் ஜாதியிலிருந்து மதமாறி வந்திருக்கலாம் என்ற தவறான நம்பிக் கையாக இருக்கலாம் என்பது எனது அனுமானம். நான் அவரிடம் நபி (ஸல்) அவர்களைச் சுற்றி இருந்தவர்களெல்லாம் உயர் குலத்தவர்களா? என்றபோது இல்லை, இல்லை, அன்றைய சூழல் வேறு, இன்றைய சூழல் வேறு என்றார். இவருக்கு சரியான முறையில் ஆதாரங்கள் அடிப்படையில் எடுத்துக்காட்ட வேண்டும் என்று இரண்டு வருடங்கள் காத்திருந்தேன். அதற்குரிய வாய்ப்பை வல்ல இறைவன் ஆதாரப்பூர்வமாக எனக்கு வழங்கினான். (அல்ஹம்துலில்லாஹ்)*

*எனது தகப்பனார் 1908இல் பிறந்தவர். அவருடைய பிறப்பு சான்றிதழ் வேண்டி காரைக் கால் நகராட்சிக்கு விண்ணப்பித்தேன். சில தினங் களில் எனது தகப்பனார் சான்றிதழ் கிடைத்தது. எனது இரண்டு வருட கனவுக்கு ஆதாரப்பூர்வமான விடையும் கிடைத்தது. என்னை திக்குமுக்காட வைத்துவிட்டது. எனது தந்தை பிறந்த பதிவில் 5 சாட்சிகள் கையொப்பமிட்டிருந்தார்கள். முதல் சாட்சியாக எனது நண்பரின் பாட்டனார் மௌலாகனி S/o. கருப்பையா நாடார் என்று கையொப்பமிட்டிருந்தார்.*

*இதனைப் பார்த்த எனது நண்பர் அதிர்ந்து போய்விட்டார். அன்றிலிருந்து நாமெல்லாம் தாழ்த்தப்பட்ட சாதியிலிருந்து வந்தவர்கள்தான் என்பதை வலியுறுத்த "நாங்களும் உங்களிட மிருந்து வந்தவர்களே" என்று மற்றவர்களிடம் பிரச்சாரம் செய்ய ஆரம்பித்துவிட்டார். எல்லாப் புகழும் இறைவனுக்கே!*

**வைகறை வெளிச்சம்**
**ஜூலை இதழில் வெளிவந்த**

## கடிதத்தின் தாக்கம்

"வைகறை வெளிச்சம், ஜூலை 2022இல் சரிதா பாண்டே-ன் கடிதம் ஒன்றை வெளி யிட்டிருந்தோம். இந்தக் கடிதம் நமது தலைமை நீதிபதி என்.வி.ரமணா அவர் களிடம் அமெரிக்காவில் வைத்து நேரடி யாகக் கொடுத்தது. அந்தக் கடிதம் இந்தியா வில் நடக்கும் எல்லா அநீதிகளையும் பட்டியல் போட்டது.

கடிதத்தைப் பெற்றுக் கொண்ட நீதிபதி அவர்கள் கண்டிப்பாக அந்தக் கடிதத்தைப் படிப்பேன் எனக்கூறி இருந்தார்.

படித்தார், பயனுள்ள பல ஆணைகளைப் பிறப்பித்துள்ளார்-

அந்தக் கடிதம் சொல்லாமல் சொன்ன செய்தி என்னவெனில், வெளிநாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கும், இந்தியாவின் பூர்வகுடிமக்கள், இங்கே நடக்கும் பட்டவர்த் தனமான அநியாயங்களால், மிகவும் நொந்து போயிருக்கின்றார்கள் என்பது.

அதேபோல் வெளிநாடுகளில் இந்தியா வின் நீதிபரிபாலனம் பற்றி என்ன பேசப் படுகின்றது என்பதையும் எடுத்துக் காட்டு கின்றது.

**- MGM**

# குர்ஆன் இறைவேதம்

மேலும் அவர்கள் இந்தக் குர்ஆனை ஆராய்ந்து பார்க்க வேண்டாமா? அல்லது அவர்கள் இருதயங்களில் (இருக்கின்றனவே) அவற்றின் மீது பூட்டுப் போடப்பட்டு விட்டனவா? (முஹம்மது-24) (47:24)

உலகம் தோன்றிய காலம் முதல் இன்று வரை பல்வேறு விதமான மதங்களும் பல வகையிலான வேதங்களும் தோன்றியுள்ளன. ஆனால் இவைகள் அனைத்தும் காலப் போக்கில் அழிந்து போனது. இன்னும் பல மனிதர்களின் இச்சைகளுக்கு ஏற்ப மாற்றமும் அடைந்துள்ளது.

ஆனால், குர்ஆன் இறைவனால் தோற்றுவிக்கப்பட்ட காலம் முதல் இன்று வரை ஏன் இறுதிநாள் வரை எந்த மாற்றமும் அடையாது,

ஏனென்றால் குர்ஆன் இறைவனின் வேதமாகும். இதில் எந்த முரண்பாடுகளையும் மனிதர்கள் காண முடியாது. நம்முடைய அன்றாட வாழ்வின் அனைத்து பிரச்சனைகளுக்கும் குர்ஆன் வழிகாட்டுகிறது. எல்லா காலத்து மக்களுக்கும் குர்ஆன் வழிகாட்டுகிறது. குர்ஆன் எல்லா துறைகளைப் பற்றியும் பேசுகிறது.

வரலாறு, விஞ்ஞானம், மருத்துவம், கணிதம், இலக்கியம், குடும்ப விஷயங்கள், சமூகம் என எதைப் பற்றி கேட்டாலும், விவாதித்தாலும் அதற்குரிய பதிலை குர்ஆன் அளிக்கிறது. இன்னும் குர்ஆன் இந்த மனித சமூகத்தை பார்த்து தன்னை ஆராய்ந்து பார்க்குமாறு அழைப்பு விடுக்கிறது.

அவர்கள் இந்த குர்ஆனை (கவனமாக) சிந்திக்க வேண்டாமா? (இது) அல்லாஹ் அல்லாத பிறரிடமிருந்து வந்திருந்தால் இதில் ஏராளமான முரண்பாடுகளை அவர்கள் கண்டிருப்பார்கள்." (4:82) (அந்நிஸா-82)

குர்ஆன் இறைவேதம் என்ற சந்தேகம் கொள்ளும் மனிதர்களைப் பார்த்து குர்ஆன் சவால் விடுகிறது.

"இன்னும் (முஹம்மது என்னும்) நம் அடியாருக்கு நாம் அருளியுள்ள (வேதத்)தில் நீங்கள் சந்தேகம் உடையவர்களாக இருப்பீர்களானால் (அந்த சந்தேகத்தில்) உண்மையாளர்களாகவும் இருப்பீர்களானால் அல்லாஹ்வைத் தவிர உங்கள் உதவியாளர்களை அழைத்து இதுபோன்ற ஓர் அத்தியாயத்தை கொண்டு வாருங்கள்." (அல்பகரா-23)

இதை (நம் தூதராகிய) அவர் கற்பனை செய்து கொண்டார் என அவர்கள் கூறுகிறார்களா? (நபியே) நீர் கூறும் நீங்கள் (உங்கள் கூற்றில்) உண்மையாளர்களா இருந்தால் இதைப்போன்ற ஓர் அத்தியாயத்தை கொண்டு வாருங்கள். (யூனுஸ்-38)

இந்தக் குர்ஆனை போன்ற ஒன்றைக் கொண்டு வருவதற்காக மனிதர்களும் ஜின்களும் ஒன்று சேர்ந்து (முயன்று) அவர்களில் சிலர் சிலருக்கு உதவி புரிபவர்களாக இருந்தாலும் இதுபோன்ற ஒன்றை அவர்கள் கொண்டு வர முடியாது,

(பனீ இஸ்ராயில்-88)

**குர்ஆன் போன்று வேறு எந்த வேதமும் தன்னை இறைவேதமோ என்று ஆராய்ந்து பார்க்கக் கூறியது கிடையாது. குர்ஆன் போன்று வேறு எந்த வேதமும் தன்னை சீர்தூக்கிப் பாருங்கள், வாசித்து போடுங்கள் எனவே கூறியது கிடையாது. ஏனென்றால் குர்ஆன் இறைவேதமாகும்.**




# குரங்கு அம்மை பரவல் ஓர் எச்சரிக்கை

## உலக சுகாதார நிறுவன விஞ்ஞானி சவுமியா சுவாமிநாதன்

குரங்கு அம்மை பரவல் ஓர் எச்சரிக்கை மணி என்று கூறியுள்ளார் உலக சுகாதார நிறுவனத்தின் தலைமை விஞ்ஞானி சவுமிய சாமிநாதன். உலகம் முழுவதும் 75 நாடுகளுக்கும் மேல் 16 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு குரங்கு அம்மை பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் இதுகுறித்து தனியார் தொலைக்காட்சிக்குப் பேட்டியளித்துள்ளார் உலக சுகாதார நிறுவனத்தின் தலைமை விஞ்ஞானி சவுமியா சுவாமிநாதன். அந்த பேட்டியில் அவர், "குரங்கு அம்மை பரவல் நமக்கு ஓர் எச்சரிக்கை. நாம் எப்போதுமே வைரஸ் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும்.

குரங்கு அம்மையானது குரங்கு அம்மை வைரஸால் உருவாகிறது. இது ஆர்தோபாக்ஸ் வைரஸ் குடும்பத்தைச் சேர்ந்தது. ஒருவகையில் இது 1980களில் ஒழிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பெரியம்மை நோயை ஏற்படுத்தும் ஆர்த்தோபாக்ஸ் வைரஸை ஒத்த பண்புகளைக் கொண்டது.

1979, 1980களுக்குப் பின்னர் பெரியம்மை தடுப்பூசி பரவலாக நிறுத்தப்பட்டுவிட்டது. இதுவும் கூட இந்த வைரஸ் இப்போது மீண்டும் உலகில் உலா வர காரணமாகியுள்ளது.

பெரியம்மை தடுப்பூசிகளே குரங்கு அம்மைக்கு எதிராக பாதுகாப்பு நல்கினாலும் கூட குரங்கு அம்மைக்கு என பிரத்யேகமாக தடுப்பூசிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

நம்மிடம் இப்போதுள்ள பெரியம்மை தடுப்பூசிகள் எல்லாம் இரண்டாம், மூன்றாம் தலைமுறை தடுப்பூசிகள். அவையும் குறிப்பிட்ட அளவிலேயே இருக்கின்றன.

அண்மையில் டென்மார்க்கைச் சேர்ந்த பவேரியன் நார்டிக் என்ற நிறுவனம் புதிய தடுப்பூசியை உருவாக்கியுள்ளது. ஆனால் அதன் வீரியம் பற்றிய புள்ளிவிவரங்கள் இன்னும் கிடைக்கப்பெறவில்லை. அந்தத் தரவுகளை சேகரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. பவேரியன் நார்டிக் நிறுவனம் 16 மில்லியன் டோஸ் குரங்கு அம்மை தடுப்பூசியை வைத்துள்ளது. இவ்வேளையில் இந்தியா மிக முக்கிய பங்கு வகிக்கும் என எதிர்பாக்கிறேன். இன்னொரு பெருந்தொற்றை எதிர்கொள்ள ஆயத்தநிலை அவசியம். அதனால் தடுப்பூசி உற்பத்தியை அதிகரிக்கலாம்.

புனேவின் சீரம் இன்ஸ்டிட்யூட் நிறுவனம் இதை முன்னெடுத்து செய்யலாம். தொழில்நுட்ப தரவுகளைப் பகிர்ந்தால் வேறு மருந்து நிறுவனங்களையும் தடுப்பூசி தயாரிப்பில் ஈடுபடுத்தலாம். குரங்கு அம்மை கோவிட் புதிய திரிபுகளைவிட ஆபத்தானதாக இருக்குமா என்றால் அதை நேரடியாக ஒப்பிட முடியாது என்றே சொல்லலாம். குரங்கு அம்மை என்பது வேறு வைரஸ் குடும்பத்தைச் சேர்ந்தது. அது கரோனா வைரஸ் போல் வேகமாக உருமாறச் செய்யாது.

இந்நிலையில் குரங்கு அம்மை பாதிப்பு குறித்து உலக நாடுகள் உலக சுகாதார நிறுவனத்துடன் தகவல் பகிர வேண்டும். மரபணு பகுப்பாய்வு தரவுகளை உலக நாடுகள் எங்களுக்கு அனுப்ப வேண்டும். குரங்கு அம்மை இன்னொரு பெருந்தொற்றாக உருவாகமல் தடுக்க வேண்டும்" என்றார்

நன்றி - தி இந்து

# ஈத்மிலன் - பெருநாள் சந்திப்பு


















திண்டுக்கல்லில்
24-7-2022 அன்று
தாருல் இஸ்லாம்
ஃபவுண்டேஷன் டிரஸ்ட்
சார்பில்
பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சி
நடைபெற்றது. நிகழ்ச்சியில்
கலந்துகொண்டவர்களுக்கு
உணவு ஏற்பாடு
செய்யப்பட்டது.



# உங்கள் இல்லம் தேடி இஸ்லாம்



















2-7-2022 அன்று
சீர்காழி, சிதம்பரம் ஆகிய
பகுதியில் தாருல் இஸ்லாம்
ஃபவுண்டேஷன் டிரஸ்ட்
சார்பில்
இல்லம் தோறும் இஸ்லாம்
நிகழ்ச்சி நடைபெற்றது.
அதில் முன்னாள் நீதிபதி
ப. குலாம் முஹம்மது
கலந்துகொண்டார்.






Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001. Editor M. Gulam Mohamed. Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,** 19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002